சிலிண்டர் நெ. 2041

குடி அரசு

தனிப்பிரதி விலை ரூ. 0-1-0

வருட சந்தா முன்பணம் — ரூ. 3—0
மாத சந்தா ,, — ,, 1-12
வெளி நாட்டிற்கு ,, — ,, 4—0

ஞாயிறுதோறும் வெளியிடுவது.

ஆசிரியர், ம. வெ. இராமசாமி.

விளம்பரதாரர்கள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் சங்குலம் 1 க்கு ரூ. 2.
தீர்மானித்த விளம்பரத்திற்கு தனி விகிதம்

மாலை 7 | சோமவாரம், பிரஜோத்பத்தி ஐப்பசி புரட்டாசி 25 உ (11—10—1931) | மலர் 24

பலமுள்ளவீரபுருடனைக,

சுமாரனுக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் டன
மோத்துவ ழ, இல்லற, இன்பம் அனுபவிக்க, பத்தர
பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்க பஸ்பமே.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியுர், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டா
கும் இவ்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பல்ம் விலை ரூ 20. 24-நாளைக்கு ரூ 10.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கேர்ப்ப எண்ணெய்



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வலி
ற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய்
பஹிஷ்டையாகும். சொப்பசயம. இனப்பை
இதற்கிலுள்ள சகல செதைகளும் நீங்கி
கர்ப்பம் உண்டாகும். மிக்க நறுமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

குஷ்டநோய்க்கு அற்புத மருந்து.

உடம்பின் தோல் நிறம் மாறித் தோல் தடித்தல், மதமதப்பு, திமிர்தினவு, இரணம் முதலியன உண்டாகி அவயவங்கள் குறைந்து அழுகுதல் முதலிய குஷ்ட நோய்களுக்கு ஓர் சிறந்த ஔத்த மருந்து. இது தாம்பிரம், வங்கம் முதலிய கலிம்புள்ள உலோகங்களின் செந்தூர பஸ்பங்களைப்போல் கெடுதி ஒன்றும் செய்யாது. கடுமையான பத்தியமில்லை.

40-நாள் மருந்து ரூபாய் 12. 20-நாள் மருந்து ரூபாய் 7.

மதிப்புரை.

எனக்குக் கால் விரல்கள் எனமாகியும் பாதத்தில் பெரி யகுழிப்புண் உண்டாகி ஆழுகி நீர்வடிந்து கொண்டும் சுமார் இரண்டு வருஷமாகப் பலவகை இஞ்சக்ஷன்கள் செய்தும், வை த்தியங்கள் செய்தும் குணமாகாமல் மிகக் கஷ்டமடைந்தேன். சென்னைதங்கசாலைத் தெரு, தமிழ் வைத்திய சாலைத் தலைவரும் கார்ப்பொரேஷன் கவுன்சிலருமாகிய பண்டிட் ஆனந்தம் அவர் களின் அருமையான மருந்தால் என் ரணங்கள் ஆறிக்குழிப் புண்களும் நிறைப், பழைய நிலைமையை அடைந்தேன். என்னு டைய நோய் தீராதென்று என் உயிரையே வெறுத்துக்கொ ண்டிருந்தேன். பயங்கரமான என்னுடைய நோய் நீங்கி நல மடைந்தேன். என்போன்ற டலரும் போலி மருந்துகளால மோசம் போகாமல் பண்டிதர் அவர்களிடம் நோய் நீங்கிச்சுக மடையக் கோருகிறேன்.

எஸ். மாதா கிருஷ்ணன்,
18—7—31 1/75, திருப்பள்ளித் தெரு, சென்னை.

பொது ஜனங்களுக்கு எனது விண்ணப்பம்.

எனக்கு ஏற்பட்டிருந்த தோல் தடிப்பு, நிறம் மாற் றம், தினவுரணம் முதலியவைகளோடு கூடிய குஷ்டநோய் குச் சென்னை பண்டிட் ஆனந்தரின் அற்புத மருந்தைச் சாப் பிட்டு கொடியநோய் அறவே நீங்கி வலிவும் அழகும் அடைந் திருப்பதை மிக மகிழ்ச்சியுடனே அறிவிக்கின்றேன்.

இனியேனும் என்போன்ற நோயாளிகள் போலி மரு ந்துகளை அருந்தி மோசம் போகாமல் பண்டிட் ஆனந்தரின் அரிய மருந்துகளை உண்டு அறவே நோய்கள் நீங்கி தேகபலத் தோடும் பலத்தோடும் வாழ வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
பி. டி. சுந்தரம்,
61, படைவேட்டம்மன் கோவில் வீதி,
18—7—31 புரசவாக்கம், சென்னை.

தந்தி விலாசம்:—"மருத்துவன்."
டெலிபோன் நெ. 2584.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்,
தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்

லப் இன்ஷியூரன்ஸ்

LIFE INSURANCE.

இன்ஷியூரன்ஸ் என்பது கூட்டுறவினாலுண்டாகும் பாதுகாப்பு என்று சொல்லலாம்.

சாதாரணமாக தபாலாபீஸ் மூலம் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் பார்ஸல் செய்தனுப்புகிற விலை பெற்ற சாமான்களும் கரன்ஸி நோட்டுகளும் சர்வ ஜாக்கிரதையுடன் கொண்டு போய்ச் சேர்க்கப் படுகின்றன. எவ்விதத்திலும் கெட்டுப் போவதற்கு மார்க்கமே யில்லை. இருந்தாலும் எதிர்பாராத காரணங்களால் ஒரு வேளை கெட்டுப் போனாலும் அதனால் ஜனங்கள் நஷ்டமடையா திருக்கும் பொருட்டு ஒரு சிறு கட்டணம் பெற்றுக் கொண்டு தபாலாபீஸில் இன்ஷியூரன்ஸ் செய்கிறார்கள். இதனால் என்ன ஏற்படுகிறதென்றால் சாமான் கெட்டுப் போனாலும் அதற்கு உடையவர் நஷ்டமடையாமல் தபால் இலாகாதார் இன்ஷியூர் செய்திருக்கிற அளவுக்கு நஷ்ட ஈடுகொடுக்க உத்திரவாதம் செய்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

இதே மாதிரியாக பலவகையான இன்ஷியூரன்ஸ் தொழில் நடத்தும் கம்பெனிகளும் பல இருக்கின்றன. அவைகளுள் லப் இன்ஷியூரன்ஸ் என்பது ஆயுளை இன்ஷியூர் செய்வது. பொதுவாக மனிதர்கள் 100 வயது வரை வாழ்ந்திருக்கக் கூடுமானாலும் தற்காலத்தில் நகரங்களிலும் கிராமாந்திரங்களிலும் இருக்கிற சிக்கேடான சுவாதாரத்தாலும் பல கொடிய தொத்து வியாதிகளாலும் காலுக்கு நான் மரண விதம் அதிகரித்து வருவதை பார்க்கிறோம். அகால மரணத்தால் எத்தனையோ குடும்பங்கள் நிலைகுலைந்து தவிக்கும்படி நேரிடுகிறது. உயிருக்குயிரான மனைவியையும் அருமையான குழந்தைகளையும் அலையவிடாமல் பாதுகாக்க வேண்டியது ஒரு குடும்பத் தலைவனுடைய முக்கியமான கடமையல்லவா? அக்கடமையைச் செய்ய ஒரே ஒரு வழிதான் உண்டு. அது தான் லப் இன்ஷியூரன்ஸ், ஆயுளை இன்ஷியூர் செய்தல்.

இன்ஷியூரன்ஸ் செய்திருப்பவர் ஒருக்கால் அகால மரணத்துக்குள்ளானால் அவர் செலுத்தியிருக்கும்கொகை எவ்வளவு அற்பமாக இருந்த போதிலும் அதைக் கவனிபாமல் இன்ஷியூர் செய்திருக்கிற பூராத் தொகையும் கொடுக்கப் படுகிறது. பெருத்த ஆஸ்தியை சேர்த்து வைக்க முடியாவிட்டாலும் ஒரு குறைந்த தொகைக்காவது லப் இன்ஷியூரன்ஸ் செய்திருந்தால் தக்க பாதுகாப்பு ஏற்பட்டு விடுகிறது. இதைப் போன்ற ஜனோபகாரமான காரியம் வேறே இல்லை. உலகத்தில் எவ்வளவோ ஜனங்கள் இன்ஷியூர் செய்து வருகிறார்கள். அதனால் எவ்வளவோ குடும்பங்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் எத்தனையோ பேர்கள இன்ஷியூரன்ஸ் செய்ததினாலுண்டான லாபத்தின் நிமித்தம் பிழைத்து வருகிறார்கள். எத்தனையோ குடும்பங்களுக்கு இன்ஷியூரன்ஸ் செய்திருந்ததினால் கிடைத்த பணமே ஆஸ்தி. இந்தப் பணம் கிடைத்திராவிட்டால் அனேகம் பேர்கள் சோற்றிற்கு திண்டாட வேண்டியதாக இருந்திருக்கும்.

மேலும் இன்ஷியூரன்ஸ் செய்தால் அதன் பிரயோஜனம் தனக்குப்பிற்காலந்தான் என்று யோசிக்க வேண்டியதில்லை. ஒருவன் எந்த சமயத்தில் வேண்டுமானாலும் அதன் பலனை அடையலாம். எல்லா வேலையிலும் பெண்டிருந்தான் கிடைப்பதில்லை. எல்லா வியாபாரத்திலும் எப்பொழுதுமே லாபம் கிடைப்பதுமில்லை. ஆனையால் தனவந்தராலும் ஏழையாலும் உயிரோடு மாத்திரம் இருந்தால் வேலை செய்ய முடியாத காலத்தில் தனக்கும் தன்னுடைய குடும்பத்துக்கும் தகுந்த பாது காப்பைத் தேடி வைப்பதற்கு லப் இன்ஷியூரன்ஸ் தான் உத்தமமான மார்க்கம். உடனே முந்துங்கள்.

விபரங்கள் வேண்டுபவர்கள் கீழ்கண்ட விலாசங்களுக்கு எழுதவும்:-

பிராஞ்சு காரியதரிசி.

ஓரியண்டல் கவர்ன்மெண்ட் ஸெக்யூரிடி லஸட் அஷ்யூரென்ஸ் கம்பெனி, லிமிடெட்.

10-சின்னக் கடை வீதி, தெப்பக்குளம் போஸ்டு,

திருச்சிநாப்பள்ளி.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பத்திரிகை.

ஆசிரியர்:- சொ. முருகப்பா.

உள்நாடு மாத சந்தா		ரூ. 1—2—0
தனிப்பிரதி	... ...	ரூ. 0—0—6
வெளிநாடு வருட சந்தா		ரூ. 18—0—0
ஆறுமாதம்	...	ரூ. 10—0—0

மானேஜர்

'சண்டமாருதம்'

திருச்சிநாப்பள்ளி.

25 அத்தியாயங்கள் 50 சித்திரப்படங்கள்

200 பக்கங்களடங்கியது.

ஸ்டீம் இன்ஜின்களிலும், ஹைட்ராலிக் முறைகளிலும், ஆயில் இன்ஜின்களிலும், மின்சார சக்தியிலும், காசோலின் மோட்டார்களிலும், 30 வருஷ அனுபவமுள்ள

ரா. கண்ணியப்ப நாயக்கர் அவர்களால் இயற்றப்பட்ட

மோட்டார் கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபவப் பயிற்சி முறையும்

இப்புத்தகம் தற்கால நிலையையும், முறையையும், அனுசரித்து, மோட்டாரின் ஒவ்வொரு இயந்திர பாகங்கள், அவற்றில் எற்படும் தவறுகள் முதலியவற்றை எளிதில் அறிந்து, மோட்டார் சொந்தக்காரர்களும், டிரைவர்களும், பிறர் உதவியின்றி தாமாகவே பிரித்துப் பழுது பார்த்துச் சரிப்படுத்திக் கொள்வதற்கும் விசேஷ உதவியானது. இது வரை ரகசியமாயிருந்து வந்த பல அரிய நூற்பங்களை 25 பாகங்களாக 50 படங்களுடன் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தைச் சர்க்கார் இஞ்சினீர்கள் 14 பேர்களும் அநேக நிபுணர்களும் பாராட்டி, சர்டிபிகேட்டு கொடுத்திருப்பதே இதன் மேன்மையையும் உபயோகத்தையும் விளக்கும்.

விலை ரூபா 2-0-0

கிடைக்குமிடம்:-

குடியரசு புத்தகசாலை, ஈரோடு.

சுயமரியாதை தலைவர்

போட்டோ படங்கள்.

சுயமரியாதைத்தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் போட்டோ படம்

6½ x 4¾ காப்பி 1-க்கு 0—9—0

டஜன் 1-க்கு 6—0—0

8½ x 6½ காப்பி 1-க்கு

தபால் செலவுடன் ரூ. 1—4—0

வெளிநாட்டுக்கு ,, 1—8—0

உள். ஷே டஜன் 1-க்கு

தபால் செலவுடன் ரூ. 15—0—0

6½ x 4¾ காப்பி 1-க்கு

வெளிநாட்டுக்கு தபால்

செலவுடன் ரூ. 0—13—0

மற்ற தலைவர்களுடைய படங்களும் கிடைக்கும்.

ஒருகாப்பி வேண்டுவோர் 11 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் 12 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

பாலு & Co.,

ஓரியண்டல் போட்டோ ஹவுஸ்,

46வ கோர்ட் வீதி, ஈரோடு.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சிக்கனம்.

ஆயிரமாகாணி-அறுபத்திரண்டரை.

(ஈகவல்யும்)

எல்லா நாட்களிலும் பொருள் நெருக்கடி உண்டாயிருப்பது போலவே நமது தேசத்திலுமுண்டாயிருக்கிறது அதற்காக நமது அரசாங்கத்தார் சிக்கனம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் சிக்கனமானது அவ்வில மலிந்திருக்கும் இக்காலத்தில் வயிராரச் சாப்பிட்டு தொழுது குமாஸ்தா, உபாத்தியாயர்கள் இவர்கள் வயிற்றுக்கு நேரே குறிபார்க்கப்படுவதுபோல வீண்டம் பத்தையும், ஆடம்பரத்தையும் காப்பாற்றிக்கொள்ளுவதே பெரும் பகவியாயம் என்னும் எஜமான்களுடைய எந்தத்திலிலும் சிக்கனக்குறி செல்லவில்லை இதை எப்படியோ இருக்கட்டும்.

"பின்னேயாரைப்பிடித்த சனிகுருக்களையும்பிடித்து, ரூபிடவர்களையும் பிடித்துக்கொண்ட" தென்பதுபோல எங்கேயோ இழுத்த வானம் நமது ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் குமுறுகிறது. அதற்கு எங்ஙனமான மூடுக்கொடுக்கலாமென்கிற ஆலோசனை எல்லார் உள்ளத்திலும் தோன்றிவிட்டது. எந்த ஆலோசனையும் உபயோகப்படவேண்டுமானால் சிக்கனமென்னும் முறையைக் குடும்பத்திலேவன் குடும்பத்திற்குள் கொண்டுபோய்விட்டு குடும்பத்தார்களும் எற்றுக்கொண்டார்களானால், எத்தனை வானம் சேர்ந்து அவர்கள் தலைக்கு மேல் குமுறினாலும் அவர்கள் தலை ரோமத்தைக்கூட தொடாது. அவ்வளவு நன்மையோடும் சக்தியோடும் கூடின சிக்கனத்தை ஆலோசித்துப் பார்ப்போம்.

வரவுக்குத் தகுந்த செலவுசெய்வது சிக்கனமாகாது. செலவைக்குறைத்து கூடுமானவரையிலும் மிச்சப்படுத்துவதே சிக்கனம். வந்தச்செலவைக்குறைத்தல் என்பதற்கு பதில் வேண்டும். "கடன்கொண்டு வாழாமை முன்னினிதே" என்று சொல்லுவது நியாயம்தானே? "கடன் கொண்டும் செய்குதல் செய்தலினிதே" என்று சொன்னதும் அலட்சியம் தானே? எதற்குக் கடன்படவேண்டும்? எதற்குக் கடன்படக்கூடாது? என்பதை ஆலோசித்துப் பார்க்கையில் விசாரித்தறியும் புத்திக் தெளிவாகக் காட்டிலுமும், நிடம்பெற்றிருக்கும் சக்தியிலேபல் அவ்விரண்டினுக்கும் மத்தியில் நிடப்பதைத் தொந்துகொள்ளுவது பிரயோஜனமில்லை பணக்காரனுக்கும் ஏழைக்கும் சிக்கனத்தின் கருத்து ஒன்றேயாகும்.

பணக்கார இளைஞர்கள் முன்னோர் தேடிய பணத்தை இஷ்டம் போல் செலவுசெய்து அவதிப்படுகிறவர்களைப்பார்த்து பணமிருக்கும் பாலியர்கள் சிக்கனத்தைத் தெரிந்துகொள்ளட்டும். டம்பமின்மையில் அயலாருக்குதவவேண்டுமென்ற நம்பிக்கையை விட்டு ஆடம்பரத்தில் செலவுசெய்து அவமதிக்கப்படுகிறவர்களைப் பார்த்து ஆயிரம இரண்டாயிரம் சம்பாதிக்கும் பணக்காரனும் தெரிந்துகொள்ளட்டும். தங்கள் ஜனங்களின் ஆத்மார்த்திக முன்னேற்றத்திற்கு ஆனாகிவிடுகின்றன. அவ்விதவலியாணத்தையும் வீடு கட்டுவதையும் விட்டு ஒரு நல்ல கலியாணம், தகுந்தகுந்த சாமக்கிரிகைகள், பலழுலேட்டைப்பழுதுபார்த்துக்கொள்ளுவது ஆகியவைகளில் காரியத்தை நிறுத்திக் கடன்படாமலிருப்பதே சிக்கனமாகும். இழியாதகேவ்டி ஒழுகாத வீடு, குடோடு கூடின சாப்பாடு, இவைகளில் திருப்திப்படவேண்டும். இவைகளில் பெருக்கத்திற்கு ஆழிழ்டவும், வாழவும் வேண்டாமென்ற சிக்கனம் சொல்லாது. நிலுவையை கவனித்து சிக்கனத்தைக் கையாளவேண்டுமென்பதே சிக்கனமென்பதின் கருத்து. சிக்கனத்திற்கு நிம்மாசனம் திருப்தி.

அவசியமில்லாததைத்தவிர சிக்கனத்தைக் கைகொள்ளவேண்டியவை எவை? எப்படை கவனிப்போம். பல துளி பெருவெள்ளம். கடுகு அறைத்தால் மொத்தை. 'ஆயிரமாகாணி அருபத்திரண்டரை' என்பது போல காலணாக்காப்பி குடிப்பதும், சிகரட் குடிப்பதும் வருடத்தில் 90 ரூபாய் ஆகிவிடும் என்பதை அறிந்த அந்த சிக்கனமே முதலாகும். அவனையே காளடைவில்ஆயிரம், இரண்டாயிரம் கொடுக்கல் வாங்கல் செய்யும் யோக்கியதைக்குக் கொண்டுவந்து விடும். சொற்பத்தொகை காளடைவில் பெருக்தொகையாய்த் திரண்டு போவதுடன் எப்பொழுதும் காணயத்வதயும் காப்பாற்றும். ஆடையில்லாத மனிதர்கள் எங்கிருந்தாலும் நமக்கு ஆடையும், ஆகாரமும் வேண்டும். வாகரும் ஆடைகளைப் பத்திரப்படுத்துவதுடன் சிறுது பின்னப்பட்டால் பழுது பார்க்கவும் வேண்டும். அமெரிக்கா லோகப் பணக்காரரான ராக்பெலர் ஒரு ஏழைக்குப் பழைய பூட்ச கொடுத்தார். கொடுக்கையில் இதைப்பழுது பார்த்தால் இனியும் இரண்டு வருடத்திற்கு வருமென்று சொன்னாராம். லட்சக்கணக்கான பவுன் தருமமாகக் கொடுத்த அவரை உலோபியென்று சொல்ல முடியாது. நமது நாடு உஷ்ணமுடையதானதினால் அதிகமான ஆடைகள்வேண்டியதில்லை. குழந்தை பிறந்ததிலிருந்தே சொக்காய் போட்டுவைப்பதும் வழக்கத்தை நிறுத்தவேண்டும். மழை, பனி, குளிர்களும், வெய்யில், காற்று, இவைகளின் உஷ்ணங்களும் தேகத்தில் பட்டு தேகம் இயற்கையை சுவீகரிக்கும்படி வளர்க்கப்பட்டால் மாச்சளியும், அடிக்கடி காய்ச்சலும் வருவதில்லை. ஏப்பொழுதும் சொக்காய்ப்போட்டு வளர்க்கும் பிள்ளைகளிக் உடம்பில் சில அசர்ந்தர்ப்பங்களில் சொக்காய்இல்லாவிட்டால் உடனே மார்ச்சளிபோ, காய்ச்சலோ வந்துவிடுகின்றன. சொக்காய் இல்லாமல் வளரும் கிராமத்துப்பிள்ளைகளைவிட, நகரத்துப்பிள்ளைகள் தேகக்கட்டிலோ, சமர்த்தலையிலோ விசேடப்பட்டதென்று சொல்லமுடியாது. ஆனதால் அவசிய

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

கல்வியும், மதமும்.

(Dr. R. P. பராஞ்சிபே எழுதிய புத்தகத்தில் காணப்படும் சாரம்.)

[சென்ற வாரத்தொடர்ச்சி]

மத சகிப்புத்தன்மையும், துவேஷமும்.

மதத்தைக் குறித்த விஷயங்களிலும், இம்மாதிரியாகவேதான், அவைகளைத்தெரிந்து கொள்ள ஆசைப்படும் குழந்தைகளின் இச்சையானது அடக்கப்படும், நிந்திக்கப்பட்டும் அடியோடு ஒழிக்கப்பட்டும் வந்திருக்கின்றது. குழந்தைகள் யாவருமே அநேகமாக கண் மூடித்தனமாகவும், முன்பின் யோசனையில்லாமலும் அநேக காரியங்களைச் செய்வதற்கு பழக்கப் படுத்தப்பட்டிருக்கின்றார்கள். இத்தகைய செய்கைகளின் உண்மையான கருத்துக்களை அக்குழந்தைகளுக்கு விளக்கவைப்பதே கிடையாது. அநேகமாய் பயிற்றுவிப்பவர்களுக்கும் தெரியாது. உதாரணமாக, பிரார்த்தனைகளென்பவைகளை எடுத்துக் கொள்ளுவோமானால் இந்தப் பிரார்த்தனைகளும், ஜபங்களும் தங்களுடைய தாய்ப்பாஷைகளிலிருந்த போதிலும் கூட-இந்தியாவிலும் சரியே, அல்லது உலகிலுள்ள ஏனைய பாகங்களிலும் சரியே இவைகள் பெரும்பாலும் தாய் பாஷைகளிலில்லை-அவைகளின் யாசகப்போக்கு அதாவது நடைகள் சுலபத்தில் அறிந்து கொள்ள முடியாத விதத்தில்தான் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால் அவைகளை மனப்பாடம் செய்து சொல்லும் படியாக நாம் குழந்தைகளுக்குக் கட்டளையிட்டால் அவ்விபரீத வார்த்தைகளின் அருத்தத்தை அறிந்து கொள்ள முடியாத குழந்தைகள் யாவரும், தங்கள் மனப்போக்கின்படி, தங்களுக்குத் தோன்றிய ஏதாவதொரு அர்த்தத்தை அவைகளுக்கு ஏற்படுத்தி வைத்துக் கொண்டோ, அல்லது அர்த்தத்தில் கவலை இல்லாமலோ தான் அவைகளை ஒப்புவிக்கிறார்கள். உதாரணமாக, நமது சொந்த அனுபோகங்களிலிருந்தே பரிகாசத்தை விளைவிக்கத் தக்கதான இத்தகைய எண்ணிறந்த ஆபாசங்களை எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக் காட்டலாம். மேலும் இறந்து போன அதாவது பழக்கத்தில் இல்லாத, மாஜி பாஷையிலிருக்கக் கூடிய பிரார்த்தனைகளை குழந்தைகளும் அறிந்து கொள்ளாமல், நாமும் அறிந்து கொள்ளாமல், நமது குருவும் சரியானபடி அறிந்து கொள்ளாமல் உரைக்கும்படியான ஓர் சந்தர்ப்பம் நேரும் போது நினைத்துப் பார்த்தால் இத்தகைய குற்றங்கள் ஒவ்வொருவருக்கும் தானாகவே விளக்கும்.

வார்த்தைகளை உச்சரிப்பதனாலேயே ஏற்படக்கூடிய சப்தமானது குழந்தைகளுக்கு சுத்த ஆபாசமான கருத்தை விளைவிக்கின்றது. மேலும், புரோகிதத் தொழிலினால் தங்களுடைய ஜீவியத்தை நடாத்தும் புரோகிதர்களும், குருமார்களும் கூட குறித்த ஓர் சந்தர்ப்பத்திற்கு உபயோகிக்கத் தகாத சமஸ்கிருத தியாகசுலோகங்களை சில சமயங்களில் உபயோகித்துக் கொண்டு வருவதையும், அவைகளைப் பாடிக் கொண்டு வருவதையும் நாம் இன்னும் காணலாம். சில சந்தர்ப்பங்களில் அசகியமானதும், வெட்கங் கெட்டதுமானமொழிகளை உச்சரிப்பதானுண்டாகக் கூடிய சிரைக்கா விட்டால் அது ஒருபெரிய தொனியைப் போலவே, அப்பழுக்கு மொழிகளை உச்சரிப்பதாலேற்படக் கூடிய சம்பவமானது குழந்தைகளின் மனதில் நாம் எதிர்பார்த்திருந்ததற்கு நேர் விரோதமான மனப்பான்மையை உண்டாக்குவதையும் நாம் காணலாம்.

மதத்தினால் தான் மக்களின் மனதானது பரிசுத்தமடையும் என்பதாக எவ்வளவு தான் வர்ணித்து, வர்ணித்து வெகு அலங்காரமாகச்சொல்லப்பட்ட போதிலும் கூட, மதமானது பொதுவாகவே போதுமான அறிவும், ஞானமும் இல்லாமல் ஆண்களையும், பெண்களையும் கண்மூடித்தனமாக அவரவர்களுடைய சமூகப் பழக்க வழக்கங்களுக்கும், ஆச்சாரங்களுக்கும் அடிமையாகியேநடந்துதீரவேண்டியதான ஓர் நிர்ப்பந்தத்தை உண்டாக்கியே தான தீருகின்றது. ஆகையினால் மதக்கட்டளைப்படி ஒரு குழந்தை நடக்க வேண்டு மென்று கருதி அதற்கு கற்பித்தோமேயானால் அது இம்மாதிரியான குருட்டுப் பழக்க வழக்கங்களுக்கும் மூட நம்பிக்கையான ஆசாரங்களுக்கும் கட்டுப் பட்டுத்தான் தீரும். இதன் பயனாக அக்குழந்தை தனது பிற்கால வாழ்வில் எது முக்கியம்? எது பிரதானம்? அல்லது எத்தருணங்களில் எது கூடாது? என்பதைக்கூட அறியமுடியாமல் போய்விடுகின்றது. மேலும், மற்றும் சில சமயங்களில் தங்களுடைய மதக் கட்டுப் பாட்டின்படி அவர்கள் நடந்து கொள்ள ஆரம்பிக்கும் போது அச்செய்கையானது மற்றவர்களுக்கு எவ்விதமான வெறுப்பை விளைவித்த போதிலும் கூடஅது இவர்கள் மனதுக்கு நன்மையாகவே காணப்படுகின்றது.

உதாரணமாக, இங்கிலாந்து தேசத்தில் மாலை வேளைகளில் கடைபெறக் கூடிய ஒருசாப்பாட்டு விருந்துக்கோ, அல்லது ஒருநிமிஷத்துக்கோ ஒருவன் குடித்து விட்டு வந்து அக்கூட்டத்தில் கலந்து கொள்ள வெட்கப்படுவிட்டாலும் கூட வெள்ளை சட்டை தரித்துக் கொண்டு கருப்பு கோட் (கழுத்துத் துணி) அணிந்து கொண்டு அக்கூட்டத்திற்கு வந்து கலந்து கொள்ள வெட்கப்படுவான்.

அது போலவே சமீப காலம் வரையிலும் இந்தியாவிலுள்ள கிராமங்களில் வசம் செய்யும் ஓர் இந்துவானவன் தன்னுடைய தகப்பனார் மரணமடைந்து விட்டால் அவனுடைய மீசையை உடனே சிரைத்து விட வேண்டுமென்றும், அப்படி செய்யாவிட்டால் அது ஒருபெரிய மகத்தான பாவமெனவும் கருதப்பட்டு வந்தது. ஆனால் ஒரு மகன் தன்னுடைய தந்தையுடன் தினந்தோறும் சண்டைகளும், சச்சரவும் செய்து கொண்டும் அவருக்கு வேண்டிய வசதி செய்யாமலும் தகப்பனாருடைய வாழ்நாள் முழுதும் சதா துக்கத்திலேயே ஆழ்ந்திருக்கும்படியாகச் செய்து வந்தவனை இருந்த போதிலும் கூட அச்சொற்ப மயிரான் எல்லாம் அவ்வளவாகப் பொருட்படுத்தப்படாமல் தகப்பன் இறந்த உடன் மகன் மீசையை சிரைக்காதிருந்ததே பெரிய தப்பிதமாகவும் பாவமாகவும் பொதுஜனங்களால் கருதப் பட்டு வந்தது. இத்தகைய சம்பவங்களால் சூழப்பட்டு இவைகளுக்கு மத்தியில் பிறந்து வளருகின்றபடியான ஒரு குழந்தையானது இம்மாதிரியான அபிப்பிராயங்களையும் எண்ணங்களையும் தான் இயற்கையாகவே கிரகித்துக் கொள்ளுமே தவிர, அறிவு பெறுவது எப்படி சுவிடமாகி விடுகிறது. ஆகையினால் குழந்தைகளின் அறிவு விசாலப்படுவதற்கான துறைகளில் அவைகளைப் பயிற்றுவிப்பதற்கான மார்க்கங்களினால் நடாத்திக் கொண்டு செல்லவும், தாண்டிகோலாயிருக்கும்படியானதுமான முறைகளிலேயே அவர்கள் பழக்கப் படவேண்டும். ஆனால் மதத்தைப் பற்றிய கல்வியும், அறிவும் மக்களுக்கு அவசியம் போதிக்கப்பட்டுத்தான் தீர வேண்டுமென பிடிவாதம் செய்யும்மதப் பிரசாரகர்கள் மத பக்திக்காரர்களெல்லாம் ஒரு சமயம் தங்கள் பிடிவாதங்களில் வெற்றி பெற்று விடுவார்களேயானால் அதாகாரீகமானதும், மூட நம்பிக்கையுள்ளதுமான கொள்கைகளிலிருந்து மக்கள் விடுதலையடைந்து, சுதந்திரம் பெறவேண்டுமென நினைத்துப் போராடிக்கொண்டிருக்கும் இந்திய சீர்திருத்தக்காரர்களின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டதில் வெற்றி பெற்றவர்களாவார்களே தவிர மற்றபடி அவர்களால் மனித சமூகத்திற்கு எவ்வித நன்மையும் ஏற்பட்டுவிடாது.

எல்லா மதங்களினுடையவும் பிரதான தத்துவமென்ன வென்றால், அவைகள் ஒவ்வொன்றும் தன் தன் மதங்கட்டுப்பாடுகளை உண்மையையும், அதுவும் எல்லா விஷயங்களினுடைய, அதுவும் வடிகட்டின பரிசுத்த உண்மைகளே தானாகவும், ஒன்றுக்கு மைத்திருப்பதாகவும், அவ்வுண்மைகள் யாவும் தனக்கே ஒருவருக்கே மட்டுந்தான் சொந்த மென்றும் வாதித்துக்கொண்டும் வருகின்றதேயாகும். இவ்வாறு தங்களுடையமதத்துக்குத்தான் சொந்தமெனப்போராடும் மேற்படிகன்மையானது, அன்னிய மதங்களின் மீது துவேஷத்தை வளர்ப்பதற்கு ஓர் அதிருதியாகவும், தூண்டு கோலாகவும் இருந்து கொண்டு வருகின்றது. ஆனால் இப்பொழுதுதான், அதாவது தற்கால உலகினில் தான் எதோ சில அறிவாளிகள் மததுவேஷமின்றியிருக்க வேண்டுமென்றும், மதங்களில் சகிப்புத் தன்மையிருக்க வேண்டுமென்றும் யோசிக்கின்றார்கள். என்றாலும் மற்றொரு பக்கத்தில் மதம் மக்களுக்கு கண்டிப்பாய் இன்றியமையாததெனவும், ஒவ்வொருவரும் அதை அறிந்தே இருக்கவேண்டுமெனவும் சொல்லிக்கொண்டும், எல்லோருக்குமே குழந்தைகளாயிருக்கும் பொழுதே அன்னிய மதங்களின்மீது துவேஷத்தை உண்டாக்கிக்கொண்டும் அத்துவேஷத்தை வளர்த்துக் கொண்டுவரும்படிக்கும் ஏற்படுத்தி விடுவதே மதம் பிள்ளைகளுக்குச் சரியானபடி போதிக்கப்பட்டதாகும் என்று கருதப்பட்டு பலவந்தமாகவே போதிக்கப் படுமேயானால், மதத்தில் சகிப்புத்தன்மையும், மததுவேஷமற்ற தன்மையும் எப்படி ஏற்படும்? ஆனால், இதற்கு மாறாக நாளாக நாளாக குழந்தைகள், தங்களுடைய சமூகசம்பந்தமான கட்டு திட்டங்களுக்குட்படாத ஏனைய மதஸ்தர்களை கேவலமாகவும், இழிவாகவும் நினைக்கும்படியாகத்தான் செய்ய முடியும்.

இதுதகைய சம்பவங்களால், அதாவது குழந்தைகளுக்கு மதம் போதிப்பதால் உண்டாகக்கூடிய கேடுகளானது முக்கியமாய் இந்தியாவுக்கு ஓர் பெருத்த இடையூறாகவேயிருந்துகொண்டு அபாயத்தையே விளைவித்துக் கொண்டிருக்கும் எனெனில், இந்தியாவிலுள்ள குழந்தைகள் பெரும்பாலும் தங்களுடைய சஜாதி மக்களுடனேயே நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொள்ளுவதால், ஏனைய மற்ற ஜாதியினரின் மக்களின் மீது தப்பெண்ணங்கள் கொண்டு, அவர்களை தவே வதிபவதற்குரிய சாதனங்களாகவே நற்குணிக்க அனுகூலமாயிருக்கின்றன. இம்மாதிரியான தப்பெண்ணங்களாலேற்படக்கூடிய துவேஷத்தையும், வெறுப்பையும் நாம் மதத்தினால் ஏற்படக்கூடிய முறைகளெனக் கூறி அக்குழந்தைகளின் மனதில் பதியும்படி செய்வோமேயானால், அப்பொழுது இக்தப்பெண்ணங்களும், துவேஷ புத்தியும் அவர்களுடைய மனதில் இன்னும் பதிவுமடங்கு அழுத்தந்திருத்தமாகப் பதியப்படும், நிலைநாட்டப்படுகின்றன.

மதத்தின் பேரால் மக்களுக்குச் சதாரணமாக போதிக்கப்பட்டு வருபவைகளால், பொது வாழ்க்கையிலுள்ளவர்களால் யாதொருவித பிரயோஜனத்தையுமடைய முடியவில்லை யெனக் கூறப்படுவதானது உண்மையேயாகும். எனெனில், இம்மாதிரியான

[தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க

கம்யூனிஸம்.

சோஷியலிஸம்.

சமதர்ம அறிக்கை.

(சென்ற வாரத்தொடர்ச்சி.)

அதின் பயனுப் அதற்கு முன் எற்பட்டிருந்த ஜமீன்தாரன், விவசாயபண்ணை ஆள் என்ற வகுப்புகள் மாறி, வியாபார பெருக்கத்தின் மூலம் புதியமாதிரியில் வகுப்புப்பிரிவினைகள் திருத்தி அமைக்கப்பட்டன. பழைய ஏற்பாட்டின்படி கைத்தொழிலானது சிறுசிறு தொழில் பட்டரைகளில் இரகசியமுறையாய் தொழில்கள் செய்யப்பட்டு வந்ததால், உலகத்தின் பலபாகங்களுடனும் வியாபாரத்திற்கு வேண்டிய சரக்குகளை தொழிலாளர்களால் ஏராளமாய் உற்பத்திசெய்யமுடியவில்லை. இப்போது வியாபார பெருக்கத்தின் காரணமாக, சாமான்களை பெருவாரியாக உற்பத்திசெய்ய வேண்டி இருப்பதால் தொழில் தெரிந்த மேஸ்திரிகள் மூலம் நடைபெற்றுவந்த சில்லரைப்பட்டரைகள் மறைந்து, பணம் படைத்த முதலாளிகள் மூலமாக பெரியபெரிய தொழிற்சாலைகள் ஏற்படவேண்டியதாயிற்று. இந்த முறையில் தொழிற்சாலைகள் வரவர வளர்ந்துகொண்டே வந்தது. சாமான்களும் அதிகரித்தது. அதிகமான சாமான்களை உற்பத்தி செய்வதற்காக முற்போக்கான இயந்திரங்களைக் கண்டுபிடித்து அமைக்க வேண்டியதாயிற்று. பிறகு அவற்றிற்கு நீராவி சக்தியைக்கொண்டு நடத்தவேண்டியதாயிற்று. இந்தமுறையில்தான் தற்காலத்திய பெரியபெரிய தொழிற்சாலைகள எண்பவைகள் எலாம் ஏற்படவேண்டியவையாயின. ஆதியில் தொழிற்சாலைகளை ஆரம்பித்த நடத்தர முதலாளி வகுப்பானது, நாளாவட்டத்தில் பெருகிய செல்வ பெருகினால்தான் தற்காலப்பணக்கார கூட்டத்தார்களாகவுமானார்கள். அமரிக்கா தேசம் கண்டுபிடித்ததின் மூலம் உலகத்தின் பலபாகங்களும் சந்தைகளாக ஏற்பட்டு, தொழிற் முறைகள் மேலும்மேலும் பெருக ஆரம்பித்தன. இந்தப் பெருக்கத்தினால் வியாபாரமும் பெருகி, கப்பல்போக்கு வரத்து, தரைபோக்கு வரத்து ஆகிய சாதனங்கள் விருத்தியடைந்தன.

ஆகவே, இவ்விதமான வியாபாரப்பெருக்கத்தின் காரணமாக தொழில்கள எவ்வளவுக்கு எவ்வளவு முற்போக்கடைந்து சாமான்உற்பத்திகள் பெருகினவோ, அவ்வளவுக்கு அவ்வளவு வியாபாரமும், அவை வேறு பாகாடுகளுக்கு கொண்டு செல்ல கப்பல்போக்குவரவுகளில் முற்போக்கும், இரயில்வேவசதிகளும் ஆகிய போக்குவரவு சாதனங்கள் பெருகின. இயந்திரங்களும், சாமான் உற்பத்திபெருக்கங்களும்போக்குவரவு சாதனங்களும், எவ்வளவுக்க எவ்வளவு முன்னேற்றமடைந்தனவோ அவ்வளவுக்கு அவ்வளவு முதலாளிகளும் லாபம் அடைந்து, தங்களது செல்வத்தைப்பெருக்கி, முதலாளி தத்துவத்தை நிலைநிறுத்திக்கொண்டார்கள். முதலாளி தத்துவம் இந்தப்படிக்கு பெருக்கமடைந்துகொண்டே போனதால் மேற்கண்டமாதிரியான தொழில் முறையில், இயந்திர முற்போக்கில், உலக வியாபாரத்தில் சம்பந்தம் வைத்துக்கொள்ளும் விஷயத்தில் கவலைபற்று இருந்த பழைய வகுப்பார்களான ஜமீன்தார்கள் கூட்டமானது, வரவர கூலிணதிசை அடைய வேண்டியதாயிற்று முதலாளிவகுப்பார்கள் முன்னேற்றமெலாம் அந்தந்தக்காலத்தில் மாறுதலடைந்துகொண்டுவந்ததொழில்முறையையும், வியாபார முறையையும், போக்கு வரத்து சாதனத்தையும் பொருந்தியதாகவே இருந்து வந்தது. முதலாளி வகுப்பானது மற்றெல்லா வகுப்பாரையும் விட அதிகமாக முன்னேறவே அவர்களுக்கு இராஜீயத் துறையிலும் அதிமான ஆதிக்கமும் ஏற்பட ஆரம்பித்தது.

எனவே ஒருகாலத்தில் ஜமீன்தார்களின் ஆதிக்கத்தின் கீழ் கிராமங்களில் அடிமைகளாய் வாழ்ந்து வந்த குடியானவர்கள் (பண்ணையாட்கள்) பிறகு பட்டணங்களில் சென்று தொழில் கற்று சுயேச்சையாக வாழ்ந்தும், பிறகு உலகவியாபாரக்காரணமாகபணம் சேர்த்து, முதலாளிகளாகி அதன் மூலம் தங்களுடைய அரசியல் ஆதிக்கத்தையும் பெருக்கிக்கொண்டார்கள் (என்பது இதிலிருந்து விளங்குகின்றது). ஆகவே இந்தக் காரணங்களால்தான் இன்றைய அரசாங்கங்கள் எல்லாம் பணக்கார வகுப்பார்களின் (முதலாளி வர்க்கத்தாரின்) நன்மையைக்காப்பாற்ற ஏற்படுத்தப்பட்ட ஒரு காரியக்கமிட்டியாகவே இருந்துவருகின்றன. இந்தப்படி பெருகின முதலாளி வகுப்பானது உலக சரித்திரத்தில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்திவிட்டது என்பதில் சந்தேகமில்லை.

அதாவது, ஆதியில் ஜமீன்தார்கள் என்றும், பிரபுக்கள் என்றும், பெரியதனக்காரர்கள் என்றும் பிரிக்கப்பட்டிருந்து அவர்கள் விஷயமாய் ஜனங்களுக்குள் ஏற்படுத்தப்பட்டிருந்த தான பலமான மரியாதைகள், பக்திகள், மேல்-கீழ் பாவனைகள், வரிசைகள் ஆகியவைகளெல்லாம் பணக்காரத்தன்மையானது ஒழித்துவிட்டது.

ஒரு மனிதனுக்கு மனிதன் இயற்கையிலேயே உயர்ந்தவன் என்று கருதுவதற்கு ஆதாரமாய் இருந்து வந்த, உயர்தாழ்வு முறைகளையெல்லாம் ஒழித்து வெளிப்படையாக ஒருவனுக்கொருவர் சம்பந்தமும் மேல்-கீழ் வித்தியாசமும் பணத்தைப் பொறுத்ததே அல்லாமல் வேறு ஒன்றினாலும் இல்லை என்பதை நிரூபித்துவிட்டது.

மதத்தின் பெயராலும், தர்மத்தின் பெயராலும், சமூகக்கட்டுப்பாடுகளின் பெயராலும் ஏற்படுத்தப்பட்டு இருந்த முறைகள் எல்லாம்வெட்டவெளியாக்கப்பட்டு சுயநலம் (பணத்துக்காக)என்கின்றதான ஒரே கருத்தின்மீதுதான் இவை ஏற்படுகின்றதே பொழிய வேறு ஒன்றினாலும் அல்ல என்பதை முதலாளி தத்துவம் உலகிற்கு நிரூபித்துக்காட்டிவிட்டது.

மதத்தின் போதாலும், ராஜ கூலியின் போதாலும்மக்களுக்குள்புகுத்தப்பட்டிருந்த எண்ணங்களை யொழித்து, இவைகள் எல்லாம் வெட்கமில்லாமலும், கொஞ்சமும் மறைபொருளில்லாமலும், மிருகத்தனமாக ஒருவனை யொருவர் சுயநலத்திற்காக அடக்கி, ஆண்டு பயன்படுத்திக்கொண்டு வருவதுதான் மேற்படிமுறைகள் என்பதையும் முதலாளி தத்துவம் வெளிப்படுத்தி விட்டது.

மக்களுக்கு வேண்டிய எந்த சாமான்களையும் கடைகளில் வாங்குவதுபோலவே, எவ்வளவு பெரிய கிரஹஸ்தாசிரமமுள்ள மனித சம்பந்தத்தையும் பணத்தினாலேயே ஏற்படுத்திக்கொள்வது சாத்தியமான காரியம் என்று முதலாளிதத்துவம் வெளிப்படுத்தி விட்டது.

சிற்சில தொழில்களுக்கும், தன்மைகளுக்கும் பிரத்தியேகமாய் ஏற்படுத்தி இருந்த மரியாதையும், மேன்மையும் முதலாளித்தன்மை பால்மறைந்துபோயிற்று. எப்படியெனில் வைத்தியன், வக்கீல், பாதிரி, வித்துவான், சாஸ்திரி ஆகியவர்கள் எல்லோருமே பணத்திற்கு வேலை செய்யும் கூலியாட்களாகவே கருதப்பட வேண்டியவர்களாய் விட்டார்கள்.

குடும்ப வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் பின்பற்றி வந்த பந்துத்துவ முறைசம்பந்தமான பத்திகள் எல்லாமும் மாறி ஒருவரிடம் ஒருவருக்குள்ள எவ்விதசொந்தமும், சம்பந்தமும் எல்லாமுமே பணத்தைப் பொருத்ததாகவே ஆகிவிட்டது.

மத்திய காலங்களில் மிகவும் மேன்மையாகக்கருதப்பட்டவீர, சூராதிசூரமத்தன்மைஎன்பவைகள் எல்லாம் எவ்வளவு தூரம் சோம்பேறித்தனத்திற்கு காரணமாயிருந்தது என்பதையும் முதலாளித்துவம்வெளிப்படுத்தி விட்டது. மனிதன் தன்னுடைய முயற்சியினாலும், ஊக்கத்தினாலும் எவ்வளவு பெரிய காரியங்களையும் சாதிக்கலாம் என்பதையும் எவ்வளவு பெரிய லக்ஷியத்தையும் அடையலாம் என்பதையும் முதலாளி தத்துவம் நிரூபித்துக்காட்டிவிட்டது.

ஆதிகாலத்தில் ஈஜிப்ட்டில் கட்டப்பட்ட கோபுரங்களையும், ரோம ராஜ்யத்தில் கட்டப்பட்ட தண்ணீர்தேக்க அணைகளையும், ஐரோப்பாவில் இருந்த பெரிய சர்ச்சுகளையும் விட அதி ஆச்சரியப்படத்தக்க அபூர்வ வேலைகளெல்லாம் பணமானது செய்து முடிக்கச்சொல்லுகின்றது.

இந்தப்படியான சர்வவல்லமையுள்ள முதலாளித் தத்துவம் பெருகுவதற்காக அவர்கள் தங்களுடைய தொழில் முறைகளையும், தொழில் கருவிகளையும் அவசியம் என்று கருதியபோதெல்லாம் அடிக்கடி மாற்றி வெவ்வேறான

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா
ய்ச்சி நூலக அறக்கட்

விவாக ரத்து.

(K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L.,)

முன் தொடர்ச்சி.

விவாகத்தை எதிர்க்கும் நம் பகைவர்கள், தக்க காரணங்களான ஆயுதங்களைக் கொண்டு நாம் பலமாகத்தாக்கியதற்குஞ்சித் தோல்வியுற்றுப் பயந்தோடிக் கடைசிமுறையாகத்தங்களைக்காப்பான்வேண்டி "மதம்" என்னும் உயிரிய மதிற்கோட்டைக்குள் ஒழித்தனர். ஆனால் நாம் அடபொய் மதிற்கோட்டையையும் பொடிபடத்தாக்கி நம் மாற்றலரைப்புறங்காட்டச்செய்தபின் அவர்கள் இனிநிச்சயமாக 'ஒழுக்கம்' என்னும் ஆழ்ந்தகன்ற அகழியின் பின் ஒளித்துக்கொண்டு நம்மோடு போர் புரிய எத்தனிப்பார். ஆகவே இவ்வொழுக்கம் என்னும் அகழியையும் தூர்த்துத் தகர்த்து நம் எதிரியைத் துறத்தியடிப்பின் நாம் கைக்கொண்டுள்ள விவாகவிடுதலையின் இன்றியமையாமையை நனிநிலை நாட்டியவர் ஆவோம்.

எனவே, நம்மை நோக்கி நம் எதிரிகள் கூறுவதென்னவெனில் "மதத்தின்படி நீவிர் கூறும் விவாகரத்து குற்றமில்லாததாகவும், ஒப்புக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கலாம். ஆனால் அத்தகைய விவாகரத்து என்னும் முறையை நாம் கையாள முற்படின் அதனால் நம் சமூகத்தில் வினையும் இழுக்கும், ஒழுக்கக்குறைவும் சொல்லமுடியாத அளவாதும் என்பதை உணர்ந்தீர்இல்லையோ? விவாகரத்தைக் கையாளும் அமெரிக்காவையும், ரஷியாவையும் அவைகளில் அதன் காரணமாக வினையும் ஒழுக்கக் குறைவையும் கண்ணுற்ற பின்னும் விவாகவிடுதலை வேண்டுமென யாரேனும் விழைதல் இயலுமோ?" என்கின்றனர்.

இத்தகைய கூற்று நம் எதிரிகள் வாய்ப்படல் மிகவும் இயல்பே. ஆனால் இதற்குத்தக்க காரணம் காட்டி விடையிறுக்கவும் நாம் தயாராய் இருக்கின்றோம் இவர்கள் மேலே கூறிய வார்த்தைகளில் இரண்டு கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவதாக விவாகரத்தைக் கையாளும் அமெரிக்காவையும், ரஷியாவையும் அவைகளில் அதன் காரணமாக வினையும் ஒழுக்கக் குறைவையும் கண்ணுற்ற பின்னும் விவாகவிடுதலை வேண்டுமென யாரேனும் விழைதல் இயலுமோ? என்பது. இரண்டாவது விவாகரத்துச் சட்டம் என்பது எல்லாக்காலங்களிலும், எல்லாத் தேசங்களிலும் ஒரே விதமானது. இவ்விரண்டு கேள்விகளோடும் தனித்தனியே ஆராய்ந்து அவைகளின் உண்மையை நாம் இனிக்காணுவோம்.

விவாகரத்தைக் கையாளும் மக்களும், சமூகமும் ஒழுக்கம் அற்றவர்கள் என்னும் கூற்று மிக பத்து முறை மணந்துகொள்ளுவும் வியப்பைத் தரக்கூடியதே தல் சுபாவமாம். மற்றும் அகமதாயாகும். இவ்வுலகத்தில் இருக் பாத்தைச் சார்ந்த சோம்பூரா கும்படியான தேசங்களுள் பல பிராமணர்களும், ஐக்கிய இம்முறையைக் கையாண்டு வரு மாகாணத்தைச் சார்ந்த கின்றனவே, அவையனைத்தும் லோதீஸ் என்பவர்களும் தென் ஒழுக்கம் என்பதே இல்லாதிருக் ணாட்டிலுள்ள லிங்கதாரிகளாகிய கின்றனவா? அமெரிக்கா, இங்கி வீரசைவர்களுட் பலரும் விவாலாந்து, ஸ்காட்லாண்டு, பிரான்சு, காரத்தையும், மறுமணத்தையும் ஜர்மனி, பெல்ஜியம், ஹாலண்டு, பெருவாரியாகக் கையாண்டு வரு நார்வே, ஸ்வீடன், டென்மார்க், கின்றார்கள். ஆக இவ்வளவு ஆஸ்டிரியா, ஹங்கேரி, கிரீஸ் கோடிப் பேர்களும் 'ஒழுக்கம்' முதலிய தேசங்கள் இவ்வளவும் என்பது இல்லாமல இருக்கின்றார் ஒழுக்கம் அற்றவைகள் என்றும் களா? என்று கேட்கின்றோம். ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தா ஆகவே, உற்று நோக்கின் சில லியும் இந்துக்களுள் சிலருமே மாகாணங்களில் உள்ள பார்ப்பஒழுக்கத்திற்கு உறையுள் என் னர்களும், 'சூத்திரர்' என்று றும் ஒருவன் கூறுவானேல் அவ சொல்லப்படுபவருள் மேல் சாதி னது மடமையையும், புன்மதியை யினர் என்று தமமைத் தாமே யும் கண்டு நாம் வருந்துவதா? கூறிக் கொள்பவராகிய சிலருமே அல்லது நகைப்பதா? நமது இந்- தான் இவ்விவாகரத்தைக்கையாதிய தேசத்தையே எடுத்துக் ளாமல் இருந்து வருகின்றனர். கொள்ளுவோம். எடுத்துக்கோடி ஏறக்குறைய எனைய மக்கள் மக்களுக்குக் குறையாத முகம அனைவரும் இதை எதாவது ஒரு தியசமூகத்தினரும் ஏற முறையில் கைப்பற்றியே தான் க்குறைய அதேதொகையை வருகின்றார்கள். அவ்வாறு க்கொண்ட ஆதிதிராவிட மக்க மேலே கூறிய சிறுபாலோர் ளும் [தம்ஜாதிவழக்கப்படி] விவா விவாகரத்தைக் கொள்ளுதலால் ஒழுக்கத்தில் எவ்வாற்றகரத்தைக் கையாண்டு வருகின்- லும் எனையவரைக் காட்டிலும் றார்கள். மற்றும், பார்ஸீகர்களா உயர்ந்தவர்களாய் இருக்கின்றார் கிய ஒரு பெரும் வகுப்பினரும், களா? என்ற பிரச்சினை வேறு. பிராடஸ்டண்டு கிறிஸ்துவர்க உண்மையில் எனையவரைக்காட்டிளும், ஹிந்துக்களுக்குள்ளேயே லும் இவர்கள் ஒழுக்கத்தில் தாஒரு பிரிவினராகிய ஆரியசமாஜத் ழ்ந்தவராகவே இருக்கின்றார்கள் தினரும், பிரம்ம சமாஜத்தினரு என்பது திணிபு. இது வரையும் மேயன்றி சிவில் விவாகச்சட்டப் தம்மிடத்தில் விவாகரத்து இல் படிமணம் புரிந்துகொள்ளும் இந் லாததால் தாம் ஒழுக்கத்தில் துக்களுள் விவாகரத்தைக் கையா உயர்ந்தவர் என்று கூறிக்கொண் ண்டு வருகின்றனர். இத்தனை டுவந்த உயர்ந்த ஜாதி ஹிந்துக் கோடி மக்களும் ஒழுக்கம் இல் களின் பெருமைப் பேச்சுமே இனி லாதவர்கள் என்று கூற எந்த வர இடமில்லை. சுதேச மன்ன அறிவுடைய மனிதனுவது முன் ருள் தலை சிறந்தவரும், சீர்திருவர முடியுமா? என்று கேட்கின் த்தில் வளவு கடந்த ஆர்வங் றோம். இஃதேயன்றி ஜாதியின் கொண்ட அருமன்னரும், உண் கொடுமை மிகவும் குறைந்துள்ள மையான 'ஹிந்து மதம்' என்ப பஞ்சாப் மாகாணத்தில் அனேக தைப் பின் பற்றி வருவோம் மாய் ஒவ்வொரு ஜாதியிலும் மற என்று கூறுபவரும் ஆய உயர் மணபபழக்கம் இருந்துகொண்டு திரு பரோடா மன்னர், இவ்வருதான் வருகின்றது இந்துக்க டம தம தேசத்தில் இந்துக்களாய இராஜபுத்திராக்களில் ஓர் பிரி ருக்கொரு விவாக ரத்துச் சட் வினராகிய ரோஹா ஷங்காபாத் டம் ஏற்படுத்தி அதுவும் அமுதைச் சேர்ந்த ஜாடம் என்பவர்க லுக்குக் கொண்டு வரப்பட்டுவிட் ளுக்குள் மறுமணம் (விவாஹரா டது. இவ்வுயர்ந்த மன்னராத்து) வழங்கி வருகின்றது. அவ வது, அவர் செய்யும் சீர்திருர்கள் பெண்களில் பலர் தம் வாழ் த்தச் சட்டங்களை ஆர்வங்கொண்டு நாட்களில் ஒன்பது அல்லது அனுஷ்டித்து வரும் அறிவுமிக்க அவர் குடிகளாவது ஒழுக்கத்தில் இம்மியேனும், புராண ஆபாச மூட்டையைச் சுமந்து, மதமென்னும் கள்குடித்து, மயக்கம் எய்தி வாயுழறும் மூடர்களைக் காட்டிலும் குறைந்தவர் என்று கூற எந்த மனிதன் முன் வருவான்? ஆகவே விவாக ரத்தைக் கையாளுபவர்கள் ஒழுக்கம் அற்றவர் என்னும் கருத்து முற்றிலும் குற்றமுடையதோர் மூடக்கருத்தேயாகும்.

இரண்டாவது, நம் எதிரிகள், "அமெரிக்கா தேசத்திலிருக்கும் விவாகரத்துச் சட்டம் தீயது; அதனால் அங்கு ஒழுக்கம் சீர்குலைய ஏதுவாகின்றது" என்று கூறின் அதை நாம ஒருக்கால் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் அமெரிக்காவில் இருக்கும் விவாகரத்துச் சட்டம ஒழுக்கத்தைக் குறைப்பதால் உலகத்தில் இப்பொழுது இருக்கும விவாகரத்து முறைகளும், இனி உண்டாக்கப்படும் விவாகரத்து முறைகளும் ஒழுக்கத்தைக் குறைக்கும் பாற்றது என்று கூறின், அது அவ்வாறு கூறுவோரின் மடமையையும், அமெரிக்கா சட்டத்தைப் பற்றிய அறியாமையையும் நனி காட்டுகின்றதால் நாம் அதை முற்றிலும் மறுத்துக் கண்டிக்கவும் கடமைபபட்டிருக்கின்றோம். விவாஹரத்து முறை என்பது எல்லாத்தேசங்களுக்கும் ஒன்றே என்று அவர் எண்ணுதல் கூடாது. அதிலும் நல்ல முறை யென்றும், கெட்டமுறை யென்றும் உளளது. விவாக முறையிலும் எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடியதும், உயர்தரமானதும், சமூகத்திற்குத் தீங்கு விளைப்பதுமு, கீழ்ப் பட்டதுமான முறையும் இப்பொழுது நம்மிடத்தில இல்லையா? தேசத்திற்கு தேசம் சமூகத்திற்குச்சமூகம் விவாக முறைகள் மாறுபடுகின்றன. ஆக நல்ல முறைகள் அவற்றுள் சில இருப்பதால் பொதுவாகவே விவாகம என்பது நல்லது என்றே அல்லது தீய முறைகள் சில விருத்தலால்விவாகம என்பதே பொதுவாகத் தீயது என்றே நாம் கூற முடியுமா? எந்த ஒரு ஆணுவதுதான் முதன் முதல் சந்திக்கும எந்தப் பெண்ணிடமும் சேர்ந்து கொள்ளுதலாகிய ஒரு பழக்கத்தைச் சிலர் 'விவாகம' என்று கூறுகின்றனர். ஆகையால், இதைக்கண்டவுடன் விவாகமென்பது கொடியது; அதனால் ஒழுக்கம் குன்றி

(தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நாகை முதலாவது சுயமரியாதை மகாநாடு.

ரயில் நெகெ உபசரிப்பு—ரயில் மேடைகளில் உபசாரப்பத்திரம்.

பெரிய ஊர்வலம்.

ஏராளமான மாலைகள்.

பார்ப்பன விஷமத்திற்கு பரிகாரம்.

தேர்தல் கூலிகளின் தொல்லை பலிக்கவில்லை.

பொதுக்கூட்டத்தில் 5000 பேர்கள்.

அக்டோபர் 3, 4 தேதி சனி, ஞாயிறுகிழமைகளில் காகைடவனில் நடைபெற்ற நாகை தாலுகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டிற்கு 3 தேதி காலை 3 மணிக்கு திருச்சியில் இருந்து திருவாளர்கள் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன், சொ. முருகப்பா, செல்லையா, அருணாசலம், கே ஏ. பி. விஸ்வநாதம், வீரையா முதலியவர்களும், காரைக்குடியில் இருந்து வந்த திருமதி விசாலாக்ஷி, திரு. சுப்பையா முதலியவர்களும், ஈரோட்டிலிருந்து வந்த திருவாளர்கள் ஈ. வெ இராமசாமி, அவரது சகோதரி எஸ். ஆர். கண்ணம்மாள், சி. நடராஜன், சுலோசனை, பொன்னம்பலம், முனிசாமி முதலியவர்களும் மற்றும் பல பிரதிநிதிகளும் புரப்பட்டார்கள். தஞ்சைக்கு இரயில்வந்ததும் தஞ்சை வாலிபர்கள் பலர் புஷ்ப மாலைகளுடன் மேடையில் ஜே கோஷத்துடன் வரவேற்று சிற்றுண்டி வகைகள் உபசரித்தனுப்பினார்கள். பிறகு அங்கிருந்து வண்டி மாறி புரப்பட்டதும் ஸ்டேஷன்கள் தோரும் மாலைகளுடன் வாலிபர்கள் நூற்றுக்கணக்காக நின்று வரவேற்று அநேகர் கூடவே இரயில் ஏறி தொடர்ந்து வந்தார்கள். திருவாரூரில் சுமார் 500 பேர்களுக்கு மேலாகவே மேடைக்கு வந்து தலைவரையும், பிரதிநிதிகளையும் இறக்கி சிற்றுண்டி, பழம் முதலியவை அளித்து மாலையிட்டு, உபசாரபத்திரங்கள் வாசித்துக்கொடுத்தார்கள்.

பிறகு, அங்கிருந்து 150 பிரதிநிதிகள் போல் தொடர்ந்தார்கள். பிறகு கூத்தனூர், சிக்கல் முதலிய ஸ்டேஷன்களிலும் வரவேற்று மாலையிட்டு உபசரித்ததுடன் பலர் கூடவே தொடர்ந்து வந்தார்கள் வண்டி நாகை சென்ற உடன் நாகை மேடையில் பாண்டு, மேளம், கொம்பு, தப்பட்டைகளுடன் சுமார் 1000 பேர்கள் வரை வாலிபர்களும், உள்ளூர் பிரமுகர்களும் முனிசிபல் கவுன்சிலர்களும், தாலூகா, ஜில்லாபோர்ட்பிரதிநிதிகளும் மற்றும்பல வகுப்பு சமூகப் பிரதிநிதிகளும் தனித்தனியே பெயர் சொல்லி மாலையிட்டுவரவேற்று, தாகத்திற்குசோடாகலர் முதலியபானங்களுடன் உபசரித்துவெளியில்அழைத்துச்சென்று, ஆறுகுதிரைகள் கட்டிய பெரிய தொரு பீட்டின் வண்டியில் தலைவர் திரு. பாண்டியன் அவர்களை அமரச்செய்து வரவேற்புத் தலைவர் திரு. குப்புசாமி அவர்கள் அருகில் என்று கூப்பாடு போட்டு, வண்டியை இருக்க முன்னால் செல்லவும். மகா தன் கால் மேல் எற்றிக்கொண்டு காட்டின் திறப்புவிழா வாத்த வந்த பழி சமத்தத் தந்திரம் செய்ததை திருமதி விசாலாக்ஷி அம்மை பல சிலர் தெரிந்து அவனை இழுத்து சகோதரிகள் புடைசூழ மோட்டார் இழுத்து இரண்டு மூன்றுதரம் ஓடத்தி விட்டார்கள். நல்ல வார்த்தைகள் பல சொல்லிப்பார்த்தார்கள். ஒன்றுக்கும் அப்பார்ப்பன வாலிபன் இணங்காமல் பெண்கள் வண்டியில் வந்து மோதிக்கொள்ளவே முயத்தித்தான். இதனால் ஊர்வலத்தில் சற்று பரபரப்பு ஏற்பட்டது என்றாலும் அப்பார்ப்பனப் பையனுக்கு எவ்விதக் கெடுதியும் நேராமல் இருக்க எவ்வளவோ முயற்சிக்கப்பட்டது. கடைசியாய் கடைவீதிக்கார கனவான்கள் சிலர் "அவனுக்கு இவ்வளவு நல்ல வார்த்தை என்ன வந்தது? கையைப்பிடித்து இழுத்துவிடுங்கள்" என்றார்கள். அதற்கு அப்பார்ப்பன வாலிபன் "சர்க்கார்ரோட்டில் கடக்க எனக்கு சகல உரிமையுண்டு." என்றும், யாராவது தன்னை தொட்டால் "தெரியும்" என்றும் சொன்னார். கடைக்காரர்களால் பிறகு கையைப் பிடித்து இழுத்துவிடவேண்டியதாயிற்று. இதன பிறகு அப்பார்ப்பன வாலிபன் 'இதுதான் அஹிம்சையோ, இதுதான் சுயமரியாதைக் கொள்கையோ, இதுதான் இராமசாமி நாயக்கன் கட்டளையோ?" என்றுசொல்லிக் கொண்டு 'ஐயையோ! அப்பப்பா! கொல்லாகவே! அடிக்காகவே! கேள்வி இல்லையா? கேப்பாடு இல்லையா? இதென்னஊரா? பாழா? என்று கத்தினான். இதைவிர அடுத்து வரும் முனிசிபல் தேர்தல்களில் பார்ப்பனரல்லாதார் என்னும் முறையில் வெற்றிபெற முடியாத சில கனவான்களின் பண உதவிபால் சில தேர்தல் தாகர்கள் கருப்புக் காசித்தை ஒரு ஜான் சதுரத்தில் கிழித்து ஒரு மூங்கில் குச்சியில் ஒட்டவைத்துக்கொண்டு "வகுப்பு துவேஷிகளுக்கு ஆதரவளிக்காதீர்கள்!" என்று கூப்பாடு போட்டார்கள். அவர்களை சில பார்ப்பனரல்லாத வர்த்தக கனவான்கள் "வாங்கின கூலிக்கும்போட்ட சப்தத்திற்கும்சரியாய்போய்விட்டது. இனிநாமெல்லோரும் சகோதரர்கள் ஆகிவிட்டோம். வாருங்கள்" என்றவுடன் கொடிகளை எறிந்துவிட்டு வந்தார்கள்.

ஊர்வலம் வழிநெடுக புகைப்படம் பிடிக்கப்பட்டு சமதர்மப்பந்தல் என்னும் மகாநாட்டு கொட்டகைக்கு சுமார் 11 மணிக்கு வந்துசேர்ந்தது. மகாநாடு கொட்டகையில் எற்கனவே சுமார் 2000 பேர்கள் வரை இருந்தார்கள். பெண்கள் சுமார் 100 பேர்கள் இருந்தார்கள். ஊர்வலகூட்டமும் எவ்வளவு குறைவாய் மக்களை உள்ளேவிடப்பட்டும் கொட்டகையில் அனேகருக்கு இடம் இல்லாமல் கொட்டகை தட்டிகள் எடுக்கப்பட்டு வெளிதட்டிவரையில் வெய்யிலில் உட்காரும்படியாக ஆகிவிட்டது. மகாநாட்டுப்பந்தலில் நாகை பிரபல கனவான்-பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு உழைத்த பெருமான் திருவாளர் வி. பி. பக்கிரிசாமிபிள்ளை அவர்களின் பெரிய உருவப்படமும், திரு ஈ. வெ. இராமசாமியின் பெரிய உருவப்படமும் கட்டித்தொங்கவிட்டும், மற்றும் பார்ப்பனீயப்புரட்டை விளக்கும்படியான அநேக சித்திரங்களையும், குமரன் பத்திரிகையிலும், தமிழ்நாடு பத்திரிகையிலும் வந்தது போன்ற பெரியபெரிய அட்டைகளில் வர்ணங்களால் எழுதிக்கட்டி இருந்தது. 'பார்ப்பனர் ஜாக்கிரதை' 'காங்கிரஸ் ஜாக்கிரதை' 'பார்ப்பனக் கொடுமையைவிட அரசாங்கக்கொடுமை அதிகமல்ல' "சூத்திரன் என்று சொல்ல இனிப்பொறுத்திருக்காதே' என்றும், இன்னும் நூற்றுக்கணக்கான அட்டைகள் பெரிய அச்செழுத்துக்களில் அச்சடித்து தொகை விடப்பட்டிருந்தன. வாழை மரதோரணங்களும், தணிகட்டி பூக்களும், எழுத்துகளும் ஒட்டிய அலங்கார மும எவ்வளவு பித்தலாட்டக்காரனுக்கும் புத்திகற்பிக்கும் படியான காட்சியாகவே இருந்தது.

மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த முக்கியஸ்தர்கள்:— திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

நாகை சுயமரியாதை மகாநாடு.

எதிரிகளே சட்டைசெய்யோம்

—)O(—

பகுத்தறிவு இயக்கமே

சுயமரியாதை இயக்கமாகும்.

—◎—

தலைவர் செளந்திர பாண்டியன் வீர உரை.

3-10-31ல் நடைபெற்ற நாகை சுயமரியாதை மகாநாட்டில் மகாநாட்டுத் தலைவர் திரு. டபிளியூ பி. ஏ. செளந்திர பாண்டியன் அவர்கள் நிகழ்த்திய முகவுரை.

சகோதரிகளே! சகோதரர்களே!!

சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி நான் உங்கட்கு எடுத்துச் சொல்ல வேண்டு மென்று இவ்விடத்திற்கு வரவில்லை. அது முன்னரே எங்கும் பரவிக் கொண்டிருக்கிறது. அது எந்த அளவுக்கு அதிகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள ஒரு அளவு கோல் இருக்கிறது. அதென்ன வெனில் அந்த அந்த இடத்தில் அவ்வளர்ச்சிக்குத் தக்கபடி அதிக எதிர்ப்பு எத்பட்டிருக்கும் என்பதாகும். நம்மியக்கத்திற்கு எங்கே எல்லாம் அதிக எதிர்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் சுயமரியாதை இயக்கம் பரவி விட்டதென்பது உறுதியான விஷயமாகும்.

இவ்வூரில் நாம் காலையில் வண்டியில் வந்து கொண்டிருக்கையில் அதற்கு எதிரிகள் தங்கள் நிலைமையை தெரிவித்தார்கள். பிரச்சாரம் அதன் சம்பந்தமான வேறு சில விஷயங்களும் நடந்தது. இதனாலெல்லாம் நாம் அறியக் கிடக்கிற தென்ன வென்றால் நம் சுயமரியாதை இயக்கம் இவ்வூரில் வேர் ஊன்றி விட்டதென்பதே. ஆகவே, நாங்கள் இனி மேல் வேறு ஊர்களுக்குப் போய் இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்பலாம் என்றே எண்ணினேன்.

சுயநலக்காரர் எதிர்ப்பை சட்டை செய்ய வேண்டாம்.

சுயமரியாதை இயக்கத்தினுடைய தத்துவங்கள் நமது எதிரிகளுக்குத் தான் வெறுப்பைத் தரும். விஷமச் செயல்களினாலும் சுயநல சூழ்ச்சிகளினாலும் நமக்கு எதிர்ப்பை உண்டு பண்ணுகிறார்கள். அத்தகைய எதிர்ப்பு வந்து தான் தீரும். நாம் அதை யெல்லாம் சட்டை செய்து கொண்டு சும்மா திரும்பி விடமாட்டோம். நம் இயக்கத்தின் தத்துவங்களை யெல்லாம் நாம் மக்கட்கு எடுத்துச் சொல்ல வேண்டு மென்ற அவாவே, எங்களை யெல்லாம், இலாபத்தையோ நஷ்டத்தையோ தொந்திரவையோ பார்த்து அதயக்கம் அடைய விடாமல் மேன் மேலும் உந்திக் கொண்டு வருகிறது.

இன்று காலை நம் மகாநாட்டைத் திறந்து வைத்த திருமதி விசாலாட்சி அவர்கள் உங்கட்கு விஸ்தாரமாக நம் இயக்கக் கொள்கைகளைப் பற்றி அதிகம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சுயமரியாதை இயக்கத்தினுடைய தூண் போன்ற பெரியார்கள் பலர் இவ்விடம் விஜயமாகி இருக்கிறார்கள். அவர்களிடத்தில் நீங்கள் அறிய வேண்டிய அரசே விஷயங்களை யெல்லாம் தெள்ளத் தெளிவாகக் கேட்டு உணர்ந்து கொள்ளலாம். நானும் முகவுரையாக சில வார்த்தைகள் பேச வேண்டு மென்ற உங்கட்கு அவா இருக்குமானதால் நானும் சில வார்த்தைகள் சொல்லமுற்படுகிறேன்.

பகுத்தறிவு.

யாராவது நம் இயக்கத்தினுடைய கொள்கைகள் என்னவென்று கேட்டால் நான் ஒரே வார்த்தையில் தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது நீங்கள் பகுத்தறிவைக் கொண்டு, உங்கள் பழக்கவழக்கங்கள், மதம், கடவுள், சாதி, காங்கிரஸ், காந்தி என்று பேசிக்கொண்டு உங்களை யெல்லாம் கெட்ட பாதையில் புகுத்தி மோசம் செய்கிற செயல்களை அலசி ஆராய்ந்து பாருங்கள். அதிவுக்குப் பொறுத்தாருல் ஏற்றுக் கொள்ளுங்கள். மற்றவைகள் எவையாயிருந்தாலும் உதறித்தள்ளுங்கள் என்பதேயாகும்

நம்முடைய பழக்க வழக்கங்களை எடுத்துக்கொண்டு பாருங்கள். நம் மக்களின் வாழ்வில் மூடநம்பிக்கைகளாலும், மூடக்கொள்கைகளாலும் எவ்வளவு அனுஷ்டிகளும், அர்த்தமற்றதுமான செய்கைகள் இருக்கின்றன!

இப்படிப்பட்ட பழக்கவழக்கமென்ற வார்த்தைகளை ஒழித்துவிடுங்கள் என்று நாம் சொல்லுகின்றோம். நம் எதிரிகள் எடுத்ததெல்லாம் "தேசியம், தேசாபிமானம்" என்ற ஒரு போலிக்காரணத்தைச் சொல்லி அவையே மறுபடி நிலைநிறுத்தப் பார்க்கிறார்கள். அவற்றின் அவசியத்திற்கு இவர்கள் சொல்லக்கூடிய காரணங்களை விட ஒருபடி மேன்மையாகவே அவற்றால் நம் நாடு மிருகப்பிராயத்திற்கு உந்தி விட்டதே பிரத்தியக்ஷ அனுபவத்தில் எடுத்துச் சொல்லக்கூடும்.

தேசீயத்தின் பேரால் படுமோசம்.

தேசீயம் என்ற வார்த்தையின் பேரால் எவ்வளவோ கெடுதலான காரியங்களெல்லாம் சுயநலக்காரர்களாலும், சோம்பேறிகளாலும் செய்யப்படுகின்றன என்றும் எவ்வளவோ மோசமான காரியங்களெல்லாம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்றும் நீங்கள் யாவரும் நன்கு உணர முடியும்.

மக்களை மயக்கும் வைதீகர்.

மதத்தையும் கடவுளையும் எடுத்துக் கொள்ளுங்கள். மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும் மக்கள் பணம் எந்த வீணான வழிகளிலெல்லாம் பாழாக்கப்படுகின்றன என்பதை எண்ணிப்பாருங்கள். மக்கள் எத்தனை பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கின்றது என்பதை கவனித்துப் பாருங்கள். அதேகலக்ஷ்மியாய் வரும்படியான கோவில்களிலெல்லாம் நமது பணம் வீணாக இறைக்கப்படுகிறது. மதப் பிரசாரம், சமயப்பிரசாரம் கொண்டவர்களும், சடங்கு வயிற்றுப்பிழைப்புக்காரர்களும் அந்தமதத்தின் பேராலும், கடவுளின் பேராலும் மக்களை மயக்கியே பாடுபடுகிறார்கள். அனுதினமும், உபயோகமற்ற தான இந்த வழிகளில் பணம், பிரயாசை ஊக்கம், இவை விரயம் ஆவது கூடாதென்று நாம் சொல்லுகிறோம்.

தேச முன்னேற்றத்திற்குப் பணத்தைச் செலவு செய்க.

இப்படி விரயமாகும் பணத்தைத் தேச முன்னேற்றத்திற்கான வழிகளில் ஏழை சமூகத்தினரையெல்லாம் படிக்க வைப்பதற்கும், அதிலை வித்தி செய்வதற்கும் அவர்கள் மனிதத்தன்மையுடன் வாழ்வதற்கு சுகாதாரமார்க்கங்களைப் போதிப்பதற்கும் அவர்களுக்குத் தண்ணீர்வசதிக்குக் கிணறு முதலியவை வெட்டுதற்கும், அவர்களுக்குத் துல்பத்திரி எத்படுத்துவதற்கும் நீங்கள் செலவு செய்தால், நம்தேசமானது எவ்வளவோ முன்னேறும்.

காங்கிரஸ் புரட்டு.

நம்மக்களிடைப் புகுத்தப்பட்டுள்ள மற்றொரு புரட்டை நான் இங்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாயிருக்கிறேன். அந்தப் புரட்டுதான் காங்கிரஸ் என்பதாகும். அதைப்பற்றி ப்பேச நான் எப்பொழுதும் பயந்து விடமாட்டேன். காங்கிரஸின் பேரால் ஏதேதோ நிட்டம் போடப்பட்டு அதனால்மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். காங்கிரசானது தேச முன்னேற்றத்திற்குப் பாடுபடுகிறது என்று ஒருவர் சொல்லுகிற பொழுது நீங்களெல்லாரும் மயங்கப் போகிறீர்கள். காங்கிரசின் கர்த்தாக்கள் தேச நன்மைக்கே பாடுபடுகிறார்கள் என்ற ஒரு போலி வார்த்தையைச் சொல்லி நம் எதிரிகள் நம்மக்களை ஏமாற்றுகிறார்கள்.

காங்கிரசில் சமரசமில்லை.

காங்கிரசினுடைய கர்த்தாக்கள் காங்கிரஸ் என்ற வார்த்தையால், மனிதனுக்கு மனிதன் மேல்என்றும், கீழ் என்றும், சாதி என்றும், சமயம் என்றும், பணக்காரன் என்றும், ஏழை என்றும், முதலாளி என்றும், தொழிலாளி என்றும் நாட்டில் வித்தியாசத்தைத் தந்திரமாய் நிலை நாட்டவே பார்க்கிறார்கள். தந்திரமான வார்த்தைகளால் நித்தலவார்த்தமெல்லாம் பேசுகிறார்கள். மதமே நிலைமை என்ற காரணத்தைச் சொல்லிக்கொண்டே மதக்கொள்கைகளை நிலை நிறுத்திக்கொள்ள அவர்கள் எண்ணுகிறார்கள். விடுதலை விடுதலை என்றால், இதனுடைவெல்லாம் எப்படி விடுதலை வரும்?, உங்களுக்கு உண்மையானது தெரியவேண்டுமென்றே நான் இதை எடுத்துச் சொன்னேன்.

என் விருதுநகர் வரவேற்புப் பத்திரத்திலும் நான் காங்கிரஸைத் தாக்கிப்பேசியதற்கு என்னுடைய நண்பர் சிலர் ஆக்ஷேபித்தார்கள். நான் சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்றாலும் பெறாவிட்டாலும் அதைதான் லக்ஷியம் செய்கின்றவனல்ல சட்டசபைக்குப் போகாவிட்டாலும் நான் உங்களிடையே இருந்து என்னாலான நன்மைக்குப் பாடுபட முடியும் என்று எண்ணிக்கொண்டேன். சட்டசபைத தேர்தலில் வெற்றிபெறவேண்டுமென்ற ஆசை எனக்கு இலேசு. எனது 10 வருஷ அனுபவத்திலும் சட்டசபையில் அதிகமான பயனென்று நான் காணேன். காங்கிரசினுடைய ஊழல்களைப்பற்றிப் பேசுகின்ற காரணமாக நம்முடன் சில நண்பர்கள் சேர்ந்தால் இதற்காக அவர்களோடும் சண்டையும் சச்சரவும் தாசர்கள் என்று நம்மை நமது எதிரிகள் சொல்லக்கூடும். காங்கிரஸ் காரர்கள்தான் நியஞ்சகர்களாய் சர்க்காரோடு உள் உறவு கொண்டாடுகிறார்கள். ஆனால் வெளிக்குப் பகைமை கொண்டாடுவதாகக் காட்டிக்கொள்கிறார்கள். சர்க்காரார் உத்தியோகஸ்தர்களுக்கு வால் பிடிக்கும் வேலையைக் காங்கிரஸ்காரர்கள்தான் செய்கிறார்கள். நாங்கள் அப்படிச்செய்கிறவர்களல்ல. எங்களுடன் யாரேனும் உத்தியோகஸ்தர்கள் நண்பர்களாக வந்து சேர்ந்தால், அது சொந்த நிமித்தம் காரணமாகவேயாகும். நாங்கள் எந்த உத்தியோகஸ்தர்களையும் லக்ஷியம் செய்யவில்லை. ஆனால் காங்கிரஸ்காரர்களைப்போல வால் பிடிப்பதும் இல்லை. நாம் எந்த உத்தியோகஸ்தரிடமும் நாம் கொள்கைகளைத் தெள்ளத்தெளிய எடுத்துச் சொல்லிவிடுகிறோம். உங்களுக்கு வேண்டுமானால் எங்களுடனுள்ள ஒரு குடிய இராகியத்தை எடுத்துச் சொல்லுகிறேன். இந்த மாகாண கேபினெட் சபையில் எனக்கு 2, 3 கேபினெட் மெம்பர்கள் நண்பர்கள் தான். அப்படி இருந்தும் அவர்களை

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா
ஆய்ச்சி நூலக அறக்கட்டளை

நாகையில் பொதுக்கூட்டம்.

ஈ. வெ. இராமசாமி உபந்யாசம்.

5000 பேர்கள் கூட்டம்.

நாகை சுயமரியாதை மகாநாட்டின்போது மகாநாட்டு நடவடிக்கைகளின் பிறகு இரண்டு பொதுக்கூட்டங்கள் நடந்தன. அவற்றில் ஒன்று 3ந் தேதி திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடந்தது. அதில் திருவாளர்கள் K.V. அழகர்சாமி K. A. P. விஸ்வநாதம், சொ. முருகப்பா, ஈ. வெ. இராமசாமி ஆகியவர்கள் பேசினார்கள். அடுத்தநாள் மாலையில் மகாநாடு முடிந்ததும் வரவேற்புத்தலைவர் திரு. எம். கே குப்புசாமி அவர்கள் தலைமையில் திருவாளர்கள் அ. சொன்னம்பலம், ஈ வெ. இராமசாமி ஆகியவர்கள் பேசினார்கள். அது சமயம் திரு. ஈ. வெ. இராமசாமி பேசுகையில தலைவர் திரு. குப்புசாமி அவர்கள் முகவுரையாகப் பேசுகையில்'சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி யாருக்காவது தென்றும் சந்தேகங்களைப் பற்றி தாராளமாய்க்கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்' என்றும் 'அவரை நான் காணுதபோது பேசிவிட்டு இப்போது சும்மா இருப்பது சரியாகாது என்றும்' சொன்னார்.

இதன் பயனாக பல கேள்விகள் கொண்ட கடிதத்துண்டுசீட்டுகள் வந்தது. முடிவில் அவைகளுக்கு சமாதானம் சொல்லப்பட்டது. ஈ. வெ. இராமசாமி 3 மணிநேரம் பேசியதின் சாராம்சமாவது:—

ஈ. வெ. இராமசாமி

தலைவரவர்களே! சகோதரர்களே!! சகோதரிகளே!!! தலைவர் அவர்கள் சும்மா இருந்த உங்களை தூண்டிவிட்டு கேள்விகள் கேட்டகுபடி செய்துவிட்டார். நான் வம்பு சண்டைக்குவரவில்லை. வலியவந்தால் நான் எப்படி ஓட முடியும்? உங்கள் சந்தேகத்தையெல்லாம் தீர்க்கக்கூடிய தீரனல்லநான். எனக்கு தோன்றியதை, நான் சரியென்று கருதியதை சொல்லுகின்றேன். உங்களுக்கு சரி என்று பட்டதை ஒப்புக்கொள்ளுங்கள். மற்றதைத் தள்ளிவிடுங்கள். அவ்வளவுதான் சொல்ல முடியும். என்னை ஒரு மகாத்மா என்றோ, மனிதத் தன்மைக்கு மீறிய சக்தி உடையவனென்றோ கருதி ஒன்றையும் கேட்டு விடாதீர்கள். சாதாரணமான மனிதன் என்று கருதி நான் சொன்னவற்றில் உங்களுக்கு விளங்காதது எதாவது இருந்தால் கேளுங்கள்.எனக்கு தோன்றியதை சொல்லுகிறேன். சரி தப்பு என்று கூட என்னிடம் சொல்லாதீர்கள். உங்களுக்குத் தோன்றிய படி நினைத்துக் கொள்ளுங்கள். திருந்துங்கள். எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் பேசுபவற்றில் தப்பிதங்கள் இருக்கலாம் என்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் நான் சரி என்று நினைத்ததைச் சொல்ல எனக்கு உரிமை உண்டு என்பதில் நான் சந்தேகப் படவில்லை.

என்னைப் பற்றி

நண்பர்களே! முதலில் ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொள்ளுகின்றேன். அதாவது சாப்பாட்டு ஜாகைக்கு போகும் வழியில் என்னைப் பற்றியும் என் மனைவியைப் பற்றியும் சுவர்களில் கண்டபடியெல்லாம் எழுதிஇருந்தது. மற்றும் சிலரைப் பற்றியும் எழுதி இருந்தது

பதிலுக்கு பதில் எழுதும் முறையிலோ என்னமோ மற்றும் சிலரைப் பற்றியும் எழுதி இருக்கக் கண்டேன். தவிர, தலைவர் திரு. குப்புசாமி அவர்களிடம் யாரோ ஒருவர் "நாங்கள் ஜாதியைக் கெடுக்கின்றோம்" என்றும் "சுயமரியாதைக்காரர்கள் தங்கள் பெண்களை பறையருக்கு கொடுப்பார்களா?" என்றும் கேட்டார்களாம். அதற்கும் 'பதில் சொல்லுங்கள்' என்றார்.

நண்பர்களே! என்னைப் பொறுத்த வரை நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதவும் என் மனப் பூர்த்தியாய் சொல்லுகிறேன். என்ன வென்றால், என்னை ஒருவர் மகாத்மா என்றோ தெய்வத் தன்மை பொருந்தியவர் என்றோ, சித்தர் என்றோ, புத்தர் என்றோ, ஞானி என்றோ, கூப்பிடுவதை விட கருதுவதை விட என்னை அயோக்கியன் என்றும், திருட்டன் என்றும், மூட்டாள் என்றும், சுயநலக்காரன் என்றும், பணம் சம்பாதிப்பவன் என்றும், மற்றும் இழிவான வேலை செய்கின்றவன் என்றும் சொல்லுவதில் எனக்கு லாபம் இருக்கின்றது என்று கருதுகின்றேன்.

ஏனெனில், எனது வேலையானது இராமசாமி என்று ஒருமகாத்மாவோ, மற்றும் தெய்வத்தன்மைபொருந்தியஒருஒப்பற்றமனிதர் இருந்தார் என்று மூடஜனங்கள் சொல்லிக் கொள்ளவோ, எனது படத்தை பூஜையில்வைத்து பூஜிக்கவோ, தேரில் வைத்து இழுக்கவோ, கோவிலில் எம்பேரில் விக்கிரகம் செய்து பூசை உற்சவம் செய்யவோ நான் கருதவில்லை அந்தக் குணத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று கருதி வெளிப்பட்டவன். ஆகவே என்னை அக் கதிக்கு ஆளாக்காதவர்களே எனது நண்பர்களாவார்கள்.எனதுகொள்கைகளுக்கும தூணை புரிந்தவர்களாவார்கள்.

ஏனெனில் வண்ணான், நாவிதன், பறையன், பள்ளன், செட்டி, நாயக்கன், நாடார் என்று சொல்லப் பட்ட "இழிகுல" மக்கள் என்பவர்கள் எல்லாம் இன்று ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியும், பூஜிக்கும் உற்சவம் செய்யப்பட்டும், நாட்டுக்கோ, ஆச்சாரங்களுக்கோ ஏற்பட்ட பலன்என்ன? என்றுகேட்கின்றேன். அதனால் அவர்கள் கதைகளைச் சொல்லி சிலர் வயிறு வளர்க்கின்றார்கள். சிலர் சோம்பேரிகளாய் வாழ்கின்றார்கள்என்பதைத்தவிரவேறுஒன்றும் இல்லை. அதுபோலவே இராமகிருஷ்ண 'பரமஹம்சர்', விவேகானந்த 'சுவாமிகள்', லோகமான்ய திலக 'மகரிஷி', இராமலிங்க 'வள்ளலார்' என்கின்ற சமீபகால மக்களால் நாட்டுக்கு ஏற்பட்ட பலன்என்ன? இவர்கள் படம் பூஜிக்கப்படுவது எனக்குத் தெரியும் இவர்களை100க்கு 75மக்களுக்கும் தெரியும். ஆனால் 100ல்ஒருவருக்கு நடந்த நன்மை என்ன? அதுபோலவே இன்று பிரத்தியட்சத்தில் இருக்கும் காந்தி மகாத்மாவும், திருப்பாலக்குடி மந்தானும் வணங்கப்படுவதும், அவதாரமாகவும், நபியாகவும் கருதப்படுவதும், அதோடு மாத்திரமல்லாமல் அவர்களது மலம் முதல் சுவாசக்காற்று மலம் வரை மதிக்கப்படுவது எனக்குத் தெரியும்.

"மகாத்மா"

திரு காந்தியைவிட 'மஸ்தான்' சாயபுக்கு உண்மையிலேயே மதிப்பு அதிகம் என்பது எனக்குத் தெரியும். எனெனில், அனேகர் திரு காந்தியை மனிதராகவே கருத வேண்டுமென்றே தங்கள் சுயநலத்திற்கும், ஆதிக்கத்திற்கும், வயிற்றுவளர்ப்புக்கும், திரு காந்தியை ஏமாற்றுவதற்கும் அவரை மகாத்மா என்று சொல்லுகிறவர்கள், திருப்பாலக்குடி சாயபை உண்மையிலேயே தெய்வத்தன்மை பொருந்தியவராக மதித்து, பூஜித்து வருகிறார்கள். எங்கள் ஊரில் இருந்து அனேகர் பி ஏ., பி. எல், எம். ஏ, முதலியவர்களும், உயர்ந்த ஜாதியார் பிராமணர் என்று தங்களை சொல்லிக்கொள்ளுபவர்களுமேபோய் அவரது எச்சிலை சாப்பிட்டுவிட்டும் வந்தார்கள். எச்சில் கலந்த தண்ணீரே பழனி பஞ்சாமிர்தம் போல் டின்னில் அடைத்துக் கொண்டு வந்துஇருக்கின்றார்கள். ஆனால், இவர்களால் நாட்டிற்கு ஏற்பட்ட பலன் என்ன? என்று கேட்கின்றேன்.

திருப்பாலக்குடி சாயபை ஒரு சாதாரண மனிதன் என்று எண்ணுத காரணத்தால், அவரது எச்சில் கலந்த தண்ணீரை குடித்து லாபம் பெறலாமென்று கருதி, மக்கள் மூடர்களாகவேண்டிய தாயிற்று. அதுபோலவே திரு காந்தியை மகாத்மா என்றுகருதியதால், அவரது காரியத்தால் ஏற்படும் தீமைகளும், கஷ்டங்களும், இழிவுகளும் எல்லாம் அதற்குமாறாக கருதப்படவேண்டியதாயிற்று. ஆனால் என்னுடைய காரியங்களுக்கு அப்படிப்பட்ட விபரீதப்பலன் ஏற்படவேண்டாம் என்றே கருதுகிறேன். எனக்காக எந்த மனிதனும் எவ்விதநஷ்டமும் அடைபவேண்டாம். எதையும் நம்பவேண்டாம். நான் கூறுபவைகளை வெது ஜக்கிரதையாய் அலசிப் பார்க்கவேண்டுமென்றே ஆசைப்படுகிறேன். ஆகையால் நான் தெய்வத்தன்மை பொருந்தியவனாக்கருதப்பட்டுவிட்டால் மக்கள்என்வார்த்தையை ஆராய்ந்துபார்க்கமாட்டார்கள். 'நான் அயோக்கியன்' என்று சொல்லப்பட்டால் என் வார்த்தைகள் மிகவும் ஜாக்கிரதையாக கவனிக்கப்படும். உதாரணமாக, இன்றைய கீதை என்பதை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் இருக்கும் அக்கிர

[தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க].

குடி அரசு

ஈரோடு 1931 அக்டோபர் 11உ

வகுப்புவாரி பிரதிநிதித்துவம்.

—:0:—

இன்றையதினம் "இந்திய மக்களுக்குள் இருந்துவரும் ஜாதி மத பேதங்களுக்குத்தகுந்தபடியான பிரதிநிதித்துவம் ஏற்படக்கூடாது" என்பதேதான் இந்திய காங்கிரஸ்கொள்கையாகவும், தீவிர தேசியமாகவும் இருந்து வருகின்றது. அன்றியும் இப்படி சொல்லுகின்றவர்கள்தான் தேசியவாதிகளாகக் கூடும். நம்மைப்பொறுத்தவரையிலும், 'ஜாதி மத வகுப்புப்படி மக்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும்' என்று சொல்லுவதற்கேயே தீவிர தேசியவாதிகள் லிஸ்டில் நமது பெயர் பதியப்படாமல், வகுப்பு வாதிகள் தேசத்துரோகிகள் லிஸ்டில்நமது பெயர் பதியப்பட்டுவிட்டது. ஆனபோதிலும் ஜாதி, மதம் வகுப்பு ஆகியவைகளை அடியோடு அழிக்கவேண்டும் என்று சொல்லுகின்ற 'ஜாதிமதத்துரோக' லிஸ்டிலும் நமது பெயர் மாத்திரமேதான் இருக்கின்றதே யொழிய மற்றபடியான 'தீவிர தேசியவாதிகள்" பெயரெல்லாம் ஜாதிமத வகுப்பைக்காப்பாற்றும் லிஸ்டிலேயேதான் பதியப்பட்டிருக்கின்றன. இதில் இருந்து பகுத்தறிவுள்ள மக்கள் ஜாதி மத வகுப்பு வாதிகள் யார்? என்பதை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். ஆனாலும் சொந்த அறிவேகிறிதும் இல்லாத பாமரமக்கள் நம்மை குறைகூறுவதில் இருக்கமாட்டார்கள். இந்த நாட்டில் சுமார் 20 வருஷ காலமாகவே பிராமணர்கள் மகாநாடு, வருணாச்சிரமமகாநாடு, கிறிஸ்துவர் மகாநாடு, முஸ்லீம்கள் மகாநாடு, சைவர் மகாநாடு, வைணவர் மகாநாடு, ஆரியதர்மபரீக்ஷித்து மகாநாடு, மற்றும் கூத்திரியர், வைசியர், பார்ப்பனரல்லாதார், பறையர், சக்கிலியர், வண்ணார், நாவிதர், நாயக்கர், பள்ளர்கள், வணியவைசியர்கள், வேளாளர், படையாட்சி, வேடுவர், கோமுட்டி வைசியர், நாட்டுக்கோட்டை வைசியர், ஆசாரி, தட்டையர், உடையார், நாடார், மறவர், கள்ளர், விசையர், தேவாங்கர், இரஜபுத்திரர், சாலியர், மராட்டியர், கைக்கோளர், செளராஷ்டிரர்கள், படிஜியர்கள், குயவர்கள், கோனார் முதலிய பல முக்கிய வகுப்புக்காரர்களின் தனித்தனி மகாநாடுகளும், மற்றும் இவற்றுள் நூற்றுக்கணக்கான உட்பிரிவு வகுப்புகள் மகாநாடுகளும் கடைபெற்ற வண்ணமாகவே இருந்து வருகின்றன.

மற்றும் தேசிய கொள்கைகள் எல்லாம் ஜாதிமத வகுப்புகளை காப்பாற்றுவதிலும் அவற்றின் பரம்பரை உரிமைகளை காப்பாற்றுவதிலும் பழக்க வழக்கங்களை காப்பாற்றுவதிலும் தவிர மாட்டோமென்று அந்தவகுப்பாருக்கு உறுதிகொடுப்பதாகவே தான் தீர்மானித்திருக்கின்றன. சர்க்காரார்எனக்கிறும்ஜாதிக்கொரு கலமும், மதத்திற்கொரு கலமும், வகுப்புக்கொரு கலமும், போடப்பட்டு அதை அனுசரித்தே சில்லி கிரிமினல் சட்டங்களும், ஆகியும் நடத்தப்பட்டு வருகின்றன. வியாபாரத்துறையிலும் ஜாதி வகுப்புகள் ஆதிக்கமும், விவசாயத்துறையிலும் ஜாதிமதவகுப்புகள் ஆதிக்கமும் இருந்து வருவதோடு சமூகத்துறையிலும் ஜாதிமத வகுப்பு ஆதிக்கம் தலை சிறந்தே விளங்குகின்றன.

உதாரணமாக, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு இராஜகோபாலாச்சாரியார் அவர்களை தலைவர் ஹோதாவில் 'எவனாவது கள் குடித்தால் அவனை ஜாதியை விட்டும் வகுப்பைவிட்டும் பகிஷ்காரம் செய்து அதாவது அவனுக்கு நீர், நெருப்பு, பூமி ஆகியவை யாரும் கொடுக்காமல் கொடுமை படுத்துவதான ஜாதி வகுப்பு கட்டுப்பாட்டை பலப்படுத்துங்கள்" என்று அறிக்கை விட்டிருக்கின்றார்.

இந்த மாதிரியான முறையில் தேசியம் முதல் காந்தீபம் வரை ஜாதி மத வகுப்பு பிரிவினைகளுக்கு இரும்புபூட்டுகள் போடப்பட்டது போல் உறுதிப்படுத்தி, கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அன்றியும், இவை சலபத்தில் ஒழிக்கப்பட யாராலும் சம்மதிக்க முடியாது என்பதிலும் எவரும் சுலபமாய் சந்தேகமும் கொள்ள முடியாது. ஒரு பறையர் ஒரு பொதுத்தெருவில் நடந்தால் இன்ன தண்டனை ஒரு வாணிய வைசியர் ஒரு பொது கோவிலுக்குள் போனால் இன்ன தண்டனை, ஒரு நாடார் கூத்திரியர் ஒரு பொதுக் குளத்தில் தண்ணீர் மொண்டால் இன்ன தண்டனை என்கின்ற பினல் கோட் சட்டமும், அதற்காக இன்ன நஷ்டம் கொடுக்க வேண்டும் என்கின்ற சிவில் கோர்ட்சட்டமும், கிராமமுன்சீப்முதல்பிரிவி கவுன்சில் வரை செலாவணியாகிக் கொண்டு தான் இருக்கின்றது.

அன்றியும் இதற்கு விரோதமாய் பேசுபவன் ஒவ்வொருவனும் ஒவ்வொரு ஜாதி மத வகுப்புக்கும் விரோதியேயாகின்றானே யொழிய, அவன் சமயசஞ்சீவனாவதில்லை. இவை மாத்திரமல்லாமல் பொதுரோட்டில் ஒரு இந்து மேளம் அடித்தால் மகமதியர்கள் கத்தியால் குத்துகிறார்கள். பொதுத்தெருவில் ஒரு மகமதியர் மாட்டைப் பிடித்துக்கொண்டு போனால் இந்துக்கள் அவரைக்கத்தியால்வெட்டுகிறார்கள் சீக்கியரும், முகமதியரும் தங்களை ஒருவருக்கொருவர் ஜன்ம விரோதிகள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறார்கள். "பிராமணர்"ருக்கும் "சூத்திர"ருக்கும் இருக்கும் "ஒற்றுமை"யை எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. இந்த நிலைமையில் உள்ள மக்களுக்கு ஜாதிப் படியோ, மதப்படியோ, வகுப்புப் படியோ பிரதிநிதித்துவம் மாத்திரம் கூடாதாம்!

எனெனில், அது தேசியத்திற்கு விரோதமாகி விடுமாம்! ஆனால் அப்படிப்பட்ட ஜாதிமத வகுப்புகளை என்றும் நிலையாய் இருக்கும்படி காப்பாற்றுவது மாத்திரம் தேசீயமாம். அதற்காகவே திரு. காந்திக்கும் காங்கிரசுக்கும் சுயராஜ்யம் வேண்டுமாம் இந்தநிலைமையுள்ள இதனை யோக்கியதை ஒரு புறம் இருக்க பொது ஜனங்களுக்கு அளிக்கப்படும் (பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் முறை) நிலைமையைப் பற்றி சிறிது யோசிப்போம்.

ஓட்டானது கல்வியைப் பொறுத்ததாகவும் பணத்தைப் பொறுத்ததாகவும், வரும்படியைப் பொறுத்ததாகவும் இருக்க வேண்டும் என்ற அளவில் தான் நிர்ணயிக்கப் படுகின்றது. இந்தியாவில் உள்ள மற்ற எந்த மதத்திற்கும், எந்த ஜாதிக்கும் எந்த வகுப்புக்கும் கல்வி, சொத்து, வரும்படி ஆகியவைகள் இருந்தாலும்பஞ்சமர், ஆதிதிராவிடர், தீண்டப்படாதார், என்கின்ற 7கோடி மக்களில் கல்வியோசொத்தோ குறிப்பிட்ட வரும்படியோ 1000ல் ஒருவருக்காவது இருக்கின்றதா என்றுபார்த்தாலே அதன் இல்லாமை உண்மை நன்றாய் விளங்கும்.

பார்ப்பனர்களுக்கு 100க்கு 100 பேர் கல்வி, சொத்து, வரும்படி ஆகியவைகள் எல்லாமும் அல்லது ஏதாவது ஒன்றுடையவர்கள் ஆகவேதான் இருப்பார்கள். ஆதலால் அவர்கள் எல்லோருமே எப்படியும் எந்தத் தொகுதியிலும் ஓட்டர்களாகி விடுவார்கள். மற்றபடி "மேல் ஜாதிக்காரர்"என்பவர்களிலும்அரைவாசிப் போவது ஓட்டாளர்களாக ஆகிவிடுவார்கள். நடுஜாதிக்காரர் என்பவர்கள் அரைக்கால் வாசிப்பேர்களாவது ஓட்டர்களாகி விடுவார்கள். மற்றும் சில "கீழ்ஜாதி"க்காரர் என்பவர்களும்வீசம் வாசிப்பேர்களாவது ஓட்டர்களாகி விடுவார்கள், ஆனால், பறையர், சக்கிலியர், பள்ளர் முதலிய "தீண்டாத" வகுப்பார் என்பவர்களில் முக்கிப் பெயராவது அதாவது 300ல் ஒரு பாகம் பெயர்களாவது ஓட்டராக இருக்கமுடியுமா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

நிற்க, மற்றொரு விதத்திலாவது அதாவது அவர்களுக்கென்று சில ஸ்தானங்களை பொதுத்தேர்தலில் ஒதுக்கி வைத்தாலும் உண்மையான பறையரோ, சக்கிலியரோவரமுடியுமா? என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். பறையனிலேயே பட்டை நாமம் தளசிமணி போட்டுக்கொண்டு "மற்ற பயையனைத் தொட்டால் தீட்டு" என்று கருதுகிறவனும், விபூதி, உத்திராக்ஷம் போட்டுக் கொண்டு பறத்தெருவுகளுக்குள் போய்வந்தால்குளிக்கின்றவனும், தனது சொந்தநலத்திற்கு சமூகத்தை விற்பவனும் தான் வரமுடியுமே யொழிய இவற்றிற்கு சௌகரியமில்லாதவன் வரமுடியுமா? என்று பாருங்கள். ஒருக்காலும் முடியாது. எனெனில், உண்மையாகவே தங்கள் சமூகம்முன்னேற வேண்டும் என்று கருதுகின்றவனையும், தன்னை என் மற்றவர்கள் பறையன் என்று சொல்லுகின்றார்கள் என்று கருதுகின்றவனையும் மற்ற ஜாதியார்கள் ("மேல் ஜாதியார்கள்") தெரிந்தெடுக்க ஒரு காலும் சம்மதிக்க மாட்டார்கள். மற்றபடி கிராமங்களிலே, அங்குள்ள பிராஹ்மணர்கள் தங்கள் குதிரைக்காரனையும், நாய்க்கு பதிலாய் இருக்கும் அடிமையையும் மாத்திரம்தான் தெரிந்தெடுத்ததாய் சடங்கு செய்து, அவனை தங்கள் கைத்தடி மூணியிலேயே வைத்திருப்பார்களே யொழிய தங்களுடன் சரி

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சமமாய் உட்கார நினைப்பவனை கிராமத்திலேயே வைத்திருக்க மாட்டார்கள்.

இவை நிற்க, 21 வயது வந்த ஆண்களுக்கெல்லாம் ஓட்டு உரிமை கொடுப்பதாய் வைத்துக் கொண்டாலும், அந்த அந்த கிராமத்து பிராசுதாரன் சொன்னபடி தான் ஆசாமிகள் அபேக்ஷகர்களாக நிற்கவும், ஓட்டர்கள் ஓட்டுகள் போடவும் முடியுமே அல்லாமல், மற்றபடி பிரதிநிதித்துவத்திற்குத் தகுந்தவர்கள் ஒரு நாளும் வரமுடியவே முடியாது.

ஆகவே, மற்ற ஜாதி மத வகுப்பார் இடம் எப்பிரிவை இல்லை என்று கருதுகின்ற எந்த சிறுவகுப்புக்காரர்களாய் இருந்தாலும், அவர்களுக்கு பிரதிநிதித்தும் இருக்கும்படியாகவும், அந்த பிரதிநிதித்துவத்தை அவர்களே சகல உரிமைகளுடன் தெரிந்தெடுத்துக்கொள்ள தகுந்ததாகவுமேதான் சுயாஜிய ஆக்ஷி முறை ஏற்படுத்தப்படவேண்டும். அப்படிக்கில்லையானால் ஒருபொதுவான, அதாவது இந்திய ஜாதி மத வகுப்பு வித்தியாசத்தில் கட்டுப்படாத ஒரு கூட்டத்தின் ஆக்ஷியில்தான் விடவேண்டும் என்று சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். அதைவிட்டுவிட்டு 'என் ஜாதி உயர்வையும, அனுபவத்தையும் விடமாட்டேன். ஆனால் நான் கீழ் ஜாதி என்று வதைத்து, கொடுமைப்படுத்திக்கொண்டிருக்கின்றவனுக்கு நான்தான் தர்ம கர்த்தாவாய் இருப்பேன்." என்றால் அதுவடிகட்டின அயோக்கியத்தனமேயாகும்.

நிற்க, திரு காந்தியவர்கள், 'மூகமதியருக்கும் சீக்கியருக்கும் மாத்திரம்தான் தனிப்பிரதிநிதித்துவம் தனித்தொகுதி மூலமாய் வேண்டுமானாலும் கொடுக்க சம்மதிபேன். ஆனால் தீண்டாதார் என்கின்ற வகுப்புக்குமாத்திரம்கொடுக்கமாட்டேன்' என்று சொல்லுவதும், திரு மாளவியா அவர்கள் 'அதற்கும் ஆமாம்சாமி' போடுவதும் என்னால், இதில் கடுகளவாவது நீதியோ அல்லது நல்லஎண்ணமோ இருக்கின்றதா என்று பார்க்கும்படி வாசகர்களை கேட்கிறோம்.

சாயபு வாய்வார்த்தை வாயில் இருக்க, முதலில் கையை நீட்டி விடுகிறார். உடனே ஆயிரக்கணக்கான சாயபுகள் மேல்விழுந்து ருசுக்கிவிடுகின்றார்கள். அவர்களிடத்தில் அவ்வளவு கட்டுத்திட்டமும், வீரமும் இருக்கின்றது. ஆதலால் அவர்களுக்கு பதில பேசாமல், "கொடுப்பதற்குள் என்ன சாயபே அவசரம்" என்று மன்னிப்புக்கேட்க வேண்டியிருக்கின்றது. அதுபோலவே சீக்கியர்களும் வாய் வார்த்தை வாயிலிருக்க கிருபாணை [கத்தியை] எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

அன்றியும், சீக்கியப்பூச்சாண்டிகாட்டி சாயபை எமாற்றவேண்டியும் இருக்கின்றது. ஆதலால் சீக்கியர் எண்ணிக்கை லக்ஷக்கணக்குள் இருந்தாலும், அவர்களுக்கு தனித்தேர்தல் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டியிருக்கின்றது. ஆனால், தீண்டாதஜாதியார் என்பவர்களோ எழு கோடி பேர் இருந்தாலும் அவர்களுக்கு மானம் இலாமல், மனிதத்தன்மை நினைத்துப்பார்ப்பதற்கில்லாமல் வீரம் என்பதற்கு அர்த்தமே தெரியமுடியாமல, உதை தகாலுக்கு முத்தம் இடும்மிருகத்தன்மையில் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலாலும், அவர்கள் இன்னும் "மேல ஜாதியார்" களுக்கு உழைத்துப் போடவேண்டிய அடிமைகளாயிருக்கவேண்டியிருப்பதால், அவர்களை முன்னேற்றமடைய விடமுடியா தென்று சொல்லி அவர்களுக்குத் தனிதேர்தல், தனிபபிரதிநிதித்துவம்காங்கிரசும், காந்தியும் மாளவியாவும் மறுக்கவேண்டியதாகி விட்டது.

ஆகவே காங்கிரசின்-திரு. காந்தியின், திரு. மாளவியாவின் தேசபக்தியும், தேசியமும் வகுப்புப் பிரதிநிதித்துவத்தை எதிர்ப்பதல்லாமல் வேறு கொள்கை ஒன்றும் முக்கியமானதல்லவென்றே சொல்லுவோம்.

தவிர "சர்க்காரார் தான் ஜாதி மத வகுப்பு பேதங்களால் ஜனங்களைப் பிரித்து விட்டு, சுயராஜ்யம் கொடுக்காமல், சூட்சி செய்கின்றார்கள்' என்று திரு. காந்தியும், கிளிப்பிள்ளை தேச பக்தர்களும் அடிக்கடி சொல்வதுண்டு. ஜாதிமத வகுப்புகளை பிரிட்டிஷ் அரசாங்கம் பிரித்ததா? அல்லது இந்தியஇராம இராஜ்யம் பிரித்ததா என்று கேட்கின்றோம்.

அன்றியும், முஸ்லீம்கள் விஷயத்தில் அவர்களுக்கு நியாயம் வழங்குவதிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக தேசிய முஸ்லீம் என்றும் தேசத்துரோக முஸ்லீம் என்றும் பிரித்து வைத்து, "நீங்கள் இரண்டு பேரும் ஒன்று சேர்ந்து வாருங்கள். உங்கள் பங்கைக்கொடுக்கத் தடையில்லை" என்று சொல்லுவது திரு. காந்தியா? அல்லது பிரிட்டிஷ் அரசாங்கமா? என்று கேட்கின்றோம்.

திரு. காந்தி அவர்களின் சட்டைப்பையின் டிக்கட் பாக்கட்டில் இருக்கும் திரு: அன்சாரியைத்தவிர தேசிய முஸ்லீம் தலைவரோ, தொண்டரோ, பின்பற்றுபவரோ வேறு முஸ்லீம் யார்? என்று கேட்கின்றோம்.

அப்படித்தான் இருந்தாலும் 8 கோடி முஸ்லீம்களில் எத்தனை கோடிப் பேர்கள் "தேசிய" முஸ்லீம்கள்? எத்தனை கோடிப் பேர்கள் "தேசத்துரோகமுஸ்லீம்கள்" என்று சொல்லக் கூடும்? என்று கேட்கின்றோம். 'ஏழைகளுக்காக இரக்கற்றவர்களுக்காக, வயிற்லாப்பூச்சிகளானகோமவராகிகளுக்காக சிறுபான்மையோருக்காகதாழ்த்தப்பட்டவருக்காகத் தான் நான் பாடு படுகின்றேன். அவர்கள் பிரதிநிதியாகத் தான் நான் வட்டமேஜை மகாநாட்டிற்கு வந்து இருக்கின்றேன்" என்று பல்லவி பாடி மந்திரம் ஜபிக்கும் திரு காந்தியவர்கள் உண்மையில் யாருடைய பிரதிநிதியாய் சீமை சென்றிருக்கிறார்? என்பதை சற்று கவனித்துப் பாருங்கள்.

ஆகவே வரப்போகும் சுயராஜ்யத்தில் எவ்வளவு சிறிய சுதந்திரம் கிடைத்தாலும், எவ்வளவு பெரிய சுதந்திரம் கிடைத்தாலும் அது இந்தியாவில் உள்ள-இருக்க வேண்டிய எல்லா ஜாதி மத வகுப்புக்கும் சரியான பிரதிநிதித்துவமாய் இருக்கக் கூடியதாய் இருந்தால் தான், இந்திய மக்களால் ஒப்புக் கொள்ளக் கூடியதாகும். இல்லாதவரை எதிர்க்க வேண்டியதாகும்.

ஈ. வெ. இராமசாமி.

திரு. ஈ. வெ. இராமசாமியவர்கள், வயிற்றில் ஏற்பட்டிருக்கும் உபாதைகளின் காரணமாகவும், மயக்கத்தின் காரணமாகவும் சென்னை இராயபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றார். அவர் பூராவும் குணமடைவதற்கு குறைந்தது இன்னும் ஒரு வார காலமாவது ஆஸ்பத்திரியிலேயே இருக்கவேண்டியிருக்கின்றது. அதன் காரணமாக அகால் நிச்சயிக்கப் பட்டிருந்ததும், ஒப்புக்கொள்ளப்பட்டிருந்ததுமான காரியங்களும், பல ஊர்களுக்கும் சென்று பிரசங்கம் செய்வதாக ஒப்புக்கொண்டிருந்தது மான காரியங்கள் யாவும் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றது என்பதை வருத்தத்துடன் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஹாஜிஜனாப் ஜமால் முகம்மது, திருவாளர்கள் டாக்டர் பி. வரதராஜலுநாயுடு, ஆர். கே. ஷண்முகம், திருஞானசம்பந்தம், சுப்பிரமணிய பிள்ளை ஆகியவர்களும், இன்னும் அனேக கனவான்களும் திரு. ஈ. வெ. இராமசாமியை ஆஸ்பத்திரிக்குச் சென்று, பார்வையிட்டுத் திரும்பினார்கள்.

திரு. பொன்னம்பலம் அவர்கள் ஆஸ்பத்திரியில் திரு. ஈ. வெ. இராமசாமியுடனிருந்து, அவருக்குவேண்டியஉதவிகளைச்செய்து கொண்டும், அவரை கவனித்துக் கொண்டும் வருகிறார்.

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

மம், தந்திரம், முன்னுக்குப் பின் முரண், மக்களே மக்கள் இழிவு படுத்துவது என்பவைகள் யாருடைய புத்திக்காவது விளங்குகின்றதா? என் விளக்கவில்லை? அதைச்சொன்ன மனிதனை இன்னான் என்றே, எதற்காகச் சொன்னான் என்றே உணர முடியாமல் 'பகவான் சொன்னார்' என்றுசொல்லப்பட்டதால் இன்றையஉலக மக்கள் எல்லோருக்குமே அது பொருந்துவதாகும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு புகழப்படுகின்றது. அதுபோலவேதான் புராணங்கள், சாஸ்திரங்கள், வேதங்கள் என்கின்ற ஆபாசக்களஞ்சியங்கள் எல்லாம் மதிக்கப்படுகின்றன.

ஆகவே, அந்தப்படி மதிக்கப்படாமல் எனது வார்த்தைகள், அபிப்பிராயங்கள் அதற்குண்டான சரியான மதிப்புப்பெறவேண்டுமானால், நான் அயோக்கியனாகவும், பணம் சம்பாதிப்பவனாகவும், திருடனாகவும் கருதும்படியாக பிரசாரம் செய்பவர்கள் உதவி செய்தவர்களாகவே ஆவார்கள். எந்தக் காரணத்தைக்கொண்டும் மனிதத்தன்மைக்கு மீறிய எந்த குணத்தையும் என் மீது சுமத்திவிடாதீர்கள்.

தூத்துக்குடியில் சுமார் 20, 30 சுவர்களில் "இராமசாமிக்கழுதைக்கு செருப்படி" என்று எழுதியிருந்தது. ஆனால் இதுவரை அடிவிழுகவில்லை இங்கும "இராமசாமிக்கழுதை செத்துப்போய்விட்டது" என்றும் "இராமசாமியின் மனைவி நாகம்மாள் அபிசாரி" என்றும் எழுதி இருந்தது.

"இராமசாமிப்பெரியார் சிறுசீகியாய் இருக்கவேண்டும்" என்றுஎழுதியிருப்பதைப்பார்த்து சந்தோஷப்பட்டிருந்தேனேயானால் இராமசாமிக்கழுதை செத்துப்போய்விட்டது" என்பதற்குள்

வருத்தப்படவேண்டும். அது போலவே, "இராமசாமி மனைவி கற்புக்கரசி" என்று எழுதி இருந்ததைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து, மாதம்மும்மாரிமழை வரச் செய்து பயன் பெற்று இருந்தால் "இராமசாமிமனைவி நாடோம் மாள் அவிசாரி" என்பதற்கு நான் விசனப்படவேண்டும்.

ஆகவே, அதைப்பற்றிக்கவலை யில்லை. ஆனால், இவைகளிலிருந்து ஒரு அளவுக்கு நான் 'வெற்றி பெற்று விட்டேன்' என்பதை மாத்திரம் உணருகிறேன். என்னை அறியாமலே நான் ஏதாவது மதிப்புப் பெறவேண்டுமென்று கருதி இருந்தாலும், நானே எனக்குத்தீங்கு தேடிக்கொண்டவனேயாவேன். அது எப்படியோ போகட்டும்.

பறையனுக்குப் பெண் கொடுப்பாயா?

ஜாதியை நாங்கள் ஒன்றுக்குகின்றோமோ. ஆம். ஆக்கமுயற்சிக்கின்றோம். அதில் சந்தேகமில்லை. ஆனால், சீக்கிரத்தில் முடியுமா என்பது சந்தேகம். மனிதஜாதி ஒன்றுகித்தான் தீரவேண்டும். அதற்கு தடை செய்கின்றவர்கள் அயோக்கியர்கள், மடையர்கள் என்று தைரியமாய்ச்சொல்லுகின்றோம். எங்கள் பெண்களை பறையனுக்குக் கொடுப்போமா? என்று கேட்கப்படுகின்றது.

இது ஒரு அறிவீனமான கேள்வி, அல்லது அயோக்கியத்தனமான கேள்வி என்றே சொல்லுவேன். ஏனெனில், எங்கள் பெண்களை நாங்கள் அவர்களுக்கு இஷ்டப்பட்டவர்களுடன் கூடி வாழச் செய்யப்போகின்றோமேயொழிய, எங்களுக்கு இஷ்டமானவர்களுக்குக் கொடுக்கும் உரிமையைக் கொண்டாடுகின்றவர்கள் அல்ல. பெண்களை ஒரு சாமானைக் கருதி, ஒருவருக்குக்கொடுப்பது என்கின்ற முறையை ஒழிக்க முயற்சிக்கின்றோம்.

நண்பர்களே! நாங்கள் ஆதிதிராவிடர்களைப்பற்றிபேசும்போது பார்ப்பனர்கள் மனவருத்தமடைவதில் அருத்தம் உண்டு. ஆனால் பார்ப்பனரல்லாதார் மனவருத்தமடைவதில் சிறிதும் அர்த்தமில்லை. அது வெறும் மூட்டாள் தனமும், மானமற்றதன்மையுமேயாகும். ஏனெனில் நமது சமூகத்தில் பார்ப்பனர் என்கின்ற கூட்டத்தாரான 100க்கு 3 வீத மூளை ஜனத்தொகைநீங்கி,மற்ற ஜனங்களுக்கு இந்த நாட்டில் சூத்திரன், (அடிமை) ஆதிதிராவிடன் (பறையன்) என்கின்ற பட்டமில்லாமல் வேறு எந்தப்பட்டத்தோடாவது யாராவது இருக்க முடியுமா? இருக்கின்றார்களா? என்று கருதியும், அனுபவத்தையும் கொண்டு பாருங்கள். சூத்திரன் என்கின்ற கலத்தில் நீங்கள் பதியப்பட்டிருப்பதில் உங்களுக்குச் சிறிதாவது மானம் இருந்தால் பறையன் என்கின்ற பட்டம் போகவேண்டுமென்பதில் கடுகளவாவது வருத்தமிருக்குமா? என்று கேட்கின்றேன்.

பறையன் பட்டம் போகாமல் உங்களுடையை சூத்திரப்பட்டம் போய் விடும் என்று கருதினீர்களேயானால் நீங்கள் வடிகட்டின முட்டாள்களேயாவீர்கள்.

மற்றும், பேசப்போனால் பறையன் சக்கிலி என்பதற்கு இன்னார் தான் உரிமை யென்றும், அது கீழ் ஜாதி யென்பதற்கு இன்னது ஆதாரமென்றும் சொல்லுவதற்கு ஒன்றுமே இல்லை. மேல் பலமேயொழிய, தர்மமேயொழிய வேறில்லை. ஆதலால், அதாவது சீக்கிரத்தில் மறைந்து விடக்கூடும், உங்கள் சூத்திரப்பட்டத்திற்குக் கடவுள், மதம், வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், கோவில் ஆகிய அநேக ஆதாரங்கள் உண்டு. இத்தனையையும் நாசமாக்கி, அடியோடெழித்தாலல்லாமல் உங்கள் தலையில் இருக்கும் சூத்திரப்பட்டம் கீழே இறங்காது.

ஆகவே, யாருக்காவது மானவுணர்ச்சி இருந்திருந்தால் "நீங்கள் ஜாதி ஒன்றுக்குகின்றீர்களே" என்று நம்மைக் கேட்டிருக்கமாட்டார்கள்.

ஆகவே ஆதிதிராவிடர் நன்மை யைதேகாரி பேசப்படும் பேச்சுகளும்,செய்யப்படும்முயற்சிகளும், ஆதிதிராவிடரல்லாத மக்களில் பார்ப்பனரல்லாத எல்லாருடைய நன்மைக்கும் என்பதாக உணருங்கள்.

நான் மாறுவது.

நான் அடிக்கடி கொள்கைகளில் மாற்றமடைவதாக சொல்லப்படுகின்றது. வாஸ்தவமாக இருக்கலாம். நீங்கள் ஏன் அதை கவனிக்கின்றீர்கள்? ஒரு மனிதன் அவன் பிறந்தது முதல் இன்றுவரை திருடிக்கொண்டே இருக்கின்ற ஒரே நிலைக்காரன் என்றுசொல்லப்பட்டால் அவன்மகாயோக்கியனா? என்றுகேட்கின்றேன்: எந்த மனிதனும் ஒரே நிலைமையில் இருக்கவேண்டும் என்று நீங்கள் ஏன் ஆசைப்படுகின்றீர்கள்? அதனால் உங்களுக்கு என்ன லாபம்? மாறுதல் முழுப்போக்குள்ளதா? பிற்போக்குள்ளாத? அதனால் மக்களுக்கு நன்மையா? தீமையா? என்பதை போன்ற வைகளை கவனிக்கவேண்டியது அறிவாளிகளின் கடமையாகும்.

மற்றும், பொது நன்மையை உத்தேசித்து கஷ்டப்படுகின்ற மக்கள் நன்மையை உத்தேசித்து மாறினேன்? அல்லதுசுயநலத்திற்கு அக்கிரமமான லாபமடைவதற்கு மாறினேன்? என்று பார்க்கவேண்டும். யோக்கியன், அறிவாளி, ஆராய்ச்சியாளி, பொறுப்பாளி, கவலையாளி ஆகியவர்கள் மாறவேண்டியது அவசியமாகலாம். அதைப்பற்றிய கவலை ஏன்? யார் எப்படி மாறினாலும் பார்க்கின்றவர்களுக்கு புத்தியும் கண்ணும் சரியாய் இருந்தால்மாற்றத்தைப் பற்றி ஒன்றும் ஆபத்து வந்து விடாது.

நான் பலதடவை மாறி இருக்கலாம். பல குட்டிக்கரணங்கள் போட்டிருக்கலாம். சுயநலத்திற்காகவும் குட்டிக்கரணம் போட்டிருக்கலாம். பச்சோந்தியாய் இருக்கலாம். அதனால் உங்களுக்கென்ன கெடுதி? நாடகக்கொட்டகையில் நாடகம் பார்க்கின்றபோது ஒரு மனிதன் எத்தனை வேஷம் மாறி மாறிப் போட்டு நடிப்பதை நீங்கள் காசு கொடுத்துப்பார்த்து விட்டு ரசித்தபனையும் புகழ்ந்துகொண்டு போகின்றீர்களா? அல்லதுஇல்லையா? என்பதைநினைத்துப்பாருங்கள், அதனால்நீங்கள் ஏமாந்தாபோய்விடுகின்றீர்கள்? அதுபோல் எங்களை நினைத்துக்கொண்டு வந்து நாங்கள் சொல்வதைக் கேட்டுவிட்டு போங்கள்.

பிறகு, உங்கள் புத்திக்குபட்டதை ஒப்புக்கொள்ளுங்கள். மற்றதைத்தள்ளிவிடுங்கள். இன்றையதினம் நான் சொல்லுபவைகள் கூட எனக்கு முடிந்த முடிவா என்பதுசந்தேகம்தான். அன்றியும் உங்களுக்கு இன்றைய நிலைமையில் கால வர்த்தமானத்தைப் பொறுத்தவரையில் இவ்வளவுதான் சொல்லலாம் என்று கருதிக்கொண்டு சில விஷயங்களில் சுளவாகவே பேசுகின்றேன் என்றும் சொல்லலாம்.

கோயில் கட்டிய மக்கள் கோயிலை இடிக்க வேண்டியவர்களாகி விடுவார்கள். அஹிம்சை பேசுபவர்கள், பலாத்காரத்தை பேசவேண்டியவர்களாகி விடுவார்கள். இராஜவிசுவாசிகள்இராஜதுரோகிகள் ஆகிவிடுவார்கள். திருடக்கூடாது என்பவர்கள் கொள்ளை அடிக்கச்சொல்லுவார்கள். இப்படியாக அபிப்பிராயங்கள்மாறிக்கொண்டுபோகலாம். இவற்றையெல்லாம் அபிப்பிராயங்கள்மாறியதாலேயேகுற்றம்என்று சொல்லிவிட முடியாது. தங்களை நல்ல சூத்திரர்கள் என்று சொல்லிக்கொண்டு பார்ப்பனர்கள் காலைக்கழுவிய தண்ணீருக்கு பவுண்கொடுத்து சாப்பிட்டவர்கள், "இன்று சூத்திரன் என்றால் ஆத்திரங்கொண்டடி" என்றும் "பார்ப்பனர்கள் ஜாக்கிரதை" என்றும் ஏன் சொல்லுகின்றார்கள்? இந்த மாற்றத்தால் இப்படிச்சொன்னவர்கள் அயோக்கியர்களாகி விடமுடியுமா? தவிர "சூத்திரன் பணம் வைத்திருந்தால்பிராமணர்கள் பலாத்காரத்தால் அதை பறித்துக்கொள்ளலாம" என்ற மனுதர்ம சாஸ்திரத்தில் இருந்தது மாறி இப்பொழுது வெள்ளையர் தர்மத்தில் "தந்திரங்களினாலும் சூக்ஷிகளாலும் மாத்திரம் தான் பறித்துக் கொள்ளலாம்" என்கின்றதான மாறுதல ஏற்பட்டுவிட்டது. நாளை ஒருசமயம் சமதர்ம காலத்தில் 'பிராமணன் (சரீரத்தில் பாடுபடாதவன்) சொத்து வைத்திருந்தால் மற்றவர்கள் பலாத்காரத்தில் பிடுங்கிக்கொள்ளலாம்'என்றுவற்பட்டாலுவற்படலாம். இத்தமாதிரி மாறுதல்கள்காலத்திற்கும், பகுத்தறிவுக்கும்,நாட்டின்முற்போக்குக்குவற்றுபோல்நடந்துதான்தீரும்எனவேநான்மாறுதலடைந்து விட்டேன் என்று சொல்லப்படுவதில் வெட்கப்படவில்லை. நாளை நான் எப்படி மாறப்போகின்றேன் என்பது எனக்கே தெரியாது. ஆதலால நான் சொல்வதை கண்மூடித்தனமாய் நம்பாதீர்கள்.

தேசீயத்திற்கு விரோதியாவது.

மற்றும் நான் தேசியத்திற்கு விரோதியென்று சொல்லப்படுகின்றது. கடவுளுக்கும், மதத்திற்கும் விரோதியான ஒருவன் கேவலம் தேசீயத்திற்கும் விரோதியாவதுஒரு அதிசயமல்ல. மற்றபடி நாடுடைய தேசீயத்திற்கும்நான் விரோதியா? அல்லது இல்லையா? என்பதுவிவகாரத்திற்கிடமானதாயிருந்தாலும், உயர் திரு காந்தியவர்களின் தேசீயத்திற்கு நான் சரியானவிரோதியேயாகும். அதிலும் பார்ப்பனீய தேசீயத்திற்கு எவ்வளவு விரோதியோ அதைவிட பலமடங்கு அதிகமான விரோதியேயாகும். காச்சி நவஜவான் வீரர்கள் "காந்திவீழ்க! காந்தீயம்வீழ்க!!"என்று சொல்வதற்கு 2, 3 வருஷத்திற்கு முன் பிருந்தே நான் காந்தி தேசியத்திற்கு விரோதியா

இருக்கின்றேன் காந்தியம் ஒழிந்தொழிய இந்த நாட்டிற்கு விடுதலையோ, சமத்துவமோ, சுயமரியாதையோ இல்லை என்று கருதிக் கொண்டு இருக்கின்றவன். காந்தி தேசீயமென்னும் வெளிவேஷத்தை ஆகியைப் பிடுங்கி, பார்ப்பனனிடமும், பணக்காரனிடமும் கொடுத்து, வருணாச்சிரம ஆட்சி ஆக்கவேண்டும் என்கின்ற ஒரே கொள்கை கொண்டதுதான்.

உதாரணம் வேண்டுமானால் அவரது காதர் தந்துவனையும், ராமராஜ்ஜேற்றத்தத்துவத்தையும் நன்றாய் கவனித்துப் பார்த்தால் அப்பொழுது அவைகள் வருணாச்சிரமத்தை ஆதரிப்பதே ஒழியவேறில்லை என்பதை விளக்கும். அன்றியும், திரு. காந்தியே "வருணாச்சிரமத்தை நிலைநிறுத்தவே சுயராஜ்யத்தை வேண்டுகிறேன்" என்பதுவாக பல தடவை சொல்லி இருக்கிறார்.

அவர் எண்ணமெலாம் "இந்தியாவைப் பழங்கால நிலைமைக்குக் கொண்டு போக வேண்டு" மென்பதேயாகும். இந்தக் கருத்தை உள்ளே வைத்துக் கொண்டுதான் அதற்கு இடையூறாயிருக்கும் பிரிட்டிஷ் ஆட்சி மீது மக்களுக்கு விரோதம் ஏற்படுமாறு நடிக்கின்றார். முஸ்லிம் ஆட்சியைவிட, மற்றும் எதாவது ஆட்சியைவிட, பிரிட்டிஷ் ஆட்சி மோசமானதாக இருக்கலாமேயொழிய ராமன், அரிச்சந்திரன், கிருஷ்ணன், மனு, சோசோழ பாண்டியன் முதலியவர்களின் ஆட்சியை விட 1000 பங்கு வெள்ளையாட்சிமேலானதென்றேசொல்லுவேன். உதாரணமாகதிரு. திரவிட நாத்டாகூர் அவர்கள் முன்நாளாள் பேசியதை கவனியுங்கள்.

"பகுத்தறிவின்மை, மூட நம்பிக்கை, ஜாதிப் பிரிவு, மதத்துவேஷம் முதலிய அவகுணங்கள் நமது தேசத்தின் பெரும் விரோதிகள். அன்னிய ஆட்சியை விட அவை கொடியன. இவை ஒழிந்தாலொழிய பூரண சுயேச்சை என்பது கிடையாது" என்று சாந்தி நிகேதனத்தில் இருந்து உலக மக்களுக்கு சேதி அனுப்பியிருக்கின்றார். திரு காந்தி தேசீயம் இந்தியாவின் மேற்படி விரோதிகளை ஒழிக்குமா? அல்லது அவைகளை வைத்துக் கொண்டேயினதாலாதன் அன்னிய ஆட்சியை ஒழித்து, அங்கே மேலைநாகரீகத்தை நிலை நிறுத்துமா? யோசித்துப் பாருங்கள். தேசீயம் என்று சொல்லிவிட்டதாலேயே பாம்பு சுப்புற்றிலையையில் வேண்டுமா? இருக்கவேண்டுமா? என்று கேட்கின்றேன் சகோதரர்களே! நமது கொள்கை காந்தி தேசீயமான காங்கிரசுக்கு விரோதமானதேயாகும் வருணாச்சிரமத்திற்கும், முதலாளி தத்துவத்திற்கும் விரோதமானதேயாகும். மேலும், அவற்றிற்கு அனுகூலமாயிருக்கும் கடவுள், மதம் என்பனவாகியவற்றிற்கும் விரோதமேயாகும். இன்னும் எங்கு போய் நிற்குமென்று எனக்கே சொல்லமுடியாது ஆகவே நீங்கள் எதற்கும் உங்கள் பகுத்தறிவை தைரியமாய் உபயோகியுங்கள்.

கேள்விகள்.

பிறகு கேள்விகள் பல வந்தன. அவைகள் மேஜையின் மீது வைக்கப்பட்டன, சொற்பொழிவு முடிந்ததும் அவைகளை எடுத்துக் கொண்டு இவ்வளவுதானா? இனியும் உண்டா? என்று கேட்டார். மறுபடியும் சில வந்தன. பிறகு அவ்வளவையும் எடுத்துக் கொண்டு ஒவ்வொன்றாக பதில் சொன்னார்.

கேள்விகளாவன:—

1. நீங்கள் தாடி வைத்திருப்பதின் காரணம் என்ன?
2. சங்கள் என் இராமசாமி என்று பெயர் வைத்திருக்கின்றீர்கள்?
3. கோவிலில் சிலர் கடவுள் என்ன வணங்குவதை நீர் கவலை என்பது தவறுஷமல்லவா? மற்றவர்கள் எல்லாம் அறிவாதவர்களா?
4. மதம் வேண்டாம் என்றால் நாங்கள் வேறு எந்த மதத்தை ஸ்தாபிக்கப் போகின்றீர்கள்?
5. ஸ்பெயின் தேசத்து திராவிடர்களின் வரலாற்றைச் சொல்லும்?
6. காங்கிரஸ் மத நடு நிலைமைத் திட்டத்தால் மதப்பூசல் ஒழியுமல்லவா?
7. வைசிராய் நமக்கு இருக்கும் விசேஷ அதிகாரத்தால் சாரதா சட்டத்தை அழலுக்கு கொண்டு வந்திருக்கக் கூடாதா?
8. ஸ்டாலின் ஆளுகிறார், முசலோனி ஆளுகிறார் ஹிட்லர் போல் சமமன்னா? நீர் விரும்புவது எது?
9. ரஷியாவில் மதம் ஒழிக்கப்பட்டதா? இருக்கின்றதா?
10. கடவுள் என்றவார்த்தைக்கு நாங்கள் கொள்ளும் பொருள் என்ன?
11. உமது தாய், தகப்பனை உமக்குத் தெரியுமா? எப்படித் தெரிந்தீர்?
12. தர்களைப்பற்றி வரும் பழிப்புரைகளுக்கு என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள்?

இந்தக் கேள்விகளேயாகும்.

இவற்றிற்கு சொன்ன பதில்களைப் பற்றி பின்னால் எழுதப்படும்.

(8ம் பக்கத்தொடர்ச்சி)

யெல்லம் நான் தாட்சண்யமின்றி எனது இடக்க சம்பந்தமாக அவரின் நடவடிக்கைகள் பிடித்தமில்லாதபோது எதிர்த்துத்தான் வந்திருக்கிறேன். நான் அவர்களுடைய தேசத்தை களங்கம்செய்கிறவனல்ல.

பெண்கள் சமஉரிமை.

நமது சுயமரியாதை இயக்கத்தில் இன்னொரு முக்கியமான கொள்கை இருக்கிறது. அதுதான் பெண்கள் உரிமையைப்பற்றியது. பெண்களெல்லாரும் ஆண்களைப்போலவே சம உரிமைகளை உடையவர்களாக இருக்கவேண்டுமென்று நாம் சொல்லுகிறோம்.

தீண்டாமை

தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் காங்கிரஸ்தான் அதிகாரி என்ற சொல்லத்தக்கு காங்கிரஸ்காரர்கள் முன்வருகிறார்கள். கடந்த சில மாட்களாகப் பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கின்ற விஷயங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறவர்கள், வட்டமேஜை மகாநாட்டில் காந்தியாரானவர் எப்படி ஒருநாளுக்கொருதரம் முன்னுக்குப்பின் முரணாய் வார்த்தைகளைப் பேசிக்கொண்டு வருகிறார் என்பதைக்காணலாம். திரு காந்தியாரவர் எவ்வளவுக்குத்தனது சூழ்ச்சியையும் தந்திரத்தையும் காட்டிக்கொண்டு வருகிறார் என்பதையெல்லாம் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். எப்படியெல்லாம் மக்களிடையில் அவருடைய பணவசூல் வேலை நடக்கிறது? எவ்வளவு பணம் எந்தெந்த வழியில் வசூலாகின்றது? இதற்கிடையிலிருந்தெல்லாம் மக்கள் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்றே சொல்லுகிறேன். இத்துடன் நான் என் முகவுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

ஈரோட்டில் ஜமால்மகமது

சண்முகம் செட்டியார் அத்தகாரி செட்டியார் தண்ணீர் தொட்டி திறப்பு.

6—10—31 தேதி மாலை 6 மணிக்கு ஈரோடு கடைவீதி பவானி ரோட் காவேரி ரோட ஜங்ஷனில் ஈரோடு பிரபல விபசாரியும் கவுன்சிலருமான திருவாளர் M. S. முத்துகருப்பஞ்செட்டியார் அவர்கள் தமது காலம் சென்ற தகப்பனார் மு. சண்முகம் செட்டியார அவர்கள் பேரால் ஒரு நிறபதகப்பனர் அத்தகாரி செட்டியார் அவர்களால் ஒரு அலங்காரமான தண்ணீர் தொட்டிஒட்டி அதை சென்னை பிரபல தோல் விபசாரி ஜனாப் M. ஜமால்முகம்மது சாயபு அவர்களைக்கொண்டு திறப்புவிழாவாற்றினர். அந்த சமயம் அழகிய பெரிய பந்தல் போடப்பட்டிருந்தது சுமார் 1500 பேர் வரையில் உள்ளூர்பிரமுகர்களும் விபசாரிகளும் விஜயம்செய்திருந்தார்கள். சென்னை பிரபல தோல் விபசாரிகள் விஜயம் செய்திருந்தார்கள். டிப்டி கலக்டர் ஜனாப் ஜிண்டா சாயபு அவர்களை இவ் விழாவுக்கு தலைமை வகிக்கும்படி சேர்மன்ஜனாப் ஷேக்தாவுத்சாயபு அவர்கள் பிரேரேபித்தார். பிறகு ஜனாப் ஜமால்மகம்மதுசாயபு அவர்களுக்கு ஈரோடு வர்த்தகசங்கத்தார், சுதேசி ஜவுளிசங்கத்தார், சாராப்புக்கடை சங்கத்தார், குமாஸ்தாசங்கத்தார், சுன்னத்ஜமாயித்தார்முதலிபலசங்கத்தார்கள் வரவேற்புப் பத்திரங்கள் படித்துக் கொடுத்தார்கள். பெண்கள்வரவேற்புப்பாட்டுபாடினார்கள். திரு வாளர் ஈ. வெ. இராமசாமி E. S. கணபதி அப்பர், T. M. நாகம்மாச்சாரியார் ஆகியவர்கள்களுஞ்சென்றபெரியார்களான மு. சண்முகம்செட்டியார் அத்தகாரிசெட்டியார் ஆகியவர்களின் பெருமையையும், திரு. M.S. முத்துகருப்பஞ்செட்டியாரின் மாது கலாசேவையையும்பற்றி புகழ்ந்துபேசியதுடன் ஜனாப் ஜமால் முகம்மது சாயபு M. L. A. அவர்களின் பெருமையையும் பேசினார்கள்.

பிறகு ஜனாப் ஜி ஜமால்மகம்மது அவர்கள் நாணயமாற்று, பொருளாதாரம், பாங்கிவியாபாரம் ஆகியவைகளைப் பற்றி பேசி தண்ணீர் தொட்டி தர்மத்தின் பெருமையை எடுத்துச்சொல்லி தண்ணீர் குழாயை திறந்துவைத்தார். தலைமை வகித்த டிப்டி கலக்டர் ஜனாப் ஜிண்டா சாயபு அவர்கள் ஜனாப் ஜமால் மகம்மது அவர்களையும் திரு முத்துகருப்பஞ்செட்டியார் தர்மத்தையும் புகழ்ந்துபேசினர். திரு. முத்துகருப்பஞ் செட்டியார் உபசாரம் கூறினர். உள்ளூர் சேர்மேன் ஜனாப் கா. அ. ஷேக்தாவுத் சாயபு அவர்கள் ஜனாப் ஜமால் முகம்மது அவர்களுக்கு எல்லோரையும் அறிமுகம் செய்துவைத்தார். பிறகு மகாநாடுகடந்தது. கனவான்கள் பலருக்கு மாலையிடப்பட்டு விழா இரவு எட்டு மணிக்கு இனிது நிறைவேறிற்று.

(17ம் பக்கத்தொடர்ச்சி)

டபிளியு. பி. ஏ. சௌந்திரபாண்டியன், எல். முருகப்பா, முனிசிபல்சேர்மன் குமாரசாமி செட்டியார், மைஸ்சேர்மன் பார்ஸ்டர் கே. சுப்பிரமணியம், பாஜி

சேர்மன் ஷேக்பரீது மரைக்காயர், வி.பி கோவிந்தசாமி பிள்ளை, வி பி. முருகையா பிள்ளை, வி.பி. நடராஜ பிள்ளை, எம். ஜி. ஆர். மாணிக்கம் பிள்ளை, எ.கே.ஜ்.எ.மொய்தின் மரைக்காயர், பச்சைமுத்து நாடார், நாகரெத்தின முதலியார் முனிசிபல் கவுன்சிலர், தங்கவேல் முதலியார், சொக்கலிங்க முதலியார், கே.வி.அழகர்சாமி எ.கே.கோபால்சாமி பிள்ளை. சின்னப்ப முதலியார், கே.வி.விஜயராகவலு நாயுடு, சூரியமூர்த்தி பி.எ.பி.எல், தில்லை செட்டியார், கே.எ.பி.விஸ்வநாதம், சி.நடராஜன், எஸ்.எம்.முருகையா, கே. ராமையா, எஸ்.வி.லிங்கம், எண். பி. காளியப்பன், செல்லப்பா, இராபசாமி, கேசவலு, ராம.மு. ராம.சுப்பையா, முத்துகிருஷ்ணன், எ. பொன்னம்மலனார், கண்டனூர் முத்தையா, சாமி. சிதம்பரனார், இரங்கநாதன், முசிரி கந்தசாமி, சாமிநாதன் நாகூர்சூரியமூர்த்தி, அமைமைநாதன், எஸ். பி.கிருஷ்ணன், நீடாமங்கலம்சோமசுந்திரம், டி.சிவஞானம், தூரைசாமி, ஜி. முருகேசம் திருமதிகள் ஈரோடு எஸ்.ஆர்.கண்ணம்மாள் சுப.விசாலாக்ஷி, சுலோசனா, மிஸஸ் ஆருமுகம். மிஸஸ் காளியப்பன், மாயவரம் முத்துலெட்சுமி, ஆகியவர்களும், மற்றும் எராளமான நண்பர்கள், ஆண்களும் பெண்களுமாக சுமார் 5000 ஜனங்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள்.

மகாநாடு ஆரம்பம்.

மேடையில் தலைவர்வந்து அமர்ந்ததும் ஆதிதிராவிட வாலிபர்களும், சிறுகுழந்தைகளும், சிறு பெண்களுமாக 30 பேர்கள்வந்துவரவேற்புபாட்டுபாடினார்கள். பிறகு சங்கீத கருவியுடன் பாடினார்கள். பிறகு திருவாளர்கள் சாமிநாதன், அம்மை நாதன் முதலியவர்கள் சமதர்மப்பாடல்கள் பாடினார்கள். மற்றும் சடகுப்புரட்டுகள், பார்ப்பன காங்கிரசின் வெட்டவெளிச்சப்பாட்டுகள் காதுக்கினியதும் மனதைக்கவர்வதுமான வர்ணமெட்டுகளால் பாடினார்கள்.

பிறகு வரவேற்புத்தலைவர் எம்.கே, குப்புசாமி அவர்கள் சகோதரி விசாலாட்சி அம்மாள் அவர்களை மகாநாட்டைத்துவக்கும்படி கேட்டுக்கொண்டார். அவ்வம்மையார் ஒரு அருமையான உபன்யாசத்தை வெகு கெம்பீரமாகச் செய்து மகாநாட்டைத் துவக்கியதாக விளம்பரப்படுத்தினார். (அவ்வுபன்யாசம் சென்றவாரம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.)

பிறகு வரவேற்புத்தலைவர் திரு. குப்புசாமி சுருக்கமாக அழகிய மொழிகளும் ஆழ்ந்த கருத்துக்களும் கொண்ட ஒரு சிறு உபன்யாசம்செய்தார்.

வரவேற்புத் தலைவர் தோழர் எம். கே. குப்புசாமி அவர்களின் சொற்பொழிவு பின் வருமாறு:—

அன்புமிகுந்த தமிழ்நாயின் மக்களுக்களே!

நாங்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி நீங்கள் அனைவரும் இக்கு ஒன்று கூடியதற்கு மனமகிழ்ச்சியுடன் நான் உங்களுக்கு வந்தனம் செய்கின்றேன்.

நம்மை நாமே தாழ்த்திக் கொள்வது தான் நமது துரபாக்கியத்துக்கு அடிப்படை யென்பதை உணர்ந்து நம் தன் மதிப்புடன் இன்புற்று வாழ விரும்புதல், பிசகென்று மனிதத்தன்மை பொருந்தியவர்கள் சொல்லமாட்டார்கள். நாம் பெண்களுக்கு சொத்துரிமை கொடுத்து நமது பெண்களை சுயேச்சை ஞானமும்வீரமும்பொருந்தியதாய்மார்கள் ஆக்கவிரும்புகிறோம். தன்மதிப்பையும் பொருளையும் இழக்கும்படி செய்கிறதும் நமக்கு விளங்காததுமான கலியாணச்சடங்கு கருமாதிச்சடங்கு முதலான பலவிதச் சடங்குகளை விட்டொழிக்க வேண்டியதாயிருக்கிறது. பலவித தோத்திரத்தால் கடவுளை ஏமாற்றி வசப்படுத்தி பலனடைய முடியாதென்பதை நம்புகிறோம். பிறப்பால் உயர்வு தாழ்வு என்று சொல்லி, மனிதரை மனிதர் ஏமாற்றி உயிர் வளர்ப்பது உலக வாழ்வுக்குப்பொருந்தாக் கொள்கை என்றும், அதனால் தான் நம் நாட்டின் விவசாயம், கைத்தொழில் முதலானவைகள் விருத்தியடையாமல் போகிறதென்பதை உணர்கிறோம். அன்பே கடவுள் என்றும் நமக்குள் அன்பைப் பெருக்கி ஒற்றுமையுடன் வாழ்வதற்காகவே நமது முன்னோர்கள் கோவில், குளம், சத்திரம் முதலானவைகளை ஏற்படுத்தினார்கள். ஆனால் நாம் வேதத்தை ஆதாரமாய்க்கொண்ட இந்து மதத்தை தழுவியதினால் இந்து மதக் கொள்கைப்படி நமது பெண்கள் சொத்துரிமையற்று, சுயேச்சையற்று மூடத் தாய்மார்களாய் இருக்கும்படி ஆகிவிட்டது. நீதிமன்றங்களில்வாச்சு விவகாரங்கள் அதிகரித்து வீண் செலவுகளுக்கு ஆளாகிறோம். சாதிப் பிரிவுகள் ஏற்பட்டு தமிழர்கள் எல்லோரும் ஈன்காவது சாதியார் என்று ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. மத அதிகாரங்க வெல்லாம் முதல் சாதியாரென்று சொல்லிக் கொள்பவர்கள் கையகப்படலாயிற்று. அவர்கள் சொற்படி நமக்கு விளங்காத பலவித சடங்குகளை நாம் செய்ய வேண்டியதாயிற்று. மத அதிகாரிகளுக்கு நாம் காட்ட வேண்டிய அபிமானத்தால் நமது தரும சொத்துகளின் பலன்களை அவர்களே அனுபவிக்கும்படி நேர்ந்ததுடன் நாளடைவில் தமிழ் நாட்டின் அரசியல் உரிமைகளும், அவ்வினத்தார்களைகையாகிக் கொண்டே வருகிறது. வேதம் நமது தாய் மொழியில் இல்லை. வேதத்தை வாசித்து ஆராய்ந்தறிந்த தமிழர்களே இல்லை என்று சொல்லலாம். நமக்குத் தெரியாத வேதத்தையும், சாஸ்திரத்தையும் நாம் ஒப்புக் கொண்டதன் பலன் தான் நாம் சயமரியாதையிழந்து கஷ்டப்பட வேண்டியதாயிருப்பதால், நாம் சுயமரியாதையுடன் வாழவிரும்பினால் தமிழர்களெல்லாம் வேதம், சாஸ்திரம்முதலானவைகளை ஒப்புக் கொண்ட இந்துக்களல்லவென்று நாம் விலகிக் கொள்வது தான் தகுதி என்று தோன்றுகிறது. ஆனால் இங்கு கூடி இருக்கும் நமதியக்கத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் நமது இயக்கத்தை வலுப்படுத்துவதற்கு அவசியமானவற்றை கலந்தாலோசித்து முடிவு செய்து அதை வழக்கத்திற்கு கொண்டு வருவதற்கு எற்ற முயற்சிகளை செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிறகு தலைவரை பிரேரேபிக்கப் பட்டது.பிரேரேபித்தவர் திரு. எம். கே. குப்புசாமி, அமோதித்தவர்கள் டி. பி. ஆறுமுகம் செ. முருகப்பர் ஈ. வெ. ராமசாமி முதலியவர்கள் பெருத்த கரகோஷத்துடனும், பாண்டியனுக்கு ஜே எனுகிற கோஷத்துடனும் திரு. சௌந்திர பாண்டியன் தலைமை ஸ்தானத்தில் அமர்ந்தார். அமர்ந்த வுடன் தலைவருக்கு நாகை சுயமரியாதை சங்கம், கூத்தூர் வைக்கம் வீரர் வாசகசாலை தேசபக்தர் சமாஜம், மருத்துவசங்கம், ஆதிதிராவிட சங்கம் ஆகியவைகளும், திரு. ஈ.வெ. இராமசாமிக்கு ஆதிதிராவிட சங்கம், மருத்துவசங்கம சலவைத்தொழிலாளர் சங்கம் ஆகியவைகளும். திருமதி விசாலாட்சி அம்மைக்கு நாகை சுயமரியாதை சங்கத்தாராலும் பல உபசாரப் பத்திரங்கள் தனித்தனியே வாசித்துக் கொடுக்கப் பட்டன. மற்றும் பல வகுப்புகளால் பெயர்கள்சொல்லி மாலைகளும் போடப்பட்டன. இவைகள் நடந்த உடன் தலைவரும் மற்ற வாகளும் சாப்பாட்டுக்காக தற்சமயம் மகாநாட்டை ஒத்தி வைத்து 3 மணிக்கு கூட்டுவதாகவும், அப்போது தலைமை உரை நிகழ்த்துவதாகவும், உபசாரப் பத்திரங்களுக்கு பதில்கூறுவதாகவும் சொல்லி விட்டார். பிறகு சிலர்பாடினார்கள். மகாநாடு சாப்பாட்டிற்குக் கலைந்தது.

பிற்பகல் மகாநாடு.

3-10-31 தேதி பிற்பகல் 3 மணிக்கு மகாநாடு மீண்டும் ஆரம்பிக்கப் பட்டது. பாட்டுகள் பாடப்பட்டன. பிறகு தலைவர் திரு. சௌந்திரபாண்டியம் அவர்கள் தமது தலைமை சொற்பொழிவை நிகழ்த்தினார். (அது மற்றொரு) பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

மறுநாள்.

4-10-31 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மகாநாடு தலைவர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் கூடைபெற்றது. அதுபோது சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (தீர்மானங்களும், தலைவரின்முடிவுரையும் அடுத்தவாரம்வெளிவரும்)

——

திரு. ஈ. வெ. இராமசாமி அவர்களின் கும்பகோணத்தின் நடவடிக்கைகள் அடுத்தவாரம் வெளிவரும்.

விளம்பரம்.

திருப்பூர் மு. மு. கோர்ட்டு.

1931. வரு I. A. No. 1424
1930. வரு O S. No. 228.
1931. வரு I. A. No. 814.

ராமசாமிக் கவுண்டன்—வாதி

பல்லடம் தாலூகா மண்ணரை கிராமம் மஜரா பாரப்பாளையத்திலிருக்கும் சுக்காக் கவுண்டன் மகன் முத்துச்சாமி கவுண்டன்—5-ம் பிரதிவாதி.

ஷை நெம்பரில் இதன் மூலியமாய் தெரியபடுத்துவதாவது:—

ஷை நெம்பரில் வாதிக்கு கிடைத்த அடமான டிக்ரியின் பேரில் பைனல் டிக்ரி கிடைக்கவேணுமாய் ஷை I. A. 814—31ல மனுக்கொடுத்து அதன் பேரில் நோட்டீஸ் வாய்தா 17-10-31 தேதி போட்டிருக்கிறது. அன்றைய தினம் ஏதாவது ஆக்ஷேபணை இருந்தால் தெரிவித்துக்கொள்ளவேண்டியது தவறினால் ஷை நம்பரில் ஒரு தகுதியாய் தீர்மானம் செய்துவிடுவார்கள் என்கிற விபரம் இதன் மூலியமாய் அரியவும்.

G. ஏசுரத்தினம் B. A., B. L.,
வாதி, வக்கீல்.

திருப்பூர், 9-10-31

விளம்பரம்.

திருப்பூர் மு. மு. கோர்ட்டு.

1931 வரு S. C. No. 176.

அவனாசி தாலூகா சேவூரிலிருக்கும ராமகிருஷ்ணையக்கன் மகன் ரா. கருப்பணையக்கன்—வாதி

ஈரோடுதாலூகா ஈரோட்டில கிரக்கார வீதியிலிருக்கும் பழனிக்கவுண்டன் மகன் தேவணகவுண்டன் 1. ஷை பூரிலிருக்கும் ஷை 1ம் பிரதிவாதியின் பெண் ஜாதி கருணையக்காள் 2. பிரதிவாதிகள் இதன் மூலமாய் தெரியப்படுத்துவதாவது:—

ஷை நம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் பிராமிசரி நோட்டுப்படி அசல் வட்டி உள்பட ரூபாய் 57—3—0 மும கோர்ட்டு செலவும் கிடைக்க வேணுமாய் தாவா செய்து அது கடைசியாக 20-10-31தேதி வாய்தா போடப்பட்டிருக்கின்றது. அன்றைய தினம்ஏதாவது ஆட்சேபணை இருந்தால்தெரிவித்துக்கொள்ளவேண்டியது. தவறினால் ஷை நம்பரில் ஒரு தகுதியாய் தீர்மானம்செய்துவிடுவார்கள் என்கிற விபரம் இதனால் அறியவும்.

G. ஏசுரத்தினம், B. A. B. L.,
வாதி வக்கீல்,

திருப்பூர் 9-10-31,

(6ம் பக்கத்தொடர்ச்சி)

விதம் எண்ணு அறிவுள்ள மக்கள் கூற மாட்டார். அது போன்றது தான் விவாக விடுதலைச் சட்டமும். ஒரு தேசத்தில் தீய சட்டம் இருப்பின் மற்றொன்றில் நல்லதொரு சட்டம் வழங்கி வருகின்றது. வேண்டுமெனின் நாம் பிறரிடம் காணும் குற்றங்களை நீக்கி, நல்லதொரு விவாகரத்துச் சட்டம் கொள்ளலாம். ஆகவே இரண்டாவது கருத்தும் உண்மையற்றதாகுமெனக்கண்டோம்.

அமெரிக்கா தேசத்தில்வழங்கி வரும் விவாக ரத்துச் சட்டங்களைப் பற்றியும், அவைகளால் விளைகின்றன என்று சொல்லப்படும் தீமைகள் நம் தேசத்தில் விளைய இடமின்மையைப் பற்றியும் கூறுவதற்கு முன்னர் ஐரோப்பாவிலுள்ள பல தேசங்களில் வழங்கி வரும் விவாக ரத்துச்சட்டங்களைப் பற்றி வெகு சுருக்கமாய்க் காண்போம். சீர்திருத்தத்திற்குப் (The reformation) பின்னர் அதற்கு முன் வழங்கி வந்த மணவிடுபடாமை என்னும் கொள்கை நீங்கியதுமன்றி மதத்திற்கும், மணத்திற்கும் யாதொரு சம்பந்தமும இல்லை என்றும் மக்கள் உணரவாரம்பித்து விட்டனர். ஆதலால் பொதுவாக ஜர்மனி, சுவிஜர்லாண்டு, ஹாலண்டு, டென்மார்க், ஸ்வீடன், நார்வே முதலிய தேசங்களில்இருதம்பதிகளி யாரேனும ஒருவர சோரம செய்தாலும், அவர்கள தம் மணத்தை ரத்து செய்து கொள்ளலாம். ரோமன் கத்தோலிய மதத்தின் தேசமாகிய பிரான்சில் மணத்தின் தெய்வீகத்தன்மைக் கொள்கை 1789ஆம் ஆண்டில் நடந்த பெரும் புரட்சி (French Revolution) வரையிலும தலை யேங்கிவந்தது. அதன்பின்னர் 1792வது ஆண்டில் அளிக்கப்பட்ட விவாகச் சுதந்திரத்தின் காரணமாகவும், விவாஹரத்துச் சுதந்திரத்தின் காரணமாகவும 1797வது வருடத்தில் ஏற்பட்ட விவாஹ விடுதலைகளின் தொகை அவ்வாண்டு நடாத்தப்பட்ட விவாகங்களைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாயிருந்தன. மீண்டும் இத்தகைய தீவிரச்சுதந்திர நிலைமை மாறி, 1884வது வருடம் விவாஹரத்துச்சட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதன்படி இருதம்பதிகளில் எவரேனும் ஒருவர் சோரம் செய்யினும், எவரேனும் ஒருவர் பெருங்குற்றம் சாட்டப்பட்டுத் தண்டனையளிக்கப்படினும் அவர்களது மணத்தை ரத்து செய்யத் தகுதியுடையதாகும். இதுமட்டுமன்றி சட்டவிலக்கிலால் நீக்கப்பட்டிருந்த தம்பதிகளும் மூன்று வருடங்கள் கடந்தபின் தம் மணத்தை ரத்து செய்தும் கொள்ளலாம். பெல்ஜியத்தின் விவாகரத்துச்சட்டமும் இதே போன்றது ஆகும். ஆஸ்திரியா ஹங்கேரி, முதலிய தேசங்களின் சட்டங்கள் சோரம், தண்டனை, தனியேவிட்டு ஓடிப்போதல், கொடூர நடத்தை ஆகிய இக்காரணங்களுக்காக விவாக ரத்தையளிக்கின்றன.

இனி இங்கிலாந்திலிருக்கும் விவாஹ ரத்தைப்பற்றியும் சுருக்கமாககாணுதல் இன்றியமையாததாகும். நீண்டகாலமாக, இங்கிலாந்தில் இரு தம்பதிகள் தம் விவாகத்தை ரத்து செய்ய கொள்ள விரும்பின் அது ஒரு பெரிய காரியமாகவேதான் இருந்து வந்தது. ஒரு சாதாரணமான மசோதாவை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு பணச் செலவும், காலதாமதமும் பிடிக்குமோ, அவ்வளவும் ஒரு விவாக ரத்துப் பிரேரேபணைக்கு அவசியமாயிருந்தது. அது பிரபுக்கள் சபையிலும், காமன்ஸ் சபையிலும இரண்டிலும் நிறைவேறவேண்டியிருந்தது. ஆகவே இவ்வாறு இரு தமபதிகள் தம் மணத்தை ரத்து செய்து கொள்ளுதல மிகவும் கஷ்டமானதால், இது சிற்சில பிரபுக்களுக்கும், பணக்காரர்களுக்குமே இயன்றதாய் இருந்து வந்தது. இவ்விதக் குறையைத் தீர்க்கும் பொருட்டு 1857வது வருடம் விவாக ரத்து கமிஷன் (Divorce Commission) ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் அறிக்கையின்படி சுமார் 1858வது ஆண்டில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதுதான் இப்பொழுது ஏறக்குறைய வழங்கப்பட்டுவருகின்றது. அதன்படி மனைவியின் சோரத்தினகாரணத்தாலும, கணவனின சோரத்தோடு, கொடூர நடத்தையின் காரணத்தாலும், இன்னும்இரண்டொரு காரணத்தாலும் ஒரு விவாகத்தை ரத்து செய்ய முடியும். இச்சட்டத்தைக் குறித்து இன்னும் விவாதம் நடந்து கொண்டு வருகின்றது. இப்பொழுது வழங்கப்பட்டு வரும் இச்சட்டம போதிய அளவு சௌகரியம் அளிக்கக்கூடியதாயில்லை என்று கிளர்ச்சி செய்து வருகின்றார் ஒரு கூட்டத்தார். அதை வழக்கமபோல் மறுக்கவும் சிலர் தயாராயிருக்கின்றார்கள். மற்றும்சிலர் விவாகரத்தை கூடவேகூடாது என்றும் கூறுகின்றார்கள். லார்ட் ஹ்யூ செஸில் (Lord Hugh Cecil) என்பவர் சிலநாட்களுக்கு முனனர், மணமானது தெய்வீகத்தன்மையுடையதால் அதை மதமாயினும், மனிதராயினும், குருக்கலாயினும் ஒருவராலும் ரத்து செய்ய முடியாதென்றும், அதை ரத்து செய்தல் அவசிய மென்று புலப்பட்டாலும்கூட அவ்வாறு செய்தல் இயலாதென்றும் கூறியுள்ளார். இதற்கு மாறுன அபிப்பிராயம் பலர் கொண்டுள்ளார். விவாஹரத்தின் அவசியத்தைப் பற்றியுமேயன்றி, அச்சட்டத்தை இன்னும் கெடுப்சியாக்க வேண்டுமென்றும் காலஞசென்ற லார்ட்பர்க்கன்ஹெட் (Lord Birkenhead) அவர்களும், இப்போதுள்ள லார்டு பக்மாஸ்டர் (Lord Buckmaster) முதலியவர்களும் அபிபிராயப் படுகின்றனர். டாக்டர் கேய்க்கி காப் (Dr. Geikie Coff) என்னும் மதாச்சாரியர்ஒருவர (December 1928) இங்கிலீஷ் ரிவ்யூ (The English Review) என்னும் பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகின்றார். "அவசரமாக நடத்தப்பட்ட ஒரு திருமணமானது பாழ்பட்டு விடுமேல மறுமுறை அத்தம்பதிகள் நல்லதொரு கலியாணம் செய்துகொள்ளக் கட்டாயம் ஒரு வழி இருத்தல் வேண்டும். அனுபவத்தின்படி நாம் காண்பதென்னவென்றால் இரண்டாவது கலியாணமானது முதல் மணத்தைவிடப் பன்மடங்கு சுகமும், மேன்மையும் பயப்பதாகவே விருக்கின்றது. பயங்காளிகள், பலர் ஒழுக்கக்குறைவு, மறுமணம் புரிதலினால் ஏற்பட்டுவிடுமே என்று அஞ்சவேண்டிய அவசியமில்லை. ஸ்காத்லாண்டு தேசத்திலும், ஸ்காண்டினேவியன் தேசங்களிலும் வழங்கிவந்த மணரத்துச் சட்டங்களின் சரித்திரத்தைப்பார்க்கின், 'கடவுளின்' அருளாட்சியைக் கவனியாமலும், வரும் காலத்திலும், மக்களின் உடன்பிறந்த நல்லியற்கையிலும் நம்பிக்கையற்றும், எனைய மக்களை வீணுக்கு கட்டுப்படுத்த விரும்பும் வீணர்களின் வார்த்தைகளின் பொய் தெள்ளிதின் விளங்கும். கேடுற்ற மணம் ஒருக்காலும் உண்மையான மணமாகாது. கத்தோலியர்களது மணத்தின் கெடுதிகளைச் சற்று நோக்கின், அம்மணம் சற்றேனும் ஆன்மாவின் சுதந்திரத்திற்கு ஒட்டியதாக வில்லாதிருப்பதன்னியில், மனிதனின் கல்மனத்திற்கே ஒரு சாட்சியாய் இருப்பதுபோல் விளங்குகின்றது." இக்கூற்றை மேலுட்டாரே யன்றி, நம் நாட்டு மகனரும் விசேஷமாகக் கண்டு கருதவேண்டியது மிகவும் அவசியமாகும்.

(தொடரும்)

பார்ப்பனீயமே!

பாழடைக.

இனம்!

பரிசுத்தியுங்கள்! முந்துங்கள்!!!

மகா சந்தனாதி தைலம்.

மூலா பலகீனம், நரம்புத்தளர்ச்சியால் ஏற்பட்ட தலைநோய், கை, கால், கண் எரிச்சல் வெள்ளை முழுத்து, பித்தத்தினால் உண்டாகும் துர்சொப்பனங்கள், காதுநோய், மணடைகுத்து வெட்டைகுடி முதலிய எல்லா வியாதிகளையும் கண்டித்து தேகத்திற்கு குளிர்ச்சியைக் கொடுத்து போஷிக்கிறது. தபால் செலவிற்காக ஐந்து ஒரு அணா ஸ்டாம்புகள் அனுப்புபவர்களுக்கு ஒரு பாட்டில தைலம் இலவமாய் அனுப்பப்படும். கல்லவாசனை. கூந்தல் செழிப்பாகவும், நீளமாகவும் வளரும். குறிப்பு:-சிலோன், மலாய காட்டுவாசிகள் ஐந்து இண்டர்நேஷனல்கூப்பன் போஸ்டாபீஸில்வாங்கி அனுப்பவும்.

எஸ். நாராயணசாமி,
பெரும்புகலூர்-திருவாலூர் போஸ்டு
தஞ்சாவூர்.

தாதி தேவை.

சுமார் 30 வயதிற்குட்பட்டவரும், சுகாதார முறையும், சிசுக்களை வளர்த்து அனுபோகமும் தெரிந்திருக்கவேண்டும். சாப்பாட்டுடன் சம்பளமும் தரப்படும், விவாதிற்குஎழுதவும்.

Y X
C/o குடி அரசு ஈரோடு.

அயர்லாண்ட் ஆஸ்பத்திரி குதிரைப்பந்தய லாட்டரி

மான்செஸ்டர் நவம்பர் ஹேண்டிகேப் (நவம்பர் 28—1931)

1-வது பிரைஸ் 30000-பவுன்கள் 2-வது பிரைஸ் 15000-பவுன்கள், 3-வது பிரைஸ் 10000-பவுன்கள் வேறு 200 பிரைஸ்களுமுண்டு. டிக்கட் 1-க்கு ரூ. 7—8—0 டிக்கட்டுக்கு முன்பணத்துடன் முந்துங்கள்!

டிக்கட் கிடைக்குமிடம்:—

எஸ். கே. வரதராஜுலு, எஜண்ட், திருச்செங்கோடு S.I.

(5ம் பக்கத்தொடர்ச்சி)

வழியில் தணிந்து இறங்கியதானது அவர்களுக்கு அதிக உதவி செய்தது.

ஆனால்,

பழைய காலத்து தொழிலாளிகளோ தங்களுடையபழைமையான ஆயுதங்களையும், முறைகளையும் மாற்றிக்கொள்ளத்தயங்கியதினாலேயே அவர்கள் மூன்னேற முடியாமல் கூடிணதிசையை அடைந்துகொண்டு வந்தார்கள்.

தொழில் முறைகளில் புரட்சி செய்து கொண்டும், சமூக வாழ்க்கையில் சதா மாறுதல் ஏற்படுத்திக்கொண்டும், அடிக்கடிகிளர்ச்சி செய்து கொண்டும் இருப்பதே முதலாளி ஆதிக்க காலத்திற்கும், அதற்கு முன்னால் உள்ள பழைய காலத்திற்கும் உள்ள முக்கிய வித்தியாசமாகும்.

வெகுகாலமாய் இருந்து வந்த பற்றுதல்களையும், மிகப்பழைமையான எண்ணங்களையும், பழக்கவழக்கங்களையும் அடியோடு ஒழிக்கத்துணிந்து, புதிய எண்ணங்களையும், பழக்கங்களையும் தாராளமாய்க்கைப்பற்றி அவைகளையும் நிரந்தரமான தென்பதாகக் கருதிவிடாதவாதமாயிசாமல், அவசியப்பட்டால் உடனேமாற்றி, மேலும் புதிய முறைகளைக் கைகொள்ளத்தக்கதான மாறுதலுக்கு தயாராய் இருக்கும் தன்மையையே கடமையாக அனுசரிக்கப்பட்டு வர முதலாளித் தன்மை தாராளமாய் வழிகாட்டி விட்டது.

ஆதியில் மிகவும் திடமானதாகவும், நிரந்தரமானதாகவும் இருக்கவேண்டியது என்று செய்யப்பட்டிருந்த பழைய ஏற்பாடுகள் எல்லாம் நாளாவட்டத்தில் தானாகவே மாறுதலடையவும், மிகவும் தெய்வீகமான தென்று கருதப்பட்டுவந்த தெல்லாம் பரிகாசத்திற்கும், அலக்ஷியத்திற்கும் உள்ளாகவுமாகிவருவதை மனிதன் கண்ணால்கண்ட பிறகு தன்னுடைய பழையமூட எண்ணங்களையெல்லாமவிட்டுவிட்டு, உண்மையில் தனதுடையவாழ்க்கைக்குசம்பந்தமான விஷயங்கள்எலவை எவை என்பதைக்கண்டு பிடிக்கவும், தன்னுடன் வாழ்கின்றமற்றவர்களுக்கும் தனக்கும் ஏற்பட்டிருக்கும் சம்பந்தத்தின் உண்மை என்ன என்பதையும் கண்டு கொள்ளை முடிந்தது.

வியாபாரத்துறையில்

முதலாளிகள் தங்களுடைய தொழிலபிவிருத்தியின் மூலம் உற்பத்தியான அதிகப்படியான சாமான்களை விற்பனை செய்வதற்காக உலகத்திலுள்ள சந்தை பொருந்துகளிலெல்லாம் அலைந்து திரியுமபடியாக நேரிட்டு விட்டது.

தூர தேசங்களில் எப்படியாவது உள்ளே புகுவதற்கு பாடுபடுவதும், பிறகு அங்கேயேநிறுத்துவதற்கு இடம் தேடுவதும், பிறகு அந்த தேசத்திற்கும், தன்னுடைய சொந்த நாட்டிற்கும் வியாபார சம்பந்தத்தை உண்டாக்கப் பாடுபடுவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு தேசத்தாருக்கும் ஏற்பட்டிருந்த சுதேசி உணர்ச்சியை அடியோடு ஒழித்து விட்டார்கள். அதாவது, தங்கள்தேசத்தில் செய்யப்பட்ட சாமான்களை தங்கள் தேசத்திலேயே தான் விற்பனை செய்யப்படவேண்டும் என்கின்ற எண்ணத்தை மாற்றி, வெளி நாடுகளுக்கு கொண்டு போய் விற்கவும், அந்தவிற்பனைப்பணத்தைக் கொண்டு வெளிநாட்டுச் சரசமான சாமான்களை வாங்கி வந்து, தங்கள் நாட்டில் விற்று லாபம் சம்பாதிக்கவும் தைரியமாய் முன் வந்தார்கள். இதன் மூலம் ஒவ்வொரு தேசத்திலும் தொழில் முறையில் அடிவிழுந்து ஸ்தம்பிக்கப்பட்டு வந்ததான தேசிய உணர்ச்சியானது தானாகவே மறைய ஆரம்பித்தது.

பழைமையில் பற்றுவைத்திருந்த பிடிவாதக்காரர்களெல்லாரும் இதைக்கண்டு தகுந்தபடி வேண்டியவர்களானார்கள். முதலாளித்துவம்வெகு வேகத்தில் பழைமையான தொழில் முறைகள் மறையவும், புதிய தொழில்முறைகள் தலைதூக்கிக்கொண்டு வரும்படியும் செய்து விட்டது.

புதிய தொழில் முறைகளில் உற்பத்திசெய்யப்பட்டதால், அவைகளைச் செய்யவேண்டிய சாமான்களுக்கு அவசியமான மூலச்சரக்குகள் அந்தந்த நாடுகளில் கிடைக்காமல் உலகத்திலுள்ள பல வேறு மூலை முடுக்குகளிலும்சென்று தேடி, அங்கு இருந்து கொண்டு வரப்பட்டன. அப்படிக்கொண்டு வரப்பட்ட மூலச்சரக்குகளால் உற்பத்தி செய்யப்படும் சாமான்களும் வெகுதூர தேசங்களுக்குக் கொண்டு போய் விற்கவும் படுகின்றன. (தொடரும்.)

[4ம் பக்கத்தொடர்ச்சி]

க்கப்பட்ட குழந்தைகள், வளர்ந்து, பெரியவர்களாகி, பொதுஜன வாழ்க்கையிலீடுபடும்பொழுது, தகைளுடைய மத சம்பந்தமான உண்மைகளைத் தங்களைப் போல் மற்றவர்களும் நம்பி, அவைகளைப் பின்பற்றுதபோதிலும்கூட, மரியாதையும் யோக்கியதையும் ஒழுக்கமுமுள்ள ஆடவர்களும், பெண்களும் உலகத்திலிருப்பதை அவர்கள் அறிந்தும், தெரிந்தும் கொள்ளுகின்றார்கள். என்றாலும் அறியாமையின் படியை, அவர்களையுமறியாமலவர்களுடைய மனதில் பதியவைக்கப்பட்டிருந்த கருத்துகளின் பலாபலங்கள் அவர்களுடைய மனதைவிட்டகலாமல், அங்கேயேதான் இருந்துவருகின்றன.அதையால். இவ்வளவுவரையிலாகிலும், மக்களைப் பரந்த நோக்கத்துடனும், இருபையுடனும், காருண்யத்துடனும் சமமாகப்பாவிப்பதற்கு மதசம்பந்தமான கல்வியானது இவர்களுக்கு ஓர் பெரிய முட்டுக்கட்டையாயிருந்து கொண்டு வரப்படுகின்றதென்றேற்படுகின்றது.

மதக்கோட்பாட்டின்படி ஒரு சக்கிலியைத் (ஒதுக்கப்பட்ட சமூகத்தினரில் ஓர் பிரிவு) தீண்டினால். அதனால் தான் தீட்டுப்பட்டு விடுவதாகவும், அத்தீட்டை நீக்க வேண்டுமானால் கண்டிப்பாய் அது ஸ்நானம் செய்து தான் தீர வேண்டுமென்றும் ஓர் உயர்ந்த ஜாதிக் குழந்தைக்கு இளமையிலேயே கற்றுக்கொடுத்துவிட்டோமேயானால், அக்குழந்தையானது தன்னுடைய பிற்கால வாழ்க்கையில் ஒரு சக்கிலியும் தன்னைப்போலுள்ள ஒரு மனிதஜன்மந்தானெனக்கருதுவதற்கு, அதற்கு அவசியமற்ற மனோதைரியமும், மனோவிசாலமும் இல்லாமலே போய்விடுகின்றது. அக்குழந்தையானது ஒரு சமயம் தன்னுடைய பேரறிவினாலும் தீர்மானமாகவும் தன்னைப்போலவே மனிதஜன்மம் தானெனக்கருதி, அவர்களையும் மக்களென நினைக்கக்கூடிய நிலைமையேற்பட்ட போதிலும்கூட, அக்குழந்தையானது இளமையிருக்கும் பொழுது அதனுடைய மனதில் ஆழமாகவும், அழுத்தந்திருத்தமாகவும் பதியவைக்கப் பட்டிருந்த போதனைகளால் ஒருசமயம் அதுதன்னையுமறியாமல் பாதிக்கப்படக்கூடும். ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை நடத்தும் முறைதான் ஹிந்துமதத்தால் மக்களுக்கேற்பட்டதென்பதெல்லாம் ஒரு சமயம் தலை சிறந்து, முதன்மையாய் விளங்கக்கூடியதாயிருக்கலாம். ஆகையினால் மதசம்பந்தமான போதனைமுறையானது கல்வித்துறையில் புகுத்தப்படுமேயானால், அப்பொழுது தீண்டாமை யொழிப்பதென்னும் விஷயமானது இன்னும் அளவுக்கு மீறிப் பதினமடங்குக்கஷ்டமாகி விடக்கூடும்.

ஹிந்து மதமானது, இஸ்லாம் மதத்தைப்போலாவது, அல்லது கிறிஸ்துமதத்தைப்போலாவது எனைய மதங்களை ஒழுங்காகதடுத்துப்புறத்தில் கொண்டே வந்திருப்பதாக உரைத்துவிட முடியாதென்பதுஉண்மையாகவே இருக்கலாம். ஒருவன் தன்னுடைய சொந்த மதத்திலேயே இருந்து மரணமடைவதை விரும்பவேண்டுமென நமக்குப் பகவத்கீதை போதிக்கின்றது. ஆனால் எனைய மதங்களிலோ அம்மரணத்திற்காகப்பயந்து கொண்டிருக்கவேண்டுமெனவே போதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையினாலே, ஹிந்து மதமானது அன்னிய மதஸ்தர்களை தன்னுடன் சேர்த்துக்கொள்ளவில்லை. மேலும், ஹிந்துமதமானது ஒருவித சகிப்புத்தன்மைக்குப் பெயர்பெற்றதாகவும் விளங்குகின்றது. ஆனால், இத்தகைய சகிப்புத்தன்மையால் மக்களுக்கொருவித நன்மையுமடைவதற்கில்லை. எனெனில் சகிப்புத்தன்மையானது, அன்னிய மதஸ்தர்களிடம் நிகேதிதப்பான்மையுடனிருக்கவேண்டுமென்கிற யெண்ணத்துடனிருப்பதாகக் காணப்படவில்லை. ஆனால், அது ஒரு மானசீகமான செயலற்ற அல்லது எதிர்ப்பத்தன்மையற்ற சகிப்புத்தன்மையேயாகும். இவ்வித சகிப்புத்தன்மையினால் அவர்கள் மற்றவர்களுடன் சேராமல், அவர்களிடமிருந்து பிரிந்து தூரமாகவும், பிரத்தியேகமாகவும் வாழ்ந்து கொண்டு வருவதுமல்லாமல், அந்த நிலைமையிலேயே அவர்கள் திருப்தியடைந்து ஜீவியத்தை நடாத்திக்கொண்டு வருவதுடன், பிறரையும் அவ்வாறே ஜீவித்துக்கொண்டு வரவும் அனுமதிக்கின்றார்கள். பொதுவாகவே, இவ்விதமான சகிப்புத்தன்மையானது, அவர்களுடைய மனதில் தாங்கள் முன் ஜன்மத்தில் ஏதோ புண்ணியம் செய்து இந்த ஜன்மத்தில் ஹிந்துவாக ஜனித்திருப்பதாலும், ஆகையால் இதரமதங்களை விடத் தாங்களே உயர்ந்தவர்களென நினைக்கும்படியான எண்ணங்களுடன் கலந்தேயிருக்கின்றது. ஆகையால், இவர்கள் அன்னியர்களைக் கண்டால், அவர்களைக் கேவலமாகவே நினைப்பதற்கு இடமேற்படுகின்றது. மக்கள் யாவரும் தங்களைப்போல் மனிதர்கள் தானெனவும் தங்களுடைய சகோதரர்கள் தானெனவும், தங்களுக்கிருப்பதுபோன்ற சுக துக்கங்களையுடையவர்களுக்கு முண்டுமெனவும் பார்க்கநோக்கத்துடன் யெண்ணக்கூடிய மனிதர்கள்தான் இக்காலத்தில் இன்றியமையாதவர்களாகக் காணப்படுகின்றார்கள். இத்தகைய பரோபகார யெண்ணம் அவசரமாகவே வளர்ந்துவரவேண்டி வருமாகில், அப்பொழுது மக்கள் ஜாதி, மதமாகியவைகளில் எல்லைகளைக்கடந்து, தற்செயலாகப்பிறவியின்காரணமாகத் தோன்றிய வித்தியாசங்களையறவே யொழித்து, அவர்களுடைய சமூகப் பழக்கவழக்கங்களையுமறந்து, உண்மையாகவும், சயமாகவுமிருக்கக்கூடிய எல்லாமக்களையும் நேசிப்பார்கள். கல்வித்துறையில் மதசம்பந்தமான கல்வியை நாம் புகுத்திவிட்டோமேயானால் மக்களுக்கு இயல்பாகிரியான பரந்த நோக்கமும், விரிந்த அறிவும், பரோபகார யெண்ணமும் தோன்றுவதற்கு இடமேற்படாதென்று கருதியேதான் கல்வித்துறையில் அந்த மதசம்பந்த

ரோஜா முத்தையா
ச்சி நூலக அறக்கட்டளை

மானக்கல்வியைப் புகுத்தப்படக்கூடாதென அறிஞர்கள் பலர் உறுதியாக எதிர்த்துப் போராடிக்கொண்டு வருகின்றார்கள்

சென்ற முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்குள்ளாக, இந்தியாவின் பல்வேறு பாகங்களில் அயலவர்களும் அரசாங்கங்களுடையமதத்திற்குறித்தான அறிவை வளர்ப்பதற்காக மதபோத சம்பந்தமான பல ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டதென்பதைக் குறித்துகாம் மேலே எடுத்துரைத்திருக்கின்றோம். அப்படியிருந்தபோதிலும்கூட, இத்தகைய கல்வி ஸ்தாபனங்களில் வித்தியாப்பியாசம் பெற்ற மக்களுக்கும், உலகசம்பந்தமான கல்வியறிவை ஏனைய கல்வி ஸ்தாபனங்களில் வித்தியாப்பியாசம் பெற்ற மக்களுக்கும் எதாவது வித்தியாசம் காணப்படுகின்றதா? என்பதை கண்டுபிடிப்பதே கஷ்டமாகக் காணப்படுகின்றது. மத சம்பந்தமான பழக்க வழக்கங்களோ ஒவ்வொரு வரும் கணமாடபாகவே அனுசரித்துத்தான் தீரவேண்டுமென்றுக் கூறப்படுவதானது பொதுவிலாகவே, மாணாக்கர்களால் ஒருவித சுமையாகவே கருதப்பட்டுவருவதுண்டு. சில சமயங்களில் விளையாட்டாகவும், கேலியாகவும் பரிகாசமாகவுங்கூட கருதப்பட்டுவருகின்றது. மேலும் இத்தகைய வெளிப்பகட்டுகளைப் பார்வையிடுவோர், அவ்விதஸ்தாபனங்களைப் பார்ப்பதற்காக சுற்றியும் அலைந்துகொண்டு செல்லப்படுமபொழுது பயபக்தியுடன் டாக்கக்கூடிய யாதொன்றையும் அங்கே காணுவதும் கிடையாது. பிரார்த்தனை அல்லது ஜபம் செயயும் ஹாலும் அவருக்குக் காண்பிக்கப்படலாம். ஆனால் அவ்விடங்களில் கலந்து கொள்ளும் படியான மாணாக்கர்களின் முகங்களோ உற்றுநோக்கினால் அவர்களுடையமுகங்களில் குறிப்பிடத்தக்கதான யாதாவதொரு கம்பீரமான தோற்றங்களைக் காண்பதே அரிதாகும்.

இதகிலாந்திலுள்ள பழைமையென சர்வகலாசாலைகளில் சிறு ஆலயங்களோ நியமிக்கவில்லை” என்பதான நடவடிக்கையையே, இங்கு நடைபெறும் சம்வங்கள் பொறுத்திருக்கின்றது. ஆனால் நியமாகிய ஒழுங்காக நடைபெறும் மதசம்பந்தமான அனுஷ்டானங்கள் யாவும் கலாசாலை டத்தில் அனுபோகத்திலுள்ளபோதில் யாதொரு விதமான அறிவையோ அல்லது ஒழுக்கத்தையோ புகட்டியிருப்பதாகத்தென்படவே யில்லை. ஆகையினால், சிறு ஆலயங்களிருக்கவேண்டுமென்கின்ற நிர்ப்பந்தமானது அநேக கலாசாலைகளில் ஒழிக்கப்பட்டாய் விட்டது. இம்முறையேதான், இன்னும் சிறிது காட்களுக்குள் இந்தியாவில்ஸ்தாபிக்கப்பட்டிருக்குப்பல்வேறு மதங்களின் ஸ்தாபனங்களிலும் அனுஷ்டிக்கபடுமென்று எதிர்பார்க்கின்றோம்.

எவ்வாறிருந்தபோதிலும் குறித்த ஓர் மதத்தைச்சேர்ந்த ஓர் வகுப்பினரோ, அல்லது குறிதததஸ்தாபனத்தில் கல்வி கற்கும்ஒரு ஜாதியைச்சேர்ந்த சிறுவர்களோ, மற்றவர்களிடமிருந்து வேறுப்பிரிந்து தனித்து வாசம் செய்வதால் அவர்களிடமியற்கையாகவே எத்தனைய நிலைமையிலும் மத போத சம்பந்தமான உணர்ச்சிகள்வளர்த்து கொண்டுவருவதற்கு இடமேற்படுகின்றது. அம்மாணாக்கர்களோ, இதர மதத்தைச் சார்ந்தவர்களுடன் நெருங்கிப்பழகுவதுமில்லை. இவ்விதநிலைமையேற்படுவதால் மக்களை ஜனவரையும சமமாக பாவித்துநடக்கவேண்டுமென்கிற பரந்த நோக்கமானது அவர்களால் அழிக்கப்படுகின்றது. மேலும், ஓர்மாதிரியான ஸ்தாபனங்களில் வாசித்துக்கொண்டுவரும் மாணவர்கள் இதர ஸ்தாபனமாணாக்கர்களுடன் தமாஷாக ஏதாவிலுமவிளையாட நேர்ந்த போதிலுங்கூட, அங்கும் அடிக்கடி அத்மதபோத சம்பந்தமான உணர்ச்சியேற்பட்டு விடுகின்றது. மேலும், ஜாதிவித்தியாசங்களைக் கொண்டாலது அல்லது மத போத சம்பந்தமான உணர்ச்சிகளைக் கொண்டாலது இரண்டு பாடங்களிலும் வாசித்துக்கொண்டு வரும் மாணாக்கர்கள் விளையாட்டுப் பாதயாகன் விளையாட நேர்ந்தால் சில சமயங்களில் ஆபத்தான நிலைமையும் ஏற்பட்டு விடுகின்றது.

இதயாதி காரணங்களால் பல்வேறு மதங்களைச் சார்ந்தவாகளனைவரும் இணைந்து மேலான அறிவுடனும், ஞானத்துடனும் விசேஷத்துடனும் நடந்து கொள்ள வேண்டுமென்பதே தற்கால நிலைமையில் இந்தியாவுக்கு அதி முக்கியமாய் வேண்டற்பாலதாய் இருந்து வருகிறது இம்மாதிரியான நிலைமையை நாம் அடைய வேண்டுமானால் மக்கள் யாவரும் ஒருவரை ஒருவர் இன்னொரு தாராளமாகவும் மனோநிதமாகவும் நடந்து கொள்ளுதற்கான அனேக சந்தர்ப்பங்களை நாம் ஏற்படுத்த வேண்டிய இன்றியமையாததாகின்றது. மாணாக்கர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து ஒரே பள்ளிக்கூடத்திலும், ஒரே விதமான உபாத்தியாயர்களால் உபதேசிக்கப்பட்டும், அவர்களாலேயே கண்காணிக்கப்பட்டும் வருவதுடன் மாணவர்களும் பொதுவாக விளையாடுமிடங்களில் அவர்களுக்கேற்படும் மனோநிலை சம்பந்தத்தாலும், மேலும் கலாசாலைகளிலுள்ள இதர சங்கங்களின் மூலமாகவுமே தான் நாம் கோரிய பலனையடைய முடியுமேயல்லாமல் வேறு எத்தனைய முயற்சிகளும் நாம் கோரிய பலனை யளிக்கமாட்டாது. பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் எப்படிப்பட்ட நிலைமையிலும், எல்லாவித சந்தர்ப்பங்களிலும் நீடித்து நிற்கக் கூடியதனவும், அந்த நிலைமையானது தான் யாதொரு விதமானப் பிரதிபிரயோஜனத்தையும் கருதாமலேற்படக் கூடிய நிலைமையென்பதையும் யாவரும் செவ்வனே அறிவார்கள். ஆனால், இந்தியாவிலேற்பட்டுள்ள பல்வேறு மதங்களின் ஆதாரமாகக் கொண்ட கல்வி நிலையங்கள், இந்தியாவில் வாசம் செய்துவரும் எண்ணிறந்த ஜாதியைச்சார்ந்த பாமர மக்களுக்கு இக்கலையை நிலைநிற்க பாண்மையும், ஒற்றுமையும், சம்பந்தமும் அவர்களுக்குள் ஏற்படக்கூடிய எல்லாவித சந்தர்ப்பங்களையும் நாசமாக்கிக்கொண்டே வருகின்றன.

கல்வித்துறையில் உலக சம்பந்தமானக் கல்வியும், அறிவுந்தான்மாணாக்கர்களுக்குப் போதிக்கப்படவேண்டுமென்கின்ற அவசியத்தைக்குறித்து நாம் அழுத்தந் திருத்தமாக கூறிக்கொண்டு வந்தபோதிலும்கூட, மாணாக்கர்களின் அறிவு நாலாவித வழிகளிலும் விர்த்தியாகக்கூடிய விஷயங்களும், அவர்களுடைய கல்வியுடன் சேர்த்து அவர்களுக்குப் போதிக்கப்படவேண்டுமென்கின்ற நோக்கினையும் மாணாக்கர்களுக்கேற்படுத்தப்படவேண்டுமென்கின்ற பாட நிர்ணயத்தில் அவசியம் சேர்க்கப்படவேண்டுமென்பதையும் நாம் கருதுகின்றோம். குறிப்பாக விஞ்ஞான சம்பந்தமானது இன்னும் விஸ்வாசமாணாக்கர்களுக்குப் போதிக்கப்படவேண்டுமென்கின்ற விஷயமானது அவர்களுக்கேற்படுத்தப்படவேண்டுமென்கின்ற பாட நிர்ணய ஸ்கீமாவில் தலைமையாகச் சேர்க்கவேண்டுமென நாம் நினைக்கின்றோம். அவ்வாறிருந்தால் மட்டுந்தான் மாணாக்கர்களினுடைய நியாயமான ஆரோக்கியமான மனோசக்தியானது அபிவிருத்தியடைந்து இயற்கையினுலகில் எல்லாப்பக்கங்களிலும் நீதியும், அமைதியும் குடிகொண்டு உலாவுவதை உணர்ந்தும் அறிந்தும்கொள்ளக்கூடியதாயிருக்கும் விஞ்ஞான சாஸ்திரத்தின் ஆராய்ச்சியும், அறிவும்தான்--ஜீவ சாஸ்திரத்தினுடையவும், ஜனசமூகத்தைப்பற்றிய சாஸ்திரத்தினுடையவும், ஆராய்ச்சியும், அறிவுமுட்படவேதான்--மூடப்பழக்க வழக்கங்களால் மாணாக்கர்களுக்கேற்படிருக்கும் நம்பிக்கையை தகர்த்தெரிபக்கூடிய வல்லமையாய்த்தது. இயற்கையின் சட்டதிட்டங்களையும், குணநியமங்களையும் ஆதியிலிருந்தோர் அறிந்துகொள்ளாதிருந்த காரணத்தாலேயேதான் அவ்விதமூடநம்பிக்கைகள் அவர்களுக்கேற்பட்டது. நமது கண்களுக்கு முன்பாக நடந்துவரக்கூடிய சம்பவங்களால் நமக்கேற்படும் அனுபோகங்களுக்கெதிரிடையாக, வேறு யாராவதொருவர் நமக்கு என்னதானுரைத்த போதிலுங்கூட, அவர் எவ்வளவு பெரிய மனிதராயிருந்தபோதிலுங்கூட, அவர்களுடைய வார்த்தைகளைப் பொருட்படுத்தக் கூடாதென்கின்றஉண்மையை அப்பொழுதுதான் அவர்கள் அறிந்து கொள்ளுவார்கள். உலகமானது பொதுவாகவே எப்பொழுதும் முனனேறியேதான் சென்றுகொண்டிருக்கின்றதென்பதையும், ஆதிகாலத்தில் நடந்ததாகக்கூறப்படும் வாதமானங்கள் யாவும் கல்பனாசக்தியின் பயனாக ஏற்பட்ட கட்டுக்கதைகள்தானென்பதையும் அவர்கள் அப்பொழுதுதான் அறிந்து கொள்ளக்கூடும். இவைகளுக்கெல்லாம் மேலாக, தங்களுடைய அறிவு, ஆராய்ச்சி, நீதி, சன்மார்க்கமாகியவைகளினுடைய உதவியாலும், ஒத்தாசையாலும் தங்களால் செய்யப்பட்டக்காரியங்கள் யாவும், தங்களுக்கு முன் சென்றவர்களால் செய்து கொண்டு வரப்பட்டக்காரியங்களின் பலன்தானுதுமென இவர்களால் எவ்வாறு கருதப்பட்டு வரப்படுகின்றதோ, அவ்வாறேதான் இவர்களால் செய்யப்பட்டுவரும் காரியங்கள் எவ்வளவுதான் குறைந்த அளவிலிருந்த போதிலும்கூட, தங்களுக்குப் பிறகு பாரம்பரியமாய் வரக்கூடியமக்களுக்கு உதவியையளிக்கக்கூடுமென்பதையும் அப்பொழுதுதான் அவர்கள் உணர்ந்தவர்களாவார்கள்.

நாம் எப்படியிருந்தால் இரகஷிக்கப்படுவோம், என்ன செய்து கொண்டு வந்தால் முக்தியடைவோம், எப்படி நடந்துகொண்டு வந்தால் மோகூமடைவோமென்பதைப்பற்றிப் போதிக்கும்படியான கல்வி அறிவானது—அவ்வறிவானது எவ்வளவுதான் பெருமை வாய்ந்திருப்பதாகக்கூறப்பட்டு வந்த போதிலும் சரியே, அதைப்பற்றி நாம் சிறிதும் கவலைப்படாமலும், அவ்வறிவை மாணாக்கர்களுக்கு போதியாமலிருந்தும் வரவேண்டும். மேலும், அவர்களது கடமைகளைக்குறித்தும், மற்றவர்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைக் குறித்தும் அவர்களது மனதில் நன்குபதியுமபடி செய்வதற்கு வல்லமையுள்ளதான கல்வி அறிவு ஒன்றை மட்டுந்தான் மாணாக்கர்களுக்குப் போதிக்கப்படவேண்டும் கலவிதத்துறையில் இவ்விஷயங்கள்தான் சாலவும் சிறந்த முறைமையுமாகும்.

குறிப்பு:— டாக்டர் ஆர். பி. பராஞ்பே அவர்களால் எழுதப்பட்ட “கல்வியும், மதமும்” என்னும் கட்டுரை இத்துடன் முடிவுற்றது. ப-ர்.

பார்ப்பன உத்தியோகஸ்தரது ஜாதித்திமிர்.

கன்யாகுமரி.

பத்மனுபபுரம் டிவிஷன் அலில் டன்டும் அடிஷனல் ஜில்லா மாஜில் ஸ்ட்ரேட்டுமான திரு. எம். எச். வீராராகவ அய்யர் ஜாபத்தி அலுவலாக அன்று கன்னியாகுமரி முகாம் செய்திருந்தார். அன்று விசாரணைக்கு வைத்திருக்கும் வழக்குகளிலுள்ள கக்ஷிகள் பலர் காலை 10 மணி தொட்டே சத்திரத்தில் கூட ஆரம்பித்தார்கள். ரெவன்யூ உத்தியோகஸ்தர் பலர் சத்திரத்திலுள்ள பல அறைகளில் சுறுசுறுப்பாக வேலைபார்த்துக் கொண்டிருந்தனர். கோர்ட் சாதாரணமாகக் கூடுகிற அறையில் வழக்கம்போல எலலா ஏற்பாடுகளுமாயி

ருந்தனர். கடைசியாக மாஜில்ஜிரேட் அவர்களும் வந்தார்கள். திடீரென்று "இன்று தொட்டு கச்சேரி விசாரணை அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் நடைபெறும்" என்று ஆணை பிறப்பித்தார். போலீசாரும், சேவகர்களும் மேஜைகளையும், நாற்காலிகளையும் கணப்பொழுதில் சத்திரத்திலிருந்து அப்புறப்படுத்தினார்கள். கச்சேரியும் சிறிதும் இடவசதியில்லாத போலீஸ் ஸ்டேஷனில் நடந்தது.

திரு. அய்யருக்கு முன்னிருந்த மாஜில்ஜிரேட்டுகள் எழுந்தவுடனேயே சத்திரத்திலேயே தங்கள் கோர்ட்டை நடத்தி வந்தார்கள். இன்னும் 1 மணி வரையிலும் சத்திரத்திலேதான் கோர்ட் நடைபெறுமென்று எல்லோரும் எண்ணியிருந்தனர். எனவே இந்த விசேஷமான மாற்றத்திற்குக்காரணமே தெரியுமிருக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு கோர்ட்டிற்கு வந்திருந்த சில கண்பர்களிடம் விசாரித்துப்பார்த்தேன். உண்மைதெரிந்தது. ஜாதித்திமிர் நிறைந்த இந்தப்பார்ப்பன உத்தியோகஸ்தருக்கு எல்லாவகுப்பினரும் சத்திரத்தில் வருவது பிடிக்கவில்லை. சத்திரம் ஜாதிஹிந்துக்களுடைய உபயோகத்திற்கென்று கட்டப்பட்டிருக்கிறதாம். (ஆனால் சத்திரத்திலேயே தொங்கவிடப்படடிருக்கும் அறிக்கையில் இந்து யாத்திரீகர்களுடைய அவசியத்திற்கென்றுதான வரையப்பட்டிருக்கிறது. ஜாதி இந்துக்களுக்கென்றிலை) தாம் கச்சேரி நடத்துவதால் எல்லோருக்கும் பிரவேசனம் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுமேயென்று மனம் புழுங்கினர். தம் கச்சேரியை போலீஸ் ஸ்டேஷனுக்கு மாற்றிவிட்டார். இன்று இங்கு வந்திருந்த வக்கீல் நண்பரொருவரிடமிருந்த இது சம்பந்தமாக இனறொரு செய்தி கிடைத்தது-மேறறு சுதேசிகளும் சத்தியாக்கிரக கேஸ்கள் விசாரணைக்கு வந்தன. சர்க்கார்தரப்பு வக்கீல் திரு. சக்கரபாணி அய்யர் அவர்கள்வராததால் நாளது புட்டாதி 10ந் தேதிக்கு ஒத்தி போடப்பட்டன. கோர்ட்டில் வைத்து பிரதிவாதிகளிடம் மாஜில்ஸ்ரேட் 10ந் தேதி கண்னியாகுமரி சத்திரத்தில விசாரணை நடைபெறுமென்றார். கொஞ்சம் பொறுத்து நம்மவரனறு "சத்திரத்தில் எல்லோருக்கும் பிரவேசனம இல்லையே! எதனாலும் கண்னியாகுமரிக்கு வாருங்கள். போலீஸ் ஸ்டேஷனிலாவதுகச்சேரிகூடலாம்" என்று சொன்னாராம.

நேற்று தாம செய்து கொண்ட முடிவைத் தான் திரு. அய்யர் நிறைவேறறி வைத்திருக்கிறார். இந்த நாகரீக காலத்திலும திரு. அய்யர் புறிதாகத் தீண்டாதாருக்குத் துரோகம் செய்ய முனைகிறார். இவருக்கு முன்வேலை பார்த்த மாஜில்ஸ்ரேட்டுகள் திரு. பத்மனுபன் தம்பி, திரு ஆண்டிப பிள்ளை முதலியவர்கள் இந்தசசத்திரத்திலேயே கச்சேரி நடத்தி வந்திருக்கிறார்கள். வழக்கத்திற்கு மாறாக நடக்க மாட்டோமென்று கொஞ்சிய தட்மஸ் கொள்ளுமே காரசாரத்தினல் உத்தியோகஸ்தர் தீண்டாதாருடைய உரிமைக்கு உலைவைக்க மட்டும் வழக்கத்தை மீறத் தயங்குவதில்லை யென்னும் உண்மையை நிரூபித்து விட்டார்.

தாழ்த்தப் பட்ட வகுப்பினர் திருவாங்கூரில் இத்தகைய மனப்பான்மையை உடைய பார்ப்பன உத்தியோகஸ்தர்களிடம் எவ்வளவு நியாயம் கிடைத்துக் கொள்ளக் கூடுமென்பதை வாசகர்களே அறிந்து கொள்ளவேண்டுமென செய்வார்களாக. ஏழைகள் சொல் அம்பலமேறுவதில்லை. திரு. விகாகூ" அரசாங்கம் பார்ப்பனரது அம்பலம்.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

மில்லாத உடைகளை நிறுத்திவிட வேண்டும். அது சிக்கனமாகும்.

காப்பி அவசியமில்லை தேகபலத்திற்கு கெடுதலான பாகங்கள் நிறைந்திருக்கிறதேயல்லாமல் கனுகூல மானவைகளொன்றுமில்லை என்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். காப்பியை விட்டுவிடுவதே சிக்கனத்திற்கொருமார்க்கம். காப்பியை விட்டுவிட்டால் பொருள் செலவும், வேலைத்தொந்தரவும் நீங்குவதுமல்லாமல், தேக பாதுகாப்பும் இதனாலேயுண்டாகின்றது. பால்பரம் காப்பிக்கொடுக்கும் மரியாதையை நிறுத்தி,நீச்சத்தண்ணியோ, மோரோ, வெந்நீரோ கொடுப்பதாக ஏற்படுத்திகொண்டால் அநேக கஷ்டங்களிலிருந்துவிடுபடலாம். அதுவுமல்லாமல் காப்பி நமது நிலக்காட்டில் விளையக்கூடியதுமல்ல. டீலையையும்,வெள்ளைக்காரர்களையும் நம்பியேயாகவேண்டும். காப்பிக்கடையினால்தான் மேகவியாதியும், இருமல்வியாதியும் நமது நாட்டில் இத்தனைபரவியிருப்பதற்கு. பள்ளிக்குப்போகும் மாணக்கர்கள் பழைய காலத்தைசிலமயக்கூட ஆகாரமான ஊன பச்சைக்கடலையும் தேவகாத்தண்டையும்தின்று கசரத் செய்யடும், பள்ளிக்குப்போகையில சாப்பிட்டுவிட்டு போகட்டும். அதுபோலவே கச்சேரிக்குபோகிறவர்களும கொஞ்சம் பசசைக்கடலையும் சிறுதேங்காய்தண்டும் தினறு மூன்று நாளைகு மைல் நடந்து கச்சேரி நேரத்திற்கு சாப்பிட்டுவிடுபோகட்டும். மூன்று மணிக்கு ஒரு டம்ளர் மோர் குடிக்கட்டும. குடித்தனக்காரர் வீட்டிலோ தேவாமிர்தமபோன்ற தயிர் மோரிருக்கிறது. அரிசி, கம்பு, ராகி முதலிய சாதத்திலிட்டுக்கரைத்து இரண்டு டம்ளர் குடிக்கட்டும். இந்த ஆகாரகளைவிட காபபியிலும், கராபூந்தியிலும் தேக போஷிப்புண்டா? டாக்டர்களால் சொல்லப்படும் லவட்டமின் என்கிற சத்பொருளுண்டா? இல்லை. குழந்தைகளுக்கு இட்டலி தோசை கொடுத்தாலும கரப்பி கொடுக்காமல் மோரே, தணணீரோ கொடுக்கள் எல்லா தானிபத்தைவிட அரியே பலத்தில் குறைந்தது. ஒரு வேளை அதைவிட்டு மற்றதானியங்கள் உண்பதைப்பழக்கிக்கொள்வது விசேடம். பயறுவித வகைகள், பொரியல் முதலியவைகளை குறைத்துக்கொள்ளவேண்டுமென்றுநினையாமல்கீரை,தட்டைப்பயர், மொச்சை, கடலை முதலியவைகளின்னப்படுத்தாமல் சாப்பிடுவது சிக்கனத்திற்குஉகந்தமாகும், தேகக்கிற்கு நலவுமாகும். பேகிலிருவேளை ரோகி மூன்றுவேளை' என்றபடி ஒருவேளை மோர்விட்டு கரைத்தும், ஒருவேளை மொச்சை தட்டையுடனும் சாப்பிடும் கிராமவாசிகள் தேகபுஷ்டியுடனும், நோவில்லாமலுமேயிருக்கிறார்கள். சோடா எதற்காகவும் குடிக்கவேண்டும்? சுத்துச்சுவிதமணீரும ஜீரகத்தண்ணீரும தீர்க்காதவாயுவை சோடா தீர்த்துவிடுமா? கரப்பிக்கண்டவுடன் சோடாவைச்சேகரம் செய்யாதவர்களிலை என்றே சொல்லவேண்டும். கரப்பிலைச்சோடா தீர்த்துவிடுமா? சோடா வைக்குலிடத்தில் சுத்துத்தண்ணீரைவைத்தால் சோடா அதற்கு ஈடாகாது. டாக்டர்களிடம் சோடா குடிக்கலாமாவென்றால் குடிக்கலாமென்கிறார்கள். ஆனாலதுவும் ஆறுதான் பழகவேண்டும். சோடா குடிக்காமல் சுகுத்தண்ணீரோ, வெண்ணீரோ குடித்தால் வியாதிபோகாது. சோடா வேகுடித்தால்தான் வியாதிபோகுமென்று எந்த டாக்டர்களும் சொல்லமாட்டார்கள். சாதாரணமான சுரத்திலும், தேகத்தில் சிறு உபாதைகளுக்கும் உடனே டாக்டர்களை எனகூப்பிடவேண்டும்? டாக்டர் கர் வந்தவுடனே இன்ன சுரம்தான் என்று தீர்மானப்படுத்தி விடுகிறார்களா? இல்லை. அவர்கள் மூன்றுநாள் போகவேண்டுமென்கிறார்கள் முதல் முதல் வியளகை அரைத்துக்கொடுத்து புளுங்கலரிசி களிபோல் கொடுப்பது எந்த சுரத்திற்கும் கெடுதல் அல்ல. தானாகப்போகும் சுரத்திற்கும், மனதின் பிரமைக்கும் இங்கிலீஷ் மருந்தாகும் ஒப்பாதமுண்டா? பல்லுகுப்பவுடரும், பிசினும், புருசும் அவசியமா? உமிகரியாலும், தென்னோயாகிலும் மாவிலையிலும பல்விளகும மலையாளிகளின பல் வெள்ளையாகயிருக்கவில்லையா? டல்வின்மேலின பளபளப்பு அத்தினையேகதநில் அளிந்துபோகக்கூடியதல்லவே. சோப்பில்லாமல் நமது தேகத்தைச்சுத்தமாகவைத்திருக்கமுடியாத? சீயக்காய், இலுப்பைப்பட்டி, பச்சைப்பயிர், அரப்பு முதலியவைகளினால் போகமுடியாத நமது தேக அழுக்கும், தோல் வியாதியும், தூர்நாற்றமும் சோப்பினால் போய்விடுமா? தேங்காய் எண்ணெய்க்கும,பச்சைப்பயருக்கும் முகம் பிரகாசமபடுவதுபோல சோப்பிற்குப் பிரகாசப்படுதே, பச்சைத்தண்ணீரில் குளிப்பது நல்லதென்று எல்லாரும் ஒத்துக்கொள்ளுகையில் சுடுதண்ணீர் எதற்கு? வியாதில்லாதவர்களல்லவோ சுடுதண்ணீர் சிறிது குளிரைத்தாங்கப்பயப்படுகிறவர்களிடமும சிறிது வெண்ணீரின் சுகத்தை விரும்புகிறவர்களிடமும் சிக்கனம் எப்படியாகும்? எல்லாருமே சிக்கனத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். எல்லா அரசாட்சிகளிலும் சிக்கனக்கமிட்டி ஆராய்ச்சிநடக்கிறது. நமது தேவலோகம், பிரமலோகம், மோக்ஷலோகம் இவைகளில் சிக்கனத்தை ஆலோசிக்கிறார்களோ என்னமோ நமக்குத் தெரியாது. அவர்களுக்குசிக்கனத்தை நினைக்கவேண்டிய அவசியமுமில்லை. எனனில் அவர்களெலலம் அழிர்தமுண்டவர்கள். கற்பகவிருட்சம், காமதேனு, சஞ்சீவி, பதுமநிதி முதலிய வஸ்துக்களையுடையவர்கள். ஆனதினால் அவர்களுக்கு காம கட்டும் கப்பத்தை நிறுத்திவிடுவதற்குத்தடை என்ன? குருக்கள், புரோகிதன் தெட்சணைக்குச் சப்பாட்டிலகும் கத்துகொள்ளுகிறபாடபார்கள் இவர்களுக்குக்கொடுப்பதைக் கெடுதலுவிடவேண்டுமென்பீர்களானால் குருக்கள், புரோகிதன் சமாராதனைபபார்ப்பார்கள் இவர்களெல்லாம் பிராமணர்களென்றே சொல்லுகிறார்கள்.

'பிராமண தருமம ஒழுக்கம் தவசு இந்திய நிக்ரகம் முதலியவைகளில் விளங்காத பிராமணனுல் பார்மக்கள் செய்துகொள்ளுகிறவனும், தானதருமம் வழங்குகிறவனும் கெட்டுவனேயும் செலிதது, தன் உயிலேயும்போய், நரகத்திற்குப்போவான்' என்று சொல்லியிருக்கும் சாஸ்திரத்தை மறுக்கமுடியுமோ? அப்படி மறுத்தால் பிரமலோகமும், தேவ உலகமும் இருக்கமுடியாதே. ஆனதால் விவேகக்குறைவால் கொடுத்தவரும் கடனைகளில் சிக்கனம் செய்யுங்கள். பார்மக்களுமும் ரப்பாவிலேயும் அடங்க இனியும் நாளாகும் போலவிருக்கிறது.

அறிவிப்பு.

தமிழன் பத்திரிகையில தமிழ் மகன் என்ற பெயரால சுயமரியாதைபபாடலகளை, "தமிழ்மகன் தன்மதிபபுப்பாடல்' என்ற பெயருடன் மூபபத்திரண்டு பக்கங்களுடன அழகிய கிளேஸ் காகிதத்தில் அச்சாகி வருகிறது. இதற்து நாடார்குல மித்திரன் ஆசிரியர உயர்திரு சூ ஆ முத்து நாடார் அவர்கள் முனனுரை எழுதியிருக்கிறார். இதன தனிபபிரதி விலை ஒரு அணை. சுயமரியாதை இயகத்தைப்பரப்ப ஆவல் கொண்டுள்ளவர்கள் இப்புஸ்தகத்திற்கு ஆதரவு கொடுக்குமாறு விரும்புகிறோம.

20 புத்தகம் ரூ. 1—0—0. தனிப்பிரதி வேண்டுவோர் 1½ அணை ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:—

"தமிழ் மகன்"

திரு. வி. மு. பொன்னையா

321, 322 அழகாடி, மதுரை.

எனற விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ரோஜா முத்தையா
ய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி.	...	0—8—0
மனு நீதி மருமம்	...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு.	...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு.	...	0—2—0
சோதிடப் புரட்டு.	...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு)	...	0—2—0
சுயமரியாதைப் பாடல்	...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.	...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	...	0—4—0
ஞானசூரியன்	...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்		0—4—0
ஷெ 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம்	...	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)		0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி	...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	...	0—2—0
*குறள்	...	0—8—0
* இயற்கைமதம்	...	0—8—0
* சிதம்பர ரகசியம்	...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.		0—4—0
* சுயமரியாதைத்தத்துவதீதங்கள்	...	0—4—0
* பகுத்தறிவே வீடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது]	...	0—6—0
* ஈ. வெ. இராமசாமியின் போட்டோ படம்		0—8—0
* மாதர் சுதந்திரம்.	...	0—10—0
* ஆராய்ச்சி அணிகலம்		0—12—0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட்	...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புபவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது:

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

கெந்தகமே—இந்தயுகம்.

டாக்டர் T. K. வேங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தகரசாயனம்.

(மாத்திரைரூபமாய், வெள்ளிக்கவசம்பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் தூர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-வித்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி இரணமாகி, (இரத்தம் முறிந்த சீழ்) வெளியாகும் 217 விதவெட்டை வியாதிகள், 21 விதகிரந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மர்மஸ்தான கொருக்கு, இரணம், புத்துவகைகள், தொண்டைத்தாரு, அண்டப்புத்து, பௌத்திரம், சூதகவாய்வு, உதிரவாய்வு, கூயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவிலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல் கிதந்திபும், பல சிற்றின்ப சேர்க்கையாலோ, அதிகவிசனத்தினாலோ, அகால போஜனத்தினாலோ அன்னதோஷமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாகி ஜெனிக்கும் வியாதிகளேயும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு தளர்ந்திருலோ, தளர்ச்செய்துக் கொண்டிருலோ, சுகதம் சரிவர, வெளியாகாமல், இடுப்பு, ஜப்பை, சந்துக்களிலும், ஊடிருவி, வாய்வு சம்பந்தப்பட்டவுடன் குனிய நிமிர முடியாமல், இருப்பதர்க்கு சக்தி என்பதற்கும் தலைவின் இரத்த சம்பு வழியாக தென்ற முழங்கால், முட்டி முதல் பாதம் வரை உபாதையுடன் வீக்கமும் கண்டு நடமாட சௌகரியம் கொடுக்காத இளம் பின்னை வாதங்களேயும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, தூரித ஸ்கலித, முதலிய வியாதிகளேயும் 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, நாத என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தைஊட்டி முருக்கேற்றும் வல்லமையுடைய தோழன். உன்னி குளிர (கர்ப்ப இரணங்களே ஆற்றக் கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 6—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,

(கால்ராபைரி)

கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

பி. எம். சி. லிங்கத்தின்

சுவாச காச நிவாரணி.

48-வேளை, மருந்தின் விலை 1—4—0

விபரங்களுக்கு எழுதவும்.

மருந்து கிடைக்குமிடம்:—

திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,

சேவ்வாய்பேட்டை, சேலம். தென்னிந்தியா.

மதராஸ், சோல் ஏஜண்டு:—

தாதா & Co., 52 தைனியப்ப நாயகன் தெருவு மதராஸ்

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.

இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

The Selanger Stamp Co.,
Market Street

S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.

The Central stores
81, Jalan Ibrahim,
Johore Bharu

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி சோட், சிங்கப்பூர்

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

:0:

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு,

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகி ரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதோலாந்தால் வீதி
புதுச்சேரி.

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
திருப்புத்தூர் கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
சோளார் தங்கவயல் (S. I.)

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற்கண்ட 6 9.31ந் தேதி குடி அரசில் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விரும்பும் சுயமரியாதை அன்பர்கள் மூன்று பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

100 புஸ்தகம் விலை 0-12-0

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் பூ போஸ்டில் அனுப்பப்படும்

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ்
மாதப்பத்திரிகை.
ஆண்சேந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (சுவாமி ஞானானந்த)
சி. சுவாமி வெங்கடாசலம்,
"சன்மார்க்கன்" பழனி.

சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்.

(1930ம் வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

கேத்தக பஸ்பம்.

மேககுஷ்ட ரோகத்திற்கு 52 வருடங்களாக கையாண்டுவந்தது, ஏராளமான சர்ட்டிபிக்கேட்டும், தங்கமெடல்களும் பெற்றது.

இந்த கேந்தக பஸ்பம் மஹான் ராமலிங்க சுவாமிகளால் உபதேசிக்கப்பட்டது. மேக குஷ்டரோகம், 48 நாளில் சொஸ்தமாகிவிடும். அவுஷதம் மழைகாலத்திலும், வெய்யிற்காலத்திலும் சாப்பிடலாம், அவுஷதம் சாப்பிடும் காலத்தில் எத்தொழிலும் செய்யலாம். இந்த அவுஷதத்தால் குஷ்டரோகம் தீராவிட்டால் பிறகு கடவுள்தான் தீர்க்கவேணும். இந்த அவுஷதத்தால் வியாதி தீராதென்கிற சந்தேகப்பட்டவர்கள் எக்ரிமெண்டு செய்து கொண்டால் அவுஷதம் இனாமாய் அனுப்பப்படும். கீழ்கண்ட விலாசத்திற்கு விபரம் எழுதி தெரிந்துகொள்ளவும்.

48 நாள் சாப்பிடக்கூடிய அனுபான லேகியம், பஸ்பம், தைலம். விலை. ரூபா. 20—0—0

அவுஷதத்திற்கு ஆர்டர் செய்பவர் ரோகத்தின் விபரம் கண்டு எழுதவும். எழை ஜனங்கள் நேரில் வந்தால் அவுஷதம் இனம்.

விலாசம்:—

ஆயுர்வேத வைத்திய பாஸ்கர
V. கலிவராயன்,
நிர்த்தன மங்கலம் போஸ்டு,
(வழி) சிக்கல், தஞ்சாவூர் ஜில்லா.

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அனைவர் ஆப்டோன் படங்கள், அறியகட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கினறன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணை.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணை ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டுத் தினமும் காலமலரால் வெளியிடப்பட்டது